Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 30 | 16 - 22 - செப்ரெம்பர் - 2005








## தொடரும் எழுச்சி...

## முல்லையில் திரண்ட மக்கள்

## நோர்வேயில் மாறிய அரச மாற்றம்...

# நோர்வேயில் மாறிய அரச மாற்றம்







நோர்வேயில் 169 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்ற தேர்தல் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. இதில் தொழிற்கட்சி தலைவர் கென்ஸ் டோல்டென்போர்க் இடதுசாரி கூட்டணி வெற்றிபெற்றுள்ளது. வலது சாரி அரசாங்கம் நோர்வேயை உலகில் வாழ்வதற்கு ஏற்றதான நாடாக மாற்றியுள்ள போதிலும் இம்முறை மக்கள் இடதுசாரிகள் பக்கமே வாக்களித்தனர். பொண்டொவிக்கின் அரசாங்கம் சமூக நலன்களில் அதிக அக்கறை செலுத்தாமையே தோல்விக்குக் காரணமாக அமைந்தது எனக் கூறப்படுகிறது.

வெற்றிபெற்ற தொழிற்கட்சியுடன், சோசலிச இடதுசாரியும், விவசாயக் கட்சியும் இணைந்துள்ளது. இதில் எரிக்சொல்ஹெய்ம் வெற்றிபெற்ற கூட்டணியின் முக்கியமான வர்களில் ஒருவர் எனவேதான் நோர்வேயில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம். இலங்கையில் நோர்வே வகித்த சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளர் என்ற நிலை தொடர்பில் பலரும் பலவிதமாகக் கூறிவந்த வேளையில் தங்களது நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என வெற்றி பெற்ற கூட்டணியின் முக்கிய உறுப்பினரான எரிக்சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

இதுவரை காலம் எவ்வாறு இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வே பங்காற்றி வந்ததோ அவ்வாறே இனிவரும் காலங்களில் தமது பணி தொடரும் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த நோர்வேயின் நாடாளுமன்ற தேர்தலில் எரிக்சொல்ஹெய்ம் ஆதரவு கட்சி சிவப்பு -பச்சை கட்சி 169 ஆசனங்களில் 87ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதில் தொழிலாளர் கட்சி 61 ஆசனங்களையும், சோசலிசக் கட்சி 15 ஆசனங்களையும்,சூழலியல் கட்சி 11ஆசனங்களையும் பெற்றுள்ளது. இங்கு சோசலிசக் கட்சியின் தலைவராகவும் சிறப்பு ஆலோசகராகவும் எரிக்சொல்ஹெய்ம் பணியாற்றியுள்ளார். இந்நிலையில் புதிய பிரதமராகப் பதவியேற்கப்போகும் தொழிலாளர் கட்சியின் தலைவரான நாற்பது வயதுடைய கென்ஸ் டோல் டென்போர்க் அரசாங்கத்தில் எரிக்சொல் ஹெய்ம் முக்கிய பொறுப்புக்களில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெற்றிபெற்ற இடதுசாரிகள் கட்சி அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதிலும்,மனித ஆற்றல் மேம்பாட்டிலும் தீவிர பங்காற்றுவோம் என தமது செயற்திட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் வழமைபோல் விதார் ஹெல்கீசன் தலைமையிலான குழுவினர் இலங்கையின் அமைதி முயற்சியில் தொடர்ந்தும் பணியாற்ற இருக்கின்றனர்.

தோல்வி அடைந்திருக்கும் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சியில் இருந்தபோது பிரதி வெளிவிவகார அமைச்சராக இருந்த விதார் ஹெல்கீசன் புதிய அரசாங்கம் பதவியேற்றதும் இலங்கை சமாதான முயற்சிகள் எந்த மாற்றமுமின்றி முன்னெடுக்கப்படுமென்றும் அதற்கு விதார் ஹெல்கீசன் தலைமை வகிப்பார் எனவும் இலங்கைக்கான சமாதான விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

எனவே இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு நோர்வே எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராகவே உள்ளது. ஆனால் இலங்கையின் அரசு? இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வே காட்டும் அக்கறை கூட சிறிலங்கா அரச காட்டுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் நோர்வே மாத்திரமல்ல வேறெந்த நாடும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் நடுநிலமையாகப் பணியாற்ற விரும்பினாலும் அது இலங்கையில் இருக்கின்ற இனவாதக் கட்சிகளினாலும் இனவாதிகளினாலும் அவர்களது பணிகளை ஒழுங்காக மேற்கொள்ளவிடப்போவதில்லை.

தற்போது இலங்கையில் இடம்பெறப் போகும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ஏனையஇனவாதக் கட்சிகளின் ஆதரவினைப் பெற ஏற்றுக் கொண்டிருக்கும்நிபந்தனைகளில் ஒன்று நோர்வேயின் அனுசரணை பணியினை மீள் பரிசீலணை செய்வதாகும்.

நோர்வே போன்று ஒரு நடுநிலையான நாடு இலங்கை இனப்பிரச்சினையில் நடுநிலையாளர்களாக பணியாற்றும் போது தமிழ் மக்களின் நியாயமான போராட்டமும்,அவர்கள் மேல் சிங்கள தேசம் காட்டி வந்த அடக்கு முறைகளும், வெளியுலகிற்கு தெரிந்துவிடும் என்ற நிலையில்தான் சிங்கள பேரினவாத கட்சிகளின் ஊகங்களும், ஆர்ப்பாட்டங்களும்.

எனவே நோர்வே தங்களுடைய நாட்டில் எந்த மாற்றங்களுக்கு அப்பாலும் தனது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் அனுசரணையாளர் பணியில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் இலங்கையில் இனி அதிகாரத்தைப் பிடிக்க போகின்றவர்கள் என்ன செய்வார்கள் என்பதனைப் பொறுத் திருந்துதான் பார்க்க வெண்டும்.

**தமிழ்**

# உலக ஓசோன் தினம்

## செப்ரெம்பர் 16



இன்று சர்வதேசமெங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு தினமாகும். இன்றைய உலகை அச்சுறுத்தி வரும் ஓசோன் படைச்சிதைவால் ஏற்படும் தீங்கு பற்றி இன்றைய நாளில் அறிந்துகொள்வது பொருத்தப்பாடு உடையதாகும்.

பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழும் ஒரேயொரு கோள் பூமியாகும். இந்தப் பூமியின் வளி மண்டலத்தில் உள்ள 10 KM-50KMவரையான படை மண்டலத்தில் (STRAT SPHERE) ஓசோன் ($O_3$ )வாயு செறிவாகக் காணப்படுகின்றது. இதனை ஓசோன் படலம் (OZONE LAYER) என அழைப்பர்.

சூரியனில் இருந்து புற ஊதாக் கதிர்கள் வெளி வருகின்றன. இவற்றை ULTRA VIOLET RAYS சுருக்கமாக UV கதிர்கள் என அழைக்கப்படுகிறது. இந்த வகை ஒளிக் கதிர்கள் மூன்று வகைப்படும் அவையாவன, UV-A, UV-B, UV-C ஆகியனவாகும் இவற்றுள் UV-C மிக உயரிய சக்தியுடன் செயற்படுகின்றது. இக் கதிர்கள் வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசன் வாயுவிற்கு ஏற்ற விதத்தில் மேல் வளிமண்டலத்தில் ஓசோன் வாயுவை உற்பத்தி செய்கின்றது. இங்ஙனம் உற்பத்தி செய்யப்படும் ஓசோன் படலமாகப் பரவி தாக்கத்தை ஏற்படுத்தும் கதிர்கள் பூமிக்கு வருவதனைத் தடை செய்து பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதுகாக்கும்.

மனிதனால் உற்பத்தி செய்யப்படும் சில செயற்கை இரசாயனப் பொருட்களான குளோரோ புளூரோக் காபன் (CFC), ஹேலோன் (Halon), மீதயில் புரோமைட்டு (Mebr), காபன் டெற்றா குளோரைட்டு (CTC), மீதயில் களோறோ போம் (M.C) போன்றவை மேல் வளி மண்டலத்தில் உள்ள ஓசோனோடு தாக்கம் புரிந்து ஓசோன் அணுக்கள் அழிக்கப் படுகின்றது. இங்ஙனமாக ஓசோன் அணுக்கள் குறைவதால் ஓசோன் படலத்தின் தடிப்புக் குறையும் இங்ஙனமாக ஓசோன் படலத்தின் தடிப்புக் குறைதலை ஓசோன் வாரம் (OZONE LAYER) என அழைப்பர் இவ்வாறான சிதைவு 230 இலட்சம் சதுர மைல்களை எட்டியுள்ளதாக விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தென்துருவத்திலுள்ள துவாரம் அமெரிக்கக் கண்டத்தின் அளவுக்குப் பெரிதானது. இன்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னரே சிதைவு ஏற்படுவதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இன்று இதன் தாக்கம் உச்சக் கட்டத்திற்கு வந்துள்ளது.

எனவே மேல் கூறப்பட்ட செயற்கை இரசாயனப் பதார்த்தங்களுக்கு பிரதியீட்டுப் பதார்த்தங்களைப் பாவிப்பதன் மூலம் ஓசோன் படைச் சிதைவதைத் தடுக்கமுடியும். குளிரூட்டிகள் உற்பத்தியில் CFCக்கு பதிலாக HFC பாவித்தல், தெளி பொருளாக ஐதரோகாபன் பாவித்தல், கொலோன் வகைகள் தயாரிப்பதற்கு HFC பாவித்தல், தீயணைக்கும் உபகரணங்களில் $CO_2$ வைப் பாவித்தல் போன்ற மாற்று நடவடிக்கை மூலம் இச் சிதைவை இழிவாக்கலாம்.

ஓசோன் படைச் சிதைவால் ஏற்படும் தீங்கு பற்றி அறிந்து கொள்வது பயனுடையதாகும். தோலில் புற்று நோய் ஏற்படல், கண் பார்வை குறைபாடு (கற்றாக்) பூமி வெப்படைதல் (Global warming), நிர்ப்பீடனக் குறைபாடு, சுவாச நோய்கள், DNA இல் விகார மேற்பட்டு புற்று நோய் ஏற்படல், பிலங்டன் எனப்படும் மீனின உணவுகள் அழிதல்,பூமியின் வெப்ப அதிகரிப்பால் பனிக்கட்டிகள் உருகல், கடல் மட்டம் உயருதல் போன்ற பாரதூரமான விளைவுகள் உயிரினங்களுக்கு ஏற்படுகின்றது.

எனவே இது பற்றிய அறிவுறுத்தலை உலக நாடுகளுக்கு வழங்க 1987 ஆம் ஆண்டு மொன்றியோல் ஒப்பந்தம் எனும் பெயரில் ஓசோன் படலத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் பொருட்களைத் தடை செய்தல் தொடர்பாக உலக நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. 1985 ஆம் ஆண்டு வியன்னா சம்மேளனம் உருவாக்கப்பட்டது. அதே போல் செப்ரெம்பர் 16 ஆம் இன்று உலக ஓசோன் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தி பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஆகவே இந் நாளில் அனைத்து மக்களும் ஓசோன் படையை பாதுகாக்க உறுதி பூணுவோம்.

தடுப்போம்ஓசோன் படைச் சிதைவை,
காப்போம் எம்மையும் பூமியையும்

தி. சிறிரஜீவன்,
மாணவன்,
கிளி/ இந்துக் கல்லூரி.

# பரிதாபத்துக்குரிய மகிந்த

பு.சத்தியமூர்த்தி


மிகவும் பரிதாபத்துக்குரிய நபராக இன்றைய சிறிலங்காவில் இருப்பவர் மகிந்தராஜபக்ஷவே. தன்னைத் தானே பொல்லா விலங்குகளிடம் ஒப்புவித்து விட்டு, சொந்தக் கட்சியிலிருந்தே அந்நியப்பட்டு நிற்கின்ற "பாக்கியம்" அவருக்குக் கிடைத்திருக்கிறது. எந்தக் கட்சி சார்பாக முன்னிறுத்தப்பட்டாரோ, அந்தக் கட்சியே அவர் தோற்றுப்போக வேண்டும் என்று விரும்பும் நிலை இதற்கு முன்பு சிறிலங்காவில் இருந்திருக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப் பட்ட போதே அவருக்குப் பிரச்சினைகள் தோன்றிவிட்டன. ஏனெனில், அவரது வெற்றிக்கான பரப்புரைக்குப் பொறுப் பான குழுவுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு அவருக்குக் கையளிக்கப்பட வில்லை. மாறாகக் கட்சித்தலை வர் என்ற கோதாவில் சந்திரிகா அம்மையாரே பரப்புரைக்குத் தலைமை தாங்குவார் என்று அறிக்கப் பட்டுவிட்டது.

இதிலுள்ள சுவாரஸ்யம் என்னவென றால் மகிந்தராஜபக்ஷவின் வெற்றிக்குப் பாடுபடத் தலைமையேற்ற அதே அம்மையார்தான் அதற்குச் சிலநாட் களுக்கு முன் அநுராதபுரத்தில் வைத்து மகிந்தவை கிழியோ கிழியென்று கிழித்திருந்தார். "மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பவர்கள் நாட்டுக்குத் தலைமைதாங்க முடியாது" என்று நற்சான்று வழங்கிய அம்மையார் அதேவாயுடனும் முகத்துடனும் மகிந்தவின் வெற்றிக்கான பரப்புரைக்குத் தலைமைதாங்குவது எங்கனம்?

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இன்றுள்ள பிரச்சினை என்னவெனில் அதற்குள்ள தாழ்வுச்சிக்கலாகும். சந்திரிகா அம்மையாரின் ஓய்வின் பின்னர் அவரளவுக்கு கவர்ச்சியான தலைவர் எவரும் இல்லாததாலும் முன்னிறுத்தப்படக்கூடிய தலைவர் களுக்கு ஏனைய தலைவர்கள் அனை வரையும் தலைமைதாங்கி வழிப் படுத்தும் ஆளுமையில்லாமையுமே இந்தத் தாழ்வுச்சிக்கலுக்குக் காரணமாகும்.அதனாலேதான் சந்திரிகா அம்மையாரை ஆயுட்காலத் தலைவராக சுதந்திரக்கட்சிக்கு அமர்த்தவும் ஒருயோசனை முன்வைக்கப்பட்டி ருந்தது.

இதனுடைய மறுவளம் என்ன வெனில் பதவியிலிருந்து விலகவேண் டிய நிர்ப்பந்தம் எழுந்துவிட்டபின்பும் சந்திரிகா அம்மையார் நாட்டின்மீதான அதிகாரத்தைக் கைவிட தயாரான போதும் கட்சியின் மீதான அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள துடிப்பதாகும். அதே வேளையில் அவரது இந்தப் போக்கினை நிராகரிக்கவோ எதிர்க்கவோகட்சிக்குள் போதியளவு உறுதி யற்ற போக்கையும் வெளிக்காட்டுகின் றது. இதனால் தான் மகிந்த வுக்கு 'மக்களின் பணத்தைக் கொள்ளையடித் தவர்' என நற்சான்று வழங்கிய அம்மையாரே மகிந்தவின் தேர்தல் வெற்றிக்கான பரப்புரைக்குப் பொறுப் பான குழுவுக்குத் தலைமைதாங்கு வதை அனுமதிக்க வேண்டியஅவலம் சுதந்திரக்கட்சிக்கு நேர்ந்துள்ளது.



மகிந்த செய்துகொண்டுள்ள இரண்டு தேர்தல் உடன்பாடுகளிலும் உள்ளடக்கியுள்ள சரத்துக் கள் மகிந்தவினதும் நாட்டினதும் எதிர்காலத்தை ஒரே நேரத்தில் நாசம் செய்யவல்லன. ஒருதலைவரிடம் நாடு எதிர்பார்ப்பது சுபீட்சத்தை யும்,அமைதியையுமே. இலங்கைத்தீவில் சுபீட்சமும் அமைதியும் நிலவவேண்டுமானால் இலங்கையை எரித்துக்கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வுகாணப்படல் வேண்டும்.

எனவேதான் தனிவழிசென்று கொண்டிருக்கிறார் மகிந்தராஜபக்ஷ. தனது சொந்தக் கட்சியே தனதுகாலை வாருகின்றது என்பதை அறிந்திருப்ப தால்தான் முதலையின் வாயினுள் வேறுவழியின்றித் தலையை நுழைத் திருக்கிறார் மகிந்த "நாங்கள் சுதந்திரக் கட்சியோடுஒப்பந்தம் செய்ய வில்லை. மகிந்தராஜபக்ஷவோடுதான் ஒப்பந்தம் செய்திருக்கின்றோம்" என்று சொல்லும் ஜே.வி.பியுடன்அவர் தேர்தல் உடன்பாடு கண்டிருப்பது கூட மகிந்த நிற்கின்ற தளமற்ற நிலையின் வெளிப்பாடுதான்.

சொந்தத்தளமான சுதந்திரக் கட்சிக்குள் தனக்கிருக்கின்ற முதுகிலே குத்துகின்ற சூழலில் கட்சியைப் புற மொதுக்கிவிட்டு தனக்குத் தெரிந்த பாதையிலே தனக்கு வெற்றியைத் தேடித்தரக்கூடிய சக்திகள் என்று தான் நம்புகிறவர்களுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கிறார். இதற்காக அவர்கள் விதித்திருக்கின்ற (விரித்திருக்கின்ற) நிபந்தனை வலைக்குள் முன்யோசனை யின்றியோ வேறுவழியின்றியோ இறங்கிவிட்டார். அவர்கள் சொன்ன வற்றுக்குத் தலையாட்டி ஒப்புக்கொண்டு ஒப்பமிட்டு அந்த ஒப்பந்தங்களின் பிரதி களை பத்திரிகையாளர்கள் முன்னி லையில் பரிமாறிக்கொண்டும்விட்டார். இதனூடாகவே தனக்கு குழிபறிக்க திறந்த வாயில் நாவில் நீர்வழிய காத்திருப்பவர்களுக்கு காரணங்களை யும் தேடிக்கொடுத்துவிட்டார்.

அதனால்தான் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியிருப்பதாக அம்மையா ரால் கடும் வாசகங்கள் கொண்ட கடிதத்தை மகிந்தவுக்கு எழுதமுடிந் திருக்கிறது. இதனுடைய நீட்சி மகிந்தவின் நியமனப் பத்திரத் தாக்கல் செய்வதிலும் பிரதிபலிக்கக்கூடும் என்றும் ஊகங்கள் எழுந்துள்ளன. அவரைப் பின்இழுத்துக்கொண்டு வேறு ஒருவரை முன்னிறுத்துவது குறித்த வதந்திகளும் அரசியல் களத்திலே நிலவாமல் இல்லை.

இவ்வாறான பதற்றமான சூழலிலே தான் மகிந்த ஜாதிகஹெல உறுமயவின் பன்னிரண்டு நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். இந்த ஒப்பந்தத்தின் உத்தியோகபூர்வ நிகழ்வு தலதாமாளி கையின் முன்பாக நேற்று முன்தினம் நடந்தபோது ஐம்பது பிக்குகளும் மற்றும் வெகுசில பொதுமக்களும் மட்டுமே அங்குதிரண்டிருந்தனர். இது மகிந்தவைப் பொறுத்தவரை , ஒரு 'அன்ரிகிளைமாக்ஸ்' ஆக இருக்கக் கூடும். சொந்த வீட்டிலேயே எதிர்ப்புக் களைச் சம்பாதித்துக்கொண்டு செய்து கொண்ட ஒப்பந்தம் பெற்றுத்தந்த பிரபல்யம் அல்லது செல்வாக்கு இவ்வளவுதானா? என்பதில் மகிந்த ஆடிப்போயிருக்கக்கூடும்.

மகிந்த செய்துகொண்டுள்ள இரண்டு தேர்தல் உடன்பாடுகளிலும் உள்ளடக்கியுள்ள சரத்துக்கள் மகிந்த வினதும் நாட்டினதும் எதிர்காலத்தை ஒரே நேரத்தில் நாசம் செய்யவல்லன. ஒருதலைவரிடம் நாடு எதிர்பார்ப்பது சுபீட்சத்தையும்,அமைதியையுமே. இலங்கைத்தீவில் சுபீட்சமும் அமைதியும் நிலவவேண்டுமானால் இலங்கையை எரித்துக்கொண்டிருக்கும் இனப்பிரச் சினைக்கு அர்த்தமுள்ள தீர்வுகாணப் படல் வேண்டும்.

ஆனால் ஜே.வி.பி.யினாலும், ஹெலஉறுமயவினாலும் முன்வைக் கப்பட்டு மகிந்தவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளோ சமாதானப் பேச்சுக்கள் இனிமேல் நடைபெறவே முடியாதோ? என்ற அச்சத்தையும் சமாதான நடவடிக் கைகள் மீதான அவநம்பிக்கையையும் தோற்றுவித்துவிட்டன. ஒற்றையாட்சிக் குள் தீர்வுகாண்பதென்ற தத்துவத்துடன் களமிறங்கப் போகும் மகிந்தவால் எதையுமே சாதிக்கமுடியாது என்பது நிச்சயமானது.

அதன் விளைவாகவே நாட்டின் பொருண்மிய வீழ்ச்சியும்,மக்களின் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பும் தொடரத்தான் போகின்றன. இதிலிருந்து நாட்டினை மீட்பது என்பது மகிந்தவால் இயலப்போவதில்லை.

மாறாகத் தான்எட்டிய உடன்பாடு கள் அனைத்தையும் தேர்தல் ஆற்றைக் கடக்கும் மட்டுமே தூக்கிப்பிடித்துவிட்டு வெற்றியின் பின்னர் யதார்த்த உல கிற்கு மகிந்த வரக்கூடுமா? என்றதொரு கேள்வியையும் எழுப்பிப்பார்க்க வேண்டும். ஏனெனில் ஆட்சிக்கட்டில் தனக்கேயுரிய சிறப்பியல்புகளைக் கொண்டது. அதுதனது இயல்புகளுக்கு ஏற்ப ஆட்சியாளர்களைத் திசை திருப்பவல்லது. அவ்வாறானதொரு நிலைமை மகிந்தவுக்கு ஏற்படுமா?

அவ்வாறானதொரு நிலைப் பாட்டினை மகிந்த எடுப்பாரா? எடுப் பாரானால் சிங்களப் பேரினவாதம் என்னசெய்யும்? இவ்வாறெல்லாம் நடந்தால் மீண்டுமொரு SWRD பண்டார நாயக்கவை இலங்கைத்தீவு சந்திக்க நேரிடலாம். பேரினவாதத்தைக் கிளறிவிட்டு அதன் தகிப்பில் பதவியைப் பிடித்தபின்னர் அதற்கே "அல்வா" கொடுக்க முற்படுபவர்களை தின்று தீர்த்துவிட சிங்களப் பேரினவாதம் ஒரு போதுமே தயங்கப்போவதில்லை. அந்தளவுக்கு பலம்பொருந்தியதாக தம்மதீபக் கற்பனையும் சிங்களத் தலைமைத்துவங்களும் பேரினவாத பூதங்களை வளர்த்து, உசுப்பி, உருவேற்றி விட்டிருக்கிறார்கள்.

ஆக மகிந்த எப்பக்கம் திரும்பி னாலும் கழுத்துக்குக் கத்திபாயக் கூடிய ஒரு மிகவும் ஆபத்தான சூழலிலே முள் மிதியடியோடு நடந்துகொண்டிருக்கிறார். இப்படியே அவரால் எவ்வளவு காலம் எவ்வளவு துாரம் நடக்க முடியும் என்பதே இன்றைய கேள்வி? எனவே தான் பரிதாபத்துக்குரிய நபர் என மகிந்த விழிக்கப்பட்டுள்ளார்.

# நறுக்கென...

## மகிந்தவின் எதிரி சந்திரிகா...!



பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு சனாதிபதித் தேர்தலில் கடும் சிக்கலைக் கொடுப்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அல்ல.

சுதந்திரக் கட்சியின் தலைவியும், சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கதான். சனாதிபதி சந்திரிகாவுக்கு தனது இரண்டு சனாதிபதி பதவிக்கால முடிவில் ஓய்வு பெறுவது அவருக்கு வேதனையளிக்கவில்லை. பதிலாக சுதந்திரக்கட்சியின் அதிகாரம், பண்டாரநாயக்க குடும்பத்தின் கைகளிற்குள்ளிருந்து நழுவி விடும் என்பதேயாகும்.

ஆரம்பத்திலிருந்தே எப்படியாவது மகிந்தராஜபக்ஷவை ஓரங்கட்டிவிட அம்மையார் எடுத்த எல்லா முயற்சிகளையும் இந்த சாரைப்பாம்பர் மகிந்தராஜபக்ஷ வெட்டி ஆடி சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தான் என கட்சி அறிவிக்கும் அளவுக்கு வெற்றிபெற்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளோடு கூட்டு ஒப்பந்தத்துக்கு சம்மதித்து செயற்படும் மகிந்தவின் செயற்பாடு கட்சி விதிகளை மீறியவை எனச்சுட்டிக்காட்டிய சனாதிபதி சந்திரிகா மகிந்தவிற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படலாம் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கி வைத்துள்ளார்.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது. மகிந்தவிற்கு நிபந்தனைகளின் அடிப் படையில தான் சனாதிபதி வேட்பாளருக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிபந்தனைகளில் ஒன்று, நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு அடுத்த சனாதிபதித் தேர்தலில் வேட்பாளருக்கான வாய்ப்பு அனுரா பண்டாரநாயக்கவுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே.

இதன்படி அடுத்தமுறையாவது மீண்டும் எப்படியாவது சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தைப் பண்டாரநாயக்க குடும்பச் சொத்தாக்கிவிடலாம் எனக் கருதுகின்றனர்.


இதற்காக இந்தமுறை சனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடானது 'எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப் பிழையாகவிடக்கூடாது என்பது போன்ற நடவடிக்கையில் இறங்கியுள்ளார் போலத் தெரிகிறது.

அதாவது மகிந்தவை சனாதிபதி வேட்பாளரிலிருந்து தூக்கி வீச வேண்டும் அல்லது மகிந்த இந்தத் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் எனச் செயற்படுகிறார் போலுள்ளது.

எது எப்படியோ எல்லாமே நாட்டின் நலனின் அடிப்படையில்லாது பண்டா குடும்பத்தின் நலனின் அடிப்படையிலேயே காரியம் ஆற்றப்படுகிறது.

இலாபம் யாருக்கு இதுவரை ரணிலுக்குத்தான்.

## கண்காணிப்புக் குழுவின் மௌனம்!



இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அண்மை யில் கருணா குழுவினரை மட்டக்களப்பில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் சந்தித்துப் பேசியிருந்தது.

பலவாரங்களுக்கு முன்னர் கண்காணிப்புக் குழுவினர் இந்த தேசவிரோதக் குழுவினரோடு பேச்சுக்களை நடத்தியிருந்த போதும் சந்திப்புக் குறித்து கண்காணிப்புக் குழு வாய்திறக்கவில்லை.

தேசவிரோதக் குழுக்களின் ஆதரவு இணையத் தளத்தில் இந்தத் தகவல் வெளியானபோதுதான் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒப்புக்கொண்டார்.

ஆனால் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அந்தச் சந்திப்பு ஒரு தற்செயலான சந்திப்பு எனவும், தமது கண்காணிப்பாளர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கருணாகுழு எனச் சொல்லிக்கொண்டு சிலர் தம்மைச் சந்தித்தார்கள் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இத்தகைய குழு இயங்குவதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது எனவும், இதன் மூலம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இத்தகைய குழுக்கள் இயங்குவதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளரின் கூற்றுக்கும் கண்காணிப்புக் குழுவின் தலைவரின் பேச்சுக்கும் வெளியான புகைப்படங்களின் அடிப்படையிலும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களே காணப்படுகின்றன.

எது எப்படியோ உறுதிப்படுத்தப்பட்ட செய்தியை கண்காணிப்புக்குழு பகிரங்கமாக வெளிப்படுத்துவதே பொருத்தப்பாடானதாகும்.

ஏனெனில் இன்றைய யுத்தநிறுத்தத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதே அரச ஆதரவில் இயங்கும் இந்தத் துணைக்குழுக்களே.

ஆனால் ஏனோ புலிகள் தொடர்பான செய்திகளை முண்டியடித்துக்கொண்டு வெளியிடும் கண்காணிப்புக் குழுவின் வேகம் இதில் காணவில்லை.

கண்காணிப்புக் குழுவின் செயற்பாடானது பாரபட்சமின்றி நடுநிலையானதாகவே இருக்கவேண்டும்.

ஏனெனில் இங்கு அரசு-புலிகள் என்பதைவிட போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இரண்டு தரப்புக்களும் சம பங்காளிகளாகவே கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகிந்தவின் பக்கம் மங்கள...!



மகிந்தவுக்கு ஆதரவாக சனாதிபதி சந்திரிகாவை சாடியிருக்கிறார் மங்கள சமரவீர.

சரி மங்கள சமரவீர மகிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவா கத் தானே பேசுவார். ஏனெனில் மகிந்தராஜபக்ஷ வின் தேர்தல் பணி ஏற்பாட்டாளராக மங்களசமரவீர கடமையாற்றுவதால் ஆதரவாகத்தான் பேசுவார் என எவரும் கூறக்கூடும்.

ஆனால் ஒரு காலத்தில் சனாதிபதி சந்திரிகாவின் வலது கை, இடது கை, பின் கை, முன் கை என எல்லாக் கைகளாகவும் செயற்பட்டவர் எஸ்.பி திஸாநாயக்க, ஆனால் எஸ்.பி திஸாநாயக்கவுக்கும் சந்திரிகாவுக்கும்இடையில் முறுகல் முற்ற எஸ்.பி திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தாவி பின்னர் சந்திரிகா அம்மையார் மன்னிப்பு வழங்கினால் தான் விடுதலை என்ற நிலையில் சிறைக்கம்பிகளை எண்ணிவருகிறார் எஸ்.பி திஸாநாயக்க.

இந்த திஸாநாயக்கவுக்குப் பின்னர் அம்மையாரின் பல கரங்களும் மங்களசமர வீரதான் என அரசியல் வட்டாரங்களில் அரசல் புரசலான கதைகள் அடிப்பட்டதுமுண்டு. ஆனால் பின்னர் இவராலும் அம்மையாரின் நட்பை தொடர்ந்து தக்கவைத்து கொள்ள முடியவில்லை. இதனால் அம்மையாருடனான உறவும் அவ்வளவு சுமுகமாக இருக்கவில்லை.

இந்த நிலையில் தான் அமைச்சர் மங்கள சமரவீர இப்பொழுது ஊடகவியலாளர் மாநாட்டில் சனாதிபதி சந்திரிகா அம்மையார் மகிந்தராஜபக்ஷவிற்கு எழுதிய கடிதம் தொடர்பாக கேட்ட, போது மகிந்தராஜபக்ஷ- ஜே.வி.பி, ஹெல உறுமய ஆதரவு ஒப்பந்த ங்கள் குறித்து பதிலளிக்க வேண்டிய அவசியம் தற்போதுஇல்லை என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இன்னொரு வகையில் அமைச்சர் மங்கள சமரவீர முன்னர் சந்திரிகா அம்மையாரால் ஜே.வி.பியோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் முக்கியமானவர்.

ஏறத்தாளஅமைச்சர் மங்கள சமரவீரவை தனது கைகளிற்குள் ஜே.வி.பி யினர் வளைத்து வைத்திருக்கின்றனர். இந்த நிலையில் மகிந்தராஜபக்ஷ- ஜே.வி.பி ஒப்பந்தத்துக்கு மங்கள சமரவீரஆதரவு வழங்குபவராகவே இருப்பார்.

அத்தோடு மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராக நீடிக்கும் பட்சத்தில் இனிவரும் சுதந்திரக்கட்சி அரசியல் ராஜபக்ஷவின் தலைமையில் தான் நகரும். எனவே மங்கள மகிந்தவுக்கு ஆதரவாக மங்களம் பாடியுள்ளார்.

எல்லாம் சரி கொஞ்சம் காட்டமான வார்த்தைகளைப்பாவித்து அம்மையாரை மங்களசமரவீர சாடியிருப்பது அம்மையாரின் செயற்பாடு தொடர்பாக கட்சிக்குள் பலரும் அதிருப்தி கொண்டிருப்பதையே காட்டுகிறது.

எல்லாம் சரி இனி நடைபெறப்போகும் சனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெறவேண்டுமே!

## ரட்ணசிறியாரின் கண்டுபிடிப்பு...!



யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மிக அரிது என்றுதான் கூறவேண்டும்.ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்ற வகையில் சுதந்திரக கட்சிக்காரர்களும்,ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் யுத்த நிறுத்தத்தின் பயனாக அரசியல் இலாபத்தை அனுபவித்து வருகின்றவர்கள் இந்த அரசும் சிங்களமக்களும்தான்.ஆனால் ஏதோ யுத்த நிறுத்தம் செய்துகொள்ளப்பட்டதால் இந்த அரசும், சிங்கள மக்களும் முள்ளின் மேல் நிற்பது போலவும் இதனால் பெரிய பாதகமே தமக்கு இழைக்கப்படுவது போலவும் கூச்சலிட்டுவருவது வேடிக்கையானதே.

இது இப்படியிருக்க, இப்பொழுது இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக கடுமையான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார் சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இந்திய பாதுகாப்புத்துறை பயிற்சிக் கல்லூரியின் குழுவினரிடம் இது குறித்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க கலந்துரையாடியுள்ளாராம்.அத்தோடு இந்தப் ஒப்பந்தத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் பலனடைந்துள்ளனராம். சிறிலங்காவின் தேசிய நலன்களைக் கருத்திற்கொள்ளாமல் ஒருபக்கச் சார்பாகவே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் புதிய கண்டுபிடிப்புக்களை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கதை அளந்துள்ளார்.

இந்தியாவை புலிகளுக்கு எதிராகச் சீண்டி அதன் பலாபலன்களைப் பெற்று விடுவ தற்காக இந்திய அதிகாரிகள் முன் நடிக்கும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஒன்றை மறந்துவிட்டார்.


அதாவது இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் சிறிலங்காவிற்கு பாதகத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் யுத்தநிறுத்த ஒப்பந்த நகலில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பது போல பதின்னான்கு நாள் கால அவகாசத்தின் அடிப்படையில் விலகிக்கொள்ளலாமே.ஆனால் அவ்வாறு செய்வதற்கு இந்த அரசுக்கோ,அரச அதிகாரிகளுக்கோ துணிவு இல்லை என்பதே யதார்த்தம். அத்தோடு இவர்கள் கூழுக்கும் ஆசைப்பட்டு மீசைக்கு ஆசைப்படும் ஆசைப்பிடாரிகள்.

இதனால் இவர்கள் அடிக்கடி பேசம் பேச்சுக்களும்,கோபங்களும் குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு' என்பது போல இவர்கள் எதை நோக்கமாகக் கொண்டு பேசுகிறார்களோ அது முடிய எல்லாம் சரியாகிவிடுகிறது.

இவர்கள் நோக்கமெல்லாம் எப்படியாவது,எவரையாவது கொண்டு புலிகள் இயக்கத்தை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வை நசுக்கிவிடலாம் என்பதே.

இவர்கள் என்னதான் தலையால் மலையை இடித்தாலும் வேதனையை அனுபவிக்கப் போகிறவர்கள் இவர்கள்தான்.

வேழினி



# நவீன இந்தியாவின் விண்வெளிச் சாதனங்கள்

இந்தியாவின் விண்வெளித் தொழில் நுட்பச் சிறப்பு அளப்பரியது. அது தன்வயப்படுத்தியுள்ள இத்திறன் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜப்பான், சீனா ஆகியவற்றிற்கு நிகரானது.இந்த நாடுகளைப்போல் இந்தியாவும் பிறர் உதவியை நாடாமல் சொந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலையில் இன்று இருக்கிறது. செய்கோள் தொடக்கம் ஏற்றும் கருவி வரையிலான யாவற்றையும் சுயமாகத் தயாரிப்பதன் மூலம் இந்திய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மேல் செய்கோளை நிலையாக நிறுத்தும் திறனை இன்று ஆறுநாடுகள் மாத்திரம் கொண்டுள்ளன. மேற்கூறிய ஐந்து நாடுகளோடு இந்தியாவும் அதில் ஒன்று. செய்கோளை விண்ணுக்கு ஏற்றும் வெப்பம் மிகக் குறைந்த எந்திர சாதனத்தை இவ்வைந்து நாடுகளைப்போல் இந்தியாவும் கொண்டுள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் விண்வெளி நிலையத்திலிருந்து தான் சுயமாகத் தயாரித்த ஆரிய பாட்டா செய்கோளை விண்ணுக்கு ஏற்றிய ஏப்ரல்-19,1975ஆம் நாளுடன் நவீன இந்தியாவின் விண்வெளி யுகம் ஆரம்பிக்கிறது. இது பழைய கதை.இப்போது விண்ணில் ஏற்றும் தொழில்நுட்பத்தோடு, ஏற்றப்பட்ட செய்கோளை தரையில் இருந்து அவதானிப்பது, அதை மீளப் பெறுவது போன்ற இலக்குகளையும் இந்தியா எட்டிவிட்டது. இன்று பூதாகர வளர்ச்சி பெற்றுள்ள இந்திய விண்வெளி வரலாறு 1960களில் மிகச் சிறியளவு திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. 1963இல் அது தனது முதலாவது ஏவு தளத்தை நிறுவியதோடு முதலாவது பரீட்சார்த்த றொக்கற் ஏவுகணையையும் விண்ணுக்கு அனுப்பியது. தும்பா பூமத்திய றொக்கற் ஏவுதளத்தை நிறுவியது மூலம் இந்தியா தனது விண்வெளித் திட்டத்திற்கு அடித்தளமிட்டது.

1975இல் ஆரியபாட்டாவை விண்ணுக்கு அனுப்பியதோடு அது விண்வெளி யுகத்திற்குள் புகுந்து விட்டது. இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவகர்லால் நேரு ஆட்சிசெய்த காலத்திலேயே (1947-1964) விண்வெளித் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவருக்குப் பின் பிரதமர் பதவி வகித்த லால் பகதூர் சாஸ்திரி காலத்தில் (1964-1966) இத்திட்டம் தொடரப்பட்டது. இந்திரா காந்தியின் முதலாவது பதவிக் காலத்தில் (1966-1977) விண்வெளித் திட்ட விரிவாக்கத்தோடு அணுவாயுதத் தயாரிப்பும் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது பொக்கிறான் அணுகுண்டு வெடிப்பு 1974இல் நடைபெற்றது. இரு முனைகளில் இந்தியா முன்னேறத் தொடங்கியதை நாம் அவதானிக்கமுடியும்.

ஆரியபாட்டா என்பவர் இந்தியாவின் முதுபெரும் கணித மற்றும் வானியல் நிபுணர். இவர் வாழ்ந்த காலம் கி.பி.476-520 இந்தியா ஏவிய முதலாவது செய்கோளுக்கு Arya bhatta என்று பெயர்சூட்டப்பட்டது. இந்தியாவின் விண்வெளித் திட்ட நிர்வாகம் ஐ.எஸ்.ஆர்.ஓ (I.S.R.O) என்று அழைக்கப்படுகிறது. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (Indian space research organization) என்று பொருள். இதற்கு மேற் கூறப்பட்டதுபோல்1963இல் பரீட்சார்த்த விண்வெளி ஏவுகணையை ஐ.எஸ்.ஆர்.ஓ விண்ணுக்கு அனுப்பியது. அனுப்பியநாள் நவம்பர் -21, 1963. இதற்கு றோகிணி என்று பெயரிடப்பட்டது. இதுதான் இந்தியவிண்வெளி வரலாற்று ஆரம்பமாகக் கருதப்படுகின்றது. றோகிணி தான் இந்திய விண்வெளித்திட்டச் செயற்பாடுகளுக்கு ஆரம்பமென்றால் மிகையாகாது.

இந்திய விண்வெளித் திட்டம் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் அதில் மூன்று பிரதான அங்கங்களைக் கண்டுள்ளனர்.

1.செய்கோள் தயாரிப்பு 2.செய்கோளை விண்ணுக்கு ஏற்றும் எந்திரங்கள் தயாரிப்பு. 3.தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து ஏற்றிய செய்கோள்கள் மூலம் விரும்பிய தரவுகளைப் பெறுதல். ஐ.எஸ்.ஆர்.ஓவின் செய்கோள் தயாரிப்புக்கள் வியப்பூட்டும் விதத்தில் கிட்டத்தட்ட நூறுவீத வெற்றியளித்துள்ளன. ஆனால் செய்கோளை விண்ணுக்கு ஏற்றும் எந்திர சாதனம் தயாரிக்கும் திட்டம் நாற்பதிற்கும் ஐம்பதிற்கும் இடையிலான வீதத்தில் வெற்றிகண்டுள்ளது. இதனால் தனது செய்கோள்களை சோவியத் ஒன்றியம், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் உதவியோடு ஏற்றும் நிலைக்கு ஐ.எஸ்.ஆர்.ஓ தள்ளப்பட்டது. இன்று நிலைமை மாறிவிட்டது. தனது காலில் நிற்கும் நிலையை எட்டியதோடு பிறநாடுகளுக்கு எவ்வித உதவியையும் வழங்கும் நிலையில் இந்தியா இருக்கிறது. விண்ணுக்கு ஏற்றும் எந்திர சாதனத் தோல்விக்கு எரி பொருள் மற்றும் உந்தித் தள்ளும் றொக்கற் (Boos ter) பகுதி என்பன தொடர்பான பிரச்சினைகள் காரணமாக அமைந்துள்ளன.

விண்ணுக்கு ஏற்றும் எந்திர சாதனத் திட்டம் தும்பா பூமத்திய றொக்கற் ஏவுதளத்தில் இருந்து சிறிஹரிகோட்டாவுக்கு 1969ஆம் ஆண்டில் எடுத்துச்செல்லப்பட்டது. சென்னைக்கு வடபால் நூறு கி.மீ தொலைவில் அமைந்துள்ள சிறிஹரிகோட்டா தீவில் ஐ.எஸ்.ஆர்.ஓவின் செய்கோள் ஏற்றும் தளம் காணப்படுகிறது.

இதன் ஒருபகுதி திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டு விக்கிரம் சாராபாய் விண்வெளி மையம் என்ற பெயரில் இயங்குகிறது. இந்தியாவின் முக்கிய செய்கோள், ஏவுதளம் சிறிஹரிகோட்டாவில் செயற்படுகிறது. ஏவுகணை ஆராய்ச்சியும் இங்குதான் நடைபெறுகிறது. இந்தியாவுக்குத் தேவையான பல கட்ட செய்கோள் ஏவும் றொக்கற்றுக்கள் (Multi-stage satellite launch rockets) சிறிஹரிகோட்டாவில் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்தியாவின் இரு முக்கிய ஏவுதளங்களும் தெற்கில் நிறுவப்படுவதற்கு அருகாமையிலுள்ள கடல் முக்கியகாரணமாக அமைகிறது. றொக்கற்றுக்கான திரவ எரிபொருள் ஆராய்ச்சி தமிழ் நாட்டின் மகேந்திர கிரியில் நடைபெறுகிறது. செய்கோள் ஏவும் தொழில்நுட்பத்திற்கான மிக மேம்பட்ட திட்டங்கள் திருவனந்தபுரத்திற்கு அருகாமையிலுள்ள வலியமலவில் கட்டப்பட்டிருக்கும் மிகப்பெரிய மையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. சிறிஹரிகோட்டாவுக்கு அடுத்த நிலையில் திருவனந்தபுரம் இருக்கிறது.

இன்ரெல்சற் (Intelsat) எனப்படும் 135நாடுகள் இணைந்த சர்வதேச செய்கோள் தொடர்பாடல் அமைப்பு (International satellite) இந்தியாவின் இன்சாற்2ஈ (Insat2E) என்ற தொடர்புச் செய்கோளின் அனுகூலங்களைப் பெறுவதற்காக நூறு மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. ஐ.எஸ்.ஆர்.ஓவின் இன்சாற் 2ஈ ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் இன்ரெல்சற் சேவைக்கு வலுக்கூட்டுகின்றது. இன்ரெல்சற் உள்நாட்டு மற்றும் பிராந்திய மட்டச் சேவையோடு அனைத்துலக மட்டத்திலும் தொலைபேசி, தொலைக்காட்சி, வீடியோ, ரெலெக்ஸ், ஈமெயில், தொலைநகல் மற்றும் வர்த்தகத் துறைக்கான தொடர்பாடல் சேவைகளையும் வழங்குகிறது.

தனக்குச்சொந்தமில்லாத முதலாவது செய்கோளின் சேவையை இன்ரெல்சற் பெற்றுள்ளதாக இந்தியாவின் இன்சாற்2ஈ தொடர்புபற்றிக் குறிப்பிடப்படுகிறது. இந்திய இன்சாற் திட்டம் 1983இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று நன்கு வளர்ச்சிகண்டுள்ளது. இன்று இந்திய தொலைத் தொடர்பு சேவை, இந்திய வானொலி, துார்தர்ஷன் தொலைக்காட்சி என்பன இன்சாற் செய்கோள்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. இன்சாற் திட்டத்தின் தலைமைச் செயலகம் பெங்களூர் நகரில் காணப்படுகிறது. சர்வதேச தொடர்பாடல் இணைப்பில் இந்தியா கேந்திர நிலையில் இருக்கிறது. சிறிஹரிகோட்டாவிலிருந்து 1994

**அன்பரசு**

தொடக்கம் இந்தியா தனது சுயதயாரிப்பு செய்கோள்களை விண்ணிற்கு ஏவி வருகிறது.

கிராமப்புற மக்களின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு இன்சாற் தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் கிராம்சற் (Gramsat) என்ற சேவையை இந்தியா நடத்துகிறது. கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளை கிராம்சாற் பூர்த்திசெய்கிறது. சுகாதாரம், சுற்றுச்சூழல், குடும்பத்திட்டமிடல், விவசாயம், கலாசாரம் போன்ற விடயங்கள் கிராம்சாற் செய்கோள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடுதழுவிய வகுப்பறைக் கல்வித்திட்டம் தூர்தர்ஷன் தொலைக்காட்சி மூலம் நிறைவேற்றப்படுகிறது. கிராமப்புற கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் இன்றும் இருப்பதால் இந்தியாவின் மிகப்பெரிய பிரச்சினையாக அது உருவெடுத்துள்ளது. எனினும் இந்தியாவில் ஒரு வலுவான விஞ்ஞனப் பாரம்பரியம் இருக்கிறது. இருக்கு வேதத்தில் அணுசக்தி பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்தியா ஏவிய முதலாவது செய்கோளுக்கு ஆரிய பாட்டா என்று பெயரிடப்பட்டதுபோல் 1979இல் ஏவப்பட்ட இரண்டாவது செய்கோளுக்கு 'பாஸ்கரா' என்று பெயரிடப்பட்டது. ஆரியபாட்டாவைப் போல் பாஸ்கராவும் முதுபெரும் கணக்கியல் மற்றும் வானியல் நிபுணராவார். பூச்சியக் குறியான வட்டத்தை உருவாக்கிய சிறப்பு இந்தியாவுக்கு உண்டு.

நவீன இந்தியாவில் பல புகழ் பூத்த விண்வெளி விஞ்ஞானிகள் தோன்றியுள்ளனர். 'இந்திய அணு சக்தி விஞ்ஞானத்தின் தந்தை' என்று புகழப்பட்ட ஹோமிபாபா (Homi BaBa) 1909-1966 பாபா அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கினார். இப்போது இந்திய சனாதிபதியாக வீற்றிருக்கும் டாக்டர் அப்துல்கலாம் (பிறப்பு1931) இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தின் பிதாமகராகக் கணிப்பிடப்படுகிறார். இராணுவ பலம் ஒன்றுதான் உலக அரங்கில் இந்தியாவுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கச்செய்யும் என்பது இவருடைய கோட்பாடு.

இந்திய செய்கோள் திட்டத்தின் தலைமை நிறுவனமான ஐ.எஸ்.ஆர்.ஓவின் 16800 விஞ்ஞானிகள் பணியாற்றுகின்றனர். 1995தொடக்கம் இதற்கான மத்திய அரசின் நிதிஒதுக்கீடு பன்மடங்காகப் பெருகியுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியின் பெறுபேறுகளில் ஒன்றாக இந்திய இராணுவமும் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. பன்முக இராணுவ மேம்பாடு, இராணுவ உபகரண தயாரிப்பு/கொள்வனவு, தேசிய பாதுகாப்புப்பற்றிய ஆராய்ச்சிக்கான செலவீடு என்பனவற்றில் தெற்காசியாவில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. அது உலகின் பலம்வாய்ந்த நாடுகளில் ஒன்றாகத் திகழ்வதற்கு இதுவே காரணம். அதி உச்ச ஏவுகணைத் தொழில்நுட்பமும் அணுவாயுதமும் இணைந்த இந்தியா ஒரு உலக தர வல்லரசு என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்று இராணுவத் தேவைகளுக்காக இந்தியா விசேட தயாரிப்புச் செய்கோளை விண்ணில் ஏற்றாமல் விட்டுள்ளது. ஆனால் அது விண்ணில் உலாவ விட்டிருக்கும் உணர்விகள் (Sensors) தரைப்படப்பிடிப்புக் கருவிகள் (Ground photo graphy) உளவுப்பணியைத் திறம்படச் செய்கின்றன. 1988இல் இந்தியா ஏவிய IRS-IA) செய்மதி இந்திய உபகண்டச்சுற்றாடல் இந்து மாகடல்

(22ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 16. 09 . 2005
மின் அஞ்சல :—weekly @ eezhanatham.com

# சிங்கள மக்களின் திருப்தி: இனவாதிகளின் விருப்பமா?

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மகிந்தராஜபக்ஷ தனது தேர்தல் வெற்றிக்காக அவர் அமைத்து வரும் கூட்டணியானது இந்நாட்டின் அரசியல் சாபக்கேட்டிற்கு மிகச் சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது.

இதேவேளை மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி மற்றும் ஹெறல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளோடு அமைத்த கூட்டணி மூலமாக மகிந்தராஜபக்ஷவின் கரங்களிற்கு நாட்டின் தலைமைப் பொறுப்பு சொல்லுமாக இருந்தால் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமக்களின் அரசியல் வாழ்வு பெரும் அபாயத்துள் தள்ளப்படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும்.

ஏற்கனவே, ஜே.வி.பியும் ஹெறல உறுமயவும் மகிந்தராஜபக்ஷவுக்கு வழங்க இருக்கும் ஆதரவுக்கு இக்கட்சிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளானது தமிழ் மக்களை மட்டுமன்றி மகிந்த ராஜபக்ஷவையும் சேர்த்தே சுற்றிவளைத்துள்ளது.

இதன் மூலமாக முற்றுமுழுதாக சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை முதன்மைப்படுத்துவதோடு சிங்கள மக்களின் விருப்பு வெறுப்புக்கமையவே ஏனைய இனமக்களின் அரசியல் வாழ்வு நிர்ணயிக்கப்படும் எனும் செய்தி தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு, யதார்த்தத்துக்குப் பொருந்தாத இக்கட்சிகளின் நிபந்தனைகளானது இலங்கைத்தீவில் அமைதிவழியில் அரசியல் தீர்வு காண்பதென்பது சாத்தியப்பாடானதொன்றாக அமையப் போவதில்லை என்பதற்கு கட்டியம் கூறிநிற்கின்றது.

ஜே.வி.பி யோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்படுத்தியிருக்கும் அரசியல் கூட்டுக்காரணமாக காலப்போக்கில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பிக்குள் கரைந்து போகும் அபாயம் இருப்பதாக அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

ஜே.வி.பிக்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கரைந்து போகிறதோ இல்லையோ மகிந்தவின் தலைமையில் இனவாதிகளின் கரங்களில் இந்நாடு வீழ்ச்சியுறும் சந்தர்ப்பத்தில் இலங்கையின் சமாதான முயற்சியும் பேச்சு மூலமான தீர்வும் நிரந்தரமாகவே கரைந்துபோய் விடும்.

இத்தகையதொரு வரலாற்றுத் துயரம் நிகழும் பட்சத்தில் சர்வதேச சமூகமும் விரும்புகின்ற இலங்கையில் அமைதி என்பது கானல் நீராகவே இருக்கும்.

இந்தநிலையில் ,பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச செய்தி ஸ்தாபனம்ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

அதாவது, விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளுக்கு புதிய அணுகுமுறை தேவை என்பதோடு சிங்கள மக்கலை திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதைப் புலிகள் உணர வேண்டும் என தெரிவித்திருப்பதானது, பிரதமர் மகிந்தராஜபக்ஷ எதிர்காலத்தில் வகுக்கப் போகும் அரசியல் பாதையைக் காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக ஜே.வி.பி ஹெறல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் நிபந்தனைகளிற்குள் மகிந்த ராஜபக்ஷ கரைந்து போய்விட்டார் என்பதோடு மகிந்தராஜபக்ஷ குறிப்பிட்ட சிங்கள மக்களின் திருப்தி என்பது தீவிர சிங்கள இனவாதிகளை திருப்திப்படுத்துவதையே குறிப்பிடுகிறார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனவாதக்கட்சிகள் யாவும் கூட்டாக முகாமிட்டு சிங்கள மக்கள் மத்தியில் நிற்கும் இத்தேர்தலில் அரசியல் வெற்றி என்பது எப்பக்கம் வேண்டுமானாலும் சாயலாம்.

சிங்கள மக்களின் விருப்புத் தெரிவு எதுவாக இருக்கப் போகிறது என்பதிலேயே இந்நாட்டின் அரசியல் சுபீட்சம் தங்கியிருக்கிறது.

எனினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய தோடு தமக்கான விடுதலைக்கான வாசலை நோக்கி விரைந்து செல்ல வேண்டிய வியூகங்களை நோக்கி நகர வேண்டிய காலத்தின் அவசியம் ஏற்படுகிறது.

ஏனெனில் தமிழ் மக்களிற்கான உரிமையையும்,சுபீட்சத்தையும் சிங்கள மக்கள் தீர்மானிக்க முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை சிங்கள மக்கள் தமிழ் மக்களோடு இந்நாட்டில் வாழ்கின்ற ஒரு சக இன மக்களாக மட்டுமே இருக்க முடியும்.

இந்த யதார்த்தத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் காரணமாகவே தமிழ் மக்கள் தமது பூர்வீகமான தமது தாயகத்தில் தம் வாழ்வை நிர்ணயித்துக் கொள்ள திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார்கள்.

# அமைதித் தீர்வுக்கு யார் தடங்கல்



இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் புலிகள் இயக்கத்தோடு தொடர்வு படுத்தி இரண்டு விதமாக அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் சிந்திக்கப்படுகிறது.

ஒன்று -புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக தோற்கடிப்பது.

இரண்டாவது- புலிகள் இயக்கத்தோடு அரசியல் ரீதியாகப் பேசுவது.

இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது புலிகள் இயக்கத்தோடு அரசியல் ரீதியாக பேச்சுக்களை முன்னெடுக்க வருகின்ற எல்லா அரசுகளுமே புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியாத அல்லது இராணுவ ரீதியில் ஒடுக்க முடியாத சூழலிலேயே அரசியல் ரீதியிலான பேச்சுக்குத் தயாராகின்றன.

இவர்களின் இரண்டாம் பட்ச தெரிவாகத்தான் எப்பொழுதும் புலிகள் இயக்கத்தோடு அரசியல் ரீதியிலான பேச்சுக்கள் இருந்திருக்கிறது.

புலிகள் இயக்கத்தின் இராணுவ வலிமையின் முன் தோற்கப்படும் பட்சத்தில்தான் அரசியல் பேச்சுக்கள் என்கிற நிலை காணப்படுகிறன..

இதனால்தான் எப்பொழுதுமே பேச்சு மேசையில் புலிகள் இயக்கத்திற்கு பேசும் வல்லமை சாதகமாக இருந்திருக்கிறது.

புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாது என்கிற யதார்த்தத்தைச் சர்வதேச சமூகம் எப்பொழுதோ உணர்ந்துள்ளது.

அண்மையில் அமெரிக் காவின் வோஷிங்ரனில் நடைபெற்ற மாநாட்டில் கூட அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் தெரசிற்ராஸ்கா.ஃ.பர் குறிப்பிட்டிருந்த கூற்று முக்கியத்துவம் பெறுகிறது.

அதாவது, இலங்கை சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளே தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றனர். விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நேரடிப் பேச்சுக்களை அவசியம் மேற்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளை இராணுவரீதியாகக் கட்டுப்படுத்தலாம் என்பது நடைமுறைச்சாத்தியமற்ற விடயம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட முடியாத புலிகள் இயக்கம் வலிமையான ஒரு அமைப்பாகச் செயற்பட்டு வரும் சூழலில் இந்த அமைப்போடு முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்களை கடந்த அரசுகள் எவ்வாறு கையாள முனைந்திருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளும் போது ஏன்? புலிகள் இயக்கத்துடனான சமாதானப் பேச்சுக்கள் நெருக்கடிக்குள்ளாகின்றது என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

இராணுவ ரீதியாக புலிகள் இயக்கம் ஒடுக்கப்பட முடியாது என்றவுடன் புலிகள் இயக்கத்துடனான பேச்சுக்களின் போது பேச்சு மூலம் ஒரு தீர்வை நோக்கி நகரக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விட இராணுவரீதியாகச் சாதிக்க முடியாது போனதை அரசியல் ரீதியாக செய்ய முற்படுகின்ற யதார்த்த நிலைமையே இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

இதில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரிதான், சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாக இருந்தாலும் சரி ஒரே அணுகுமுறையைக் கடைப் பிடிப்பதைக் காணலாம்.

கடந்த ஆறு சுற்றுச் சமாதான பேச்சுக்காலத்திலும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கூட புலிகள் இயக்கத்திற்கு, எதிராகச் 'சர்வதேச வலைப்பின்னல்' என்ற ரீதியில் சர்வதேசரீதியாக புலிகள் இயக்கத்திற்கு எதிராக சர்வதேச நாடுகளை ஒன்றுதிரட்ட செயற்பட்டு வந்தமை தெரிந்ததே.

இதே போன்றே, புலிகள் இயக்கத்தைச் சர்வதேச நாடுகளில் தடை விதிக்கச் செய்வதன் மூலம் புலிகள் இயக்கத்தை அரசியல் ரீதியாக ஒடுக்க சந்திரிகா தலைமையிலான அரசு செயற்பட்டு வந்தது.

ஆனால் பின்னர் புலிகள் இயக்கத்துடன் அமைதி முயற்சி ஆரம்பிக்கப்பட்ட சூழலில் பல நாடுகள் புலிகள் இயக்கத்தோடு அரசியல் ரீதியிலான தொடர்புகளை ஏற்படுத்திய போதும் தடை விதிக்கப்பட்ட நாடுகளுக்கு புலிகளுடனான வீரியமிக்க செயற்பாடுகளுக்குத் தடையாகவே இருந்தது.

எனவே தான் தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில் புலிகள் இயக்கத்தை புறம்தள்ளி எவராலும் செயற்படமுடியாது.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டுமாயின் புலிகள் இயக்கத்தை அரசியல்ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ ஒடுக்குவது பற்றி சிந்திப்பதை விடுத்து தமிழ் மக்களுக்கே உரித்தான உரிமைகளை வழங்க முன்வரவேண்டும்.

இத்தகைய இதய சுத்தியுடனான வழிக்கு வராத எந்த அரசும் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியாது என்பதே உண்மை.

**சிறி இந்திரகுமார்**



நன்றி டெய்லிமிரர்

# ஜே.வி.பி-மகிந்த கூட்டு பொறி யாருக்கு____?

ஜே.வி.பியுடனான மகிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தம் சிறிலங்காவின் அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவருமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது சிறிலங்காவில் ஆட்சியமைக்கும் பலம் வாய்ந்த ஒருகட்சி பிளவுபடும் சாத்தியம் உள்ளதா? என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது.

இக்கூட்டணி குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி என்ற ரீதியில், ஜே.வி.பியுடனான ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட மகிந்தராஜபக்ஷவிடம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கம் கோரியிருப்பதும், அதனை மகிந்தராஜபக்ஷ பொருட்படுத்தாதது போல இருப்பதும் அவ்வாறு ஒரு பிளவு ஏற்படுமா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

இதற்குப் பதிலானது கட்சித்தலைவிக்கா அல்லது சனாதிபதி வேட்பாளருக்கா அதிகாரம் அதிகம். என்பதைப் பொறுத்து அமையலாம். அல்லது இந்நாள் சனாதிபதிக்கா அல்லது எதிர்கால சனாதிபதிக்கா செல்வாக்கு அதிகம் என்பதைப் பொறுத்து அமையப்போகின்றது.

இதிலே சனாதிபதி சந்திரிகாவிற்கு உள்ள பலவீனத்தை ஜே.வி.பி இவ்வாறு சுட்டிக்காட்டுகிறது. அதாவது அதிகாரத்தை முற்றுமுழுதாக இழந்துபோகவுள்ள சனாதிபதி சந்திரிகாவிற்காக பிரதமர் மகிந்தராஜபக்ஷ தம்முடனான ஒப்பந்தத்தை கைவிடமாட்டார் என்கிறது ஜே.வி.பி.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இப்பொழுது உள்ள பலம் கட்சித் தலைமைத்துவம். உண்மையில் இதுவும் அவருக்குப் பக்கபலமாக இருக்கிறதா? என்பதைத் தெரிந்துகொள்வதனால் இந்தப் பிரச்சினை பலமடைந்து மகிந்தராஜபக்ஷவும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பலப்பரீட்சையில் இறங்கவேண்டியிருக்கும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மகிந்த ராஜபக்ஷவை தனது பூரண விருப்பத்துடன் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவில்லை என்பது வெளிப்படையான விடயம். ஆனால் மகிந்தராஜபக்ஷவுக்கு கட்சிக்குள் இருந்த செல்வாக்கு காரணமாகவே சந்திரிகா அவரை சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவேண்டி வந்தது. எனினும் ஜே.வி.பியுடனான கூட்டை சு.க.விலுள்ள மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் எவ்வகையில் எடுத்துக்கொள்கிறார்கள்? என்பதற்கு தெளிவான செய்திகள் அறியப்படவில்லை. ஆனால் தமது ஆதரவாளர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களின் ஆலோசனையைப் பெறாது இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றுக்கு மகிந்தராஜபக்ஷ சென்றிருக்கமாட்டார்.

எனவே இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஜே.வி.பி எதிர்ப்பாளர்களைச் சமாளிக்க வேண்டிய தேவையே மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது. அதற்கு அவருக்கு உள்ள பலம் அவர் எதிர்காலத்தில் சனாதிபதியாகக் கூடியவர் என்பதாகும். எனவே அதிகாரத்தை இழக்கப்போகும் சந்திரிகா குமாரதுங்கவைவிட கட்சியினர் தம் பக்கமே சாய்ந்து நிற்பர் என மகிந்தராஜபக்ஷ எண்ணக் கூடும்.



ஆனால் கட்சியின் தலைமைப் பதவியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பலமானவராக இருந்து வேறொருவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அறிவிப்பாராயின் மகிந்த ராஜபக்ஷ என்ன நடவடிக்கை எடுப்பார்? தனித்துப்போட்டியிட முயல்வாரா? அப்பொழுதும் ஜே.வி.பியின் ஆதரவு அவருக்குக்கிடைக்குமா?

அல்லது இவ்விடயத்தில் சந்திரிகா குமாரதுங்க ஏதாவது நடவடிக்கை எடுக்க முற்பட்டால் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து அவர் தூக்கி வீசப்படுவாரா? அந்த அளவிற்கு கட்சியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு செல்வாக்கு உண்டா?

இவ்வாறான கேள்விகளுக்கெல்லாம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கப் போகும் அடுத்தகட்ட நடவடிக்கை பதிலளிப்பதாக இருக்கும். கட்சியில் உண்மையிலேயே மகிந்தராஜபக்ஷவுக்கு செல்வாக்கு அதிகமாயின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எதுவும் எடுக்காது வெற்றிகரமாகப் பின்வாங்கக்கூடும். இதற்கும் அவர் சில காரணங்களைக் கூறக்கூடும்.

ஆனால், ஜே.வி.பியுடனான கூட்டிலிருந்து மகிந்தராஜபக்ஷ பின் வாங்குவதற்கான சந்தர்ப்பம் மிக மிகக் குறைவு என்றே கூற வேண்டும். ஏனெனில் சமாதானக் கூச்சலுடன் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயலும் ரணில் விக்கிரமசிங்கவுடன் போட்டியிட அவர் தேர்ந்தெடுத்திருக்கும் ஆயுதம் "பௌத்த சிங்கள இனவாதமே'' அதனைக் கைவிட்டுவிட்டு தேர்தலில் போட்டியிட வேறெதுவும் அவரிடமில்லை. ஏனெனில் அவரும் சமாதானம் பேசினால்/அதாவது 1994இல் சனாதிபதி சந்திரிகா செய்தது போல் சமாதான உச்சாடனம் இப்போது அக்கட்சிக்குப் பயன்தராது. எனவே அவர் ஜே.வி.பியுடனான கூட்டைக் கைவிட வேண்டிய தேவையுமில்லை.

எனவே கட்சி வெளிப்படையாகப் பிளவுபடாதிருக்க அடக்கி வாசிக்கவேண்டியவராக சனாதிபதி சந்திரிகாவே உள்ளார்.

எவ்வாறாயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுக்கு இப்பொழுது சாத்தியக் கூறுகள் பலமாகவே உள்ளன. ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் தனித்து நின்று போட்டியிட்டு வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கை அக்கட்சியில் எவரிடமும் இல்லை. இவ்வாறான பலவீனமான நிலைமைதான் கட்சி பிளவுபடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றது.

ஆனால், இப்பிளவு காரணமாக உடனடிப் பயன்பெறப்போவது ரணில் விக்கிரமசிங்கதான் என்பது வெளிப்படை. ஆனால் அது ஜே.வி.பிக்கும் பயனை விளைவிக்கும்.

உண்மையில் ஜே.வி.பி எதிர்பார்ப்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சி . பிளவுபட்டு சின்னாபின்னமடைய வேண்டும் என்பதையே. ஜே.வி.பி அக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததே சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பிளவு படுத்திச் சிதறடித்து தான் மூன்றாவது நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்கு முன்னேறவே.

ஜே.வி.பியைப் பொறுத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ.தே.கவும் ஒரே தரத்தினவே. ஆனால் ஐ.தே.கவுக்குள் ஊடுருவுவதைவிட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஊடுருவி அதனைச் சிதைப்பது சுலபமாக இருந்தமையால் அவ்வேலையை செய்து கொண்டிருக்கிறது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோல்வியுறுமானால் ஜே.வி.பி தனது இலக்கைச் சுலபமாக அடையும்.

ஆனால் இந்தப் பொறிக்குள் இருந்து சு.கவும் இனிமேல் விலகிக்கொள்ள முடியாதளவுக்குச் சிக்கிக்கொண்டு விட்டமையானது இப்பொழுது வெளிப்படுகின்றது. இதிலிருந்து மீள்வதற்கு அக்கட்சியின் 54வருட அனுபவம் உதவுமா? என்பது விரைவில் தெரியவரும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

**இந்நிலையில் கொழும்பில் எவரும் பேச்சுவார்த்தைபற்றி ஆக்கபூர்வமாக சிந்திப்பதாகத்தெரியவில்லை. எவ்வாறு அதிகாரத்தினை கைப்பற்றுவது என ரணில் ஒரு புறம் ஓடித்திரிய, மகிந்த என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க இனவாதக் கட்சிகள் தங்களது வழமையான பாணியில் கூச்சலிட ஏனைய சில கட்சிகள் யாருக்கு ஆதரவு வழங்குவது, எவருடன் அதிகம் பேரம்பேசலாம் என்ற நிலையில் அவர்கள் காணப்பட, இந்நேரத்தில் எவர் பேசுவதற்கு வரப்போகிறார்கள்?**

# அதிகாரத்தில் குறியாயிருக்கும்போது சமாதானம் பற்றி எவர் சிந்திப்பார்?

பேச்சுவார்த்தை எங்கு நடக்கும்? எப்போது நடக்கும்? என்ற கேள்விகள் தற்போது மக்கள் மத்தியிலிருந்து மெல்ல மெல்ல விலகிச்செல்ல பேச்சுவார்த்தை நடக்குமா? என்ற கேள்வி மக்களிடம் அதிகமாக எழுப்பப்பட்டு வருகிறது.

பேச்சுக்கான நிலைமைகள் அசாதாரணமாக்கப்பட்டு யுத்தம் ஒன்றுக்கான நிலைமைகளை நாடு எதிர்கொள்ளவிருப்பதாகவே அனைவராலும் கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. நாட்டின் யதார்த்தமும் இவற்றினையே பிரதிபலிக்கின்றன. மேலும் அரச தரப்பினரைப் பொறுத்தவரை பேச்சுக்கள் தொடர்பில் ஓர் அசமந்தப் போக்கே காணப்படுகிறது.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை எப்பொழுதுமே தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினை நாட்டுப்பிரச்சினைக்குக் கொடுப்பதில்லை. அதனையே தற்போதும் செய்து வருகின்றனர்.

எனவேதான் மக்கள் முன் இப்போது யுத்தம் ஒன்றுக்கான நிலைமைகளே அதிகம் எழுகின்றன. நாட்டின் தற்போதைய யதார்த்தமும் இதனையே வெளிப்படுத்துகின்றது.

அதாவது யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் பேசுவதற்கே சிங்கள தேசம் இவ்வாறு கடும் போக்கினை கடைப்பிடித்து வருகிறது என்றால் இனிப் பிரச்சினை தொடர்பில் தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை தொடர்பில் என்ன செய்யப் போகிறார்களோ? இதைவிட சிங்கள இனவாதிகளின் கூச்சலுக்குப் பயந்தாற்போல் நோர்வேயின் பரிந்துரைகளும் தமிழ் மக்களுக்கு பல்வேறு வழிகளில் நம்பிக்கை இழக்கக் காரணமாக அமைகின்றன.

மேலும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தாயகப்பகுதிகளில் குறிப்பாக கிழக்குப் பிரதேசத்தில் நிராயுதபாணிகளாக அரசியல் பணிகளில் ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த தாக்குதல்கள் அண்மைக் காலத்தில் எல்லை மீறிப்போக விடுதலைப் புலிகளின் தலைமையால் அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அழைக்கப்பட்டமை எல்லாம் மக்கள் மத்தியில் ஒரு அசாதாரண நிலைமையினையே தோற்றுவித்துள்ளது எனலாம்.

இதைவிட அதிகாரத்தை பிடிப்பதற்கு தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் அதிரடி நடவடிக்கைகள் அதாவது அதிகாரத்தினைப் பிடிப்பதற்கு எவரது கால்களிலும் விழத் தயாராக இருக்கும் மகிந்த, தமிழினம் தொடர்பில் கடும் போக்குக்கொண்ட இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி மற்றும் ஜாதிகஹெல உறுமயவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் என்பன இன்றைய அசாதாரண நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

மேலும் இவ் ஒப்பந்தத்தை விமர்சிக்காதவர்கள் இல்லையென்றே கூறலாம். ஒரு புறம் ஐ.தே.கட்சி இவ் ஒப்பந்தங்களை கடுமையாக விமர்சிக்கிறது. அது அதன் அரசியல் உள் நோக்கங்களோடு மறுபுறம் இந்நாட்டில் சமாதானத்தை விரும்புகின்றவர்கள் அனைவராலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. மகிந்த வெற்றி பெறும் பட்சத்தில் இவ் ஒப்பந்தத்தின் வெளிப்பாடு இந்நாட்டில் ஒரு யுத்தத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்பதே பெரும்பாலானவர்களின் கருத்துக்கள்.

இந்நிலையில் சந்திரிகாவுக்கும், மகிந்தவுக்கும் இடையில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் சந்திரிகாவை பெரிதும் பாதிப்படையச் செய்திருக்கிறது. அதாவது மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் போதே சுதந்திரக்கட்சி விதித்த நிபந்தனைகளில் ஒன்று ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரக்கூடாது என்பது. இதை மகிந்த புறக்கணித்துவிட்டார். அதுமட்டுமன்றி அவ் ஒப்பந்தம் தொடர்பில் சந்திரிகா அனுப்பிய காரசாரமான கடிதம் தொடர்பில் தாங்கள் அலட்டிக்கொள்ளவில்லை என பிரதமரின் செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் சந்திரிகாவை சீற்றத்திற்கு உள்ளாக்கி உள்ளது. அதைவிட இது சந்திரிகாவுக்கு பெரும் தன்மானப் பிரச்சினையாகவும் காணப்படுகிறது. எனவே சிலவேளைகளில் சந்திரிகா சு.கட்சி தலைவி என்ற முறையிலும், அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற வகையிலும் மகிந்தவின் சனாதிபதி வேட்பாளர் என்ற நிலையை மாற்றவும் கூடும்.

எனவே இந்நிலையில் கொழும்பில் எவரும் பேச்சுவார்த்தை பற்றி ஆக்கபூர்வமாக சிந்திப்பதாகத் தெரியவில்லை. எவ்வாறு அதிகாரத்தினை கைப்பற்றுவது என ரணில் ஒரு புறம் ஓடித்திரிய, மகிந்த என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று தலையைப் பிய்த்துக்கொண்டிருக்க இனவாதக்கட்சிகள் தங்களது வழமையான பாணியில் கூச்சலிட ஏனைய சில கட்சிகள் யாருக்கு ஆதரவு வழங்குவது, எவருடன் அதிகம் பேரம்பேசலாம் என்ற நிலையில் அவர்கள் காணப்பட, இந்நேரத்தில் எவர் பேசுவதற்கு வரப்போகிறார்கள்?

எனவே பேச்சுவார்த்தை என்பது சனாதிபதித் தேர்தலுக்கு முன் சாத்தியப்படாத ஒன்று. அப்படியாயின் சனாதிபதித் தேர்தலுக்குப் பின் சாத்தியப்படுமா என்றால் சந்தேகமே. ஏனெனில் மகிந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் ஜே.வி.பி மற்றும் ஜாதிகஹெல உறுமயவின் நிபந்தனைகளை புறந்தள்ளமுடியாது. பேச்சுவார்த்தையை விட அவருக்கு அதிகாரமே முக்கியமான விடயமாக இருக்கும்.

மாறாக ரணில் அதிகாரத்திற்கு வந்தால் அவர் வழமைபோல் திட்டமிட்டு காலத்தினை கடத்துவார். அதாவது தமிழீழத் தேசியத்தலைவர் கடந்த மாவீரர் தின உரையில் கூறியது போல் ஒரு அரசியல் வெறுமையை நன்கு திட்டமிட்டு ஏற்படுத்திக் காலத்தை இழுத்தடிப்புச் செய்வதில் முனைப்புக் காட்டுவார்.

எனவே சனாதிபதித் தேர்தலுக்கு முன் பேச்சுவார்த்தை இடம்பெறப்போவதில்லை, அதேநேரம் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் எவ்வித மாற்றமும் நிகழப்போவதில்லை. இந்நிலையில் வரும் மாவீரர் நாள் உரையை இவற்றுக்கெல்லாம் ஒரு தீர்க்கமான முடிவோடு எதிர்பார்க்கலாம்.

**மு.தமிழ்ச்செல்வன்**

# முல்லை மக்களின் விடுதலைக் கோசம்














நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நகரம் உணர்வூர்வமாக எழுச்சி கொண்டிருந்தது. சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும் தமிழீழ எழுச்சிப்பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டும் காணப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கிற்கு வருகின்ற அனைத்து வீதிகளிலும் மக்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் படத்துடனும், தமிழீழம் பொறிக்கப்பட்ட கொடிகளுடனும் திரள்திரளாக வந்து மைதானத்திற்குள் குவிந்துகொண்டிருந்தனர்.

மக்கள் அனைவரினதும் முகங்களில் உணர்வுபூர்வமான மகிழ்ச்சி தெரிந்தது. தாங்கள் சிங்கள தேசத்திடமிருந்து பிரிந்து சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஓர் உணர்வு அந்தமக்களிடம் காணப்பட்டது. "ஒரு தலைவன் வருகைக்காய் காத்திருந்தோம் எங்கள் தலைவன் பிறந்தான்" எனும் பாடலை அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் இசைக்க மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் தாங்களும் எழுந்து நின்று கரகோசம் செய்து ஆடிப்பாடியபோது ஒன்று தெளிவாகப் புரிந்தது. தமிழ் மக்களிடம் விடுதலை உணர்வு எந்தளவுக்கு கொளுந்துவிட்டெரிகின்றது என்று.

மாலை நான்கு மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது. நிகழ்வுக்கென விசேடமாக அமைக்கப்பட்டிருந்த அரங்கு அதன் நடுவிலே சிரித்த முகத்துடன் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படம், மற்றும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் என்போர் அவர்களுடைய இடங்களில் அமர்ந்திருக்க அரங்க முன்புறமாக திரண்டிருந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் படத்துடனும் தமிழீழம் பொறிக்கப்பட்ட படத்துடனும் மாலை நேரம் சுடும் வெயிலையும் பொருட்படுத்தாது அமர்ந்திருக்க, தமிழீழ காவல்துறையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட, புலிகளின் குரல் வானொலி நிகழ்வுகளை ஒரு புறம் நேரடி ஒலிபரப்புச் செய்துகொண்டிருக்க, பல்வேறு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் தங்களின் வேலைகளில் செயற்பட்டுக்கொண்டிருக்க,

பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை இந்திய இராணுவத்துடனான சமரில் வீரச்சாவடைந்த அன்றைய முல்லைமாவட்டத்தளபதி பசீலனின் தாயார் நல்லையா-தங்கம்மா,துணைப்படை மாவீரர் மயில்குஞ்சனின் மனைவி மற்றும் எல்லைப் படை மாவீரர் மதியாபரணத்தின் மனைவி ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை வன்னிப் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த மாவீரர் மேஜர் மாறனின் தந்தை சின்னத்துரை அவர்கள் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து 16 எழுச்சிச் சுடர்களை சிலபிரமுகர்கள் ஏற்றிவைக்க நிகழ்வு அரங்கிற்கு மாறியது.

அரங்கில் தேசிய எழுச்சிச் செயலணித் தலைவர் கிருஸ்ணபிள்ளை தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் ஆசியுரையினை இந்துமத குருக்கள் ஒருவரும், வண.யாழ். ஆயரின் ஆசிச் செய்தியினை ஆயர் ஒருவர் வாசிக்க, முல்லைத்தீவு பள்ளிவாசல் மௌவி முத்துமுகமது ஆசியுரையை வழங்கினர். இவர் தனது உரையின் முடிவில் தமிழ் மொழி பேசுகின்ற மக்களின் தாயகத்தை . மீட்டெடுக்க தாமும், தமிழீழத் தேசியத் தலைவரின் வழியில் ஆயுதம் ஏந்துவதற்குத் தயாராக உள்ளோம் எனக் கூறியபோது மக்களிடம் இருந்து வந்த கரகோசம் எம்மை மெய்சிலிர்க்க வைத்தது.

தொடர்ந்து அரங்கச் செயற்பாட்டுக்கு இடையிடையே பிரமுகர்களின் உரைகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. சர்வதேச சமூகம் இனியும் கண்மூடி இருந்துவிட முடியாது. எங்கள் குரலுக்கு பதில் சொல்ல வேண்டும் எனவும் தடுமாறும் பேச்சினால் பயனேதுமில்லை. தமிழீழமே எங்கள் மூச்சு என வூனதிர முல்லை மக்கள் எழுப்பிய குரல் உணர்வுபூர்வமாக இருந்தது.

வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக நேற்று முன்தினம் முல்லை மக்களின் எழுச்சிப் பிரகடனத்தில் தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச சமூகத்திடம் கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் இன்று தென்னிலங்கையில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ் பேசும் மக்கள் சனநாயக வழியில் அடையும் எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது. இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானது மிக மோசமான நிலையில் உள்ளதை நாம் சர்வதேச சமூகத்திற்கு முல்லையில் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம் என நேற்று முன்தினம் எழுச்சி மாநாட்டில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

• எழுச்சிப் பிரகடனத்தின் போது மக்கள் தமது இரு கைகளையும் உயர்த்தி உரத்த குரலில் ஒலித்ததைப் பார்த்த போது வியப்பாக இருந்தது. தொடர்ந்து இவ் எழுச்சிப் பிரகடனச் செய்தி தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இவ்வாறு நிகழ்வுகள் நிறைவுபெற மக்கள் ஏதோ ஒரு திருப்தியுடன் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

**வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக நேற்று முன்தினம் முல்லை மக்களின் எழுச்சிப் பிரகடனத்தில் தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக் கொண்டு எமது மரபு வழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச சமூகத்திடம் கேட்டுக்கொள் வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.**

— தமிழ் —

***பெரும்பாலும், 1990,1996,1997 காலப்பகுதியில் யாழ்ப் பாணத்தை ஆக்கிரமித்துள்ள சிங்களப் படைகளால் கைதாகி பின் இன்று வரை எந்தத் தகவல்களும் இன்றி இருப்பவர்களின் எண்ணிக்கை 594 ஆக காணப்படுகிறது. இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அஞ்சுகின்றது.***

"நான் கலியாணம் செய்து ஒரு மாதத்தால இராணுவத்தால் என்ர கணவர் கைது செய்யப்பட்டவர். இதுவரைக்கும் எந்த முடிவும் இல்லை. இந் நிலையில் நான் தாலியுடனும், பொட்டுடனும் தொடர்ந்து இருக்கிறதா இல்லையா இருப்பதா என்ன செய்வதென்றே தெரியவில்லை பெண் ஒருவரின் நிலை".

"டெஸ்டிற்கு அப்பிளிக்கேஷன் போடுறதிற்கு பள்ளிக்கூடத்திற்கு போன பிள்ளையை பிடிச்சுப் போட்டாங்கள். நாங்கள் போய் நாவலடி ஆமிக்காம்பில் கேட்டனாங்கள் விசாரிச்சுப் போட்டு விடுறம் என்று சொன்னவங்கள். இன்று வரை ஒரு தகவலும் இல்லை (அழுதபடி) இப்படியொரு தாய்.

சொல்லி மகளை கூட்டிட்டு போனவங்கள். அதுக்குப் பிறகு மருமகன் போனவர் மகளை பற்றி விசாரிச்சு விட்டு வாறன் என்று அவரையும் காணயில்லை இன்று வரைக்கும் எந்தத் தகவலும் இல்லை"

வேறொரு தாய்

"இரண்டு பொம்பிளப் பிள்ளைகளுக்கு ஒரு பெடியன் எவ்வளவு பாசத்தோடு வளர்த்த நான் (தேம்பித் தேம்பி அழுகிறார்) சுற்றி வளைப்பில

இருக்கின்றனவா? இல்லையா என்று கூடத் தெரியாமல் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர்.

தங்களுடைய பிள்ளைகள் உயிருடன் இருக்க வேண்டும். மீண்டும் தங்களுடன் வந்து சேர வேண்டும் என்று கோயில்களுக்கு நேர்த்திகள் வைத்துக் கொண்டும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பெரும்பாலும்,

சாதாரணமாக அனைவருக்கும் தெரிந்த விடயம் என்றும் காணாமல் போனோர் தொடர்பாக விசாரிக்கவென நிர்ணயிக்கப் பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும், ஏனோதானோவென தமது விசாரணை அறிக்கையைத் தயாரித்துள்ளது எனவும் கூறுகின்றார்.

இதைவிட யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைகள் குழுவிற்கு இராணுவத்தினர் தங்களது ஒத்துழைப்பினை வழங்கவில்லை என்பது காணாமல்போனோர் விசாரணை குழுத் தலைவர் கலாநிதி தேவநேசன் நேசையா அவர் களுக்கும் அப்போ தைய யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி பலகல்லவுக்கும் இடையில் பரிமாறப் பட்ட கடிதங்கள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

இந்நிலையில் தான் இவ் விசாரணைக்

இருந்திருந்தால் ஏன் வருபவர் களை நாய் கடிக்கின்றது. அம்மணியின் ஆட்சியின் போது தானே செம்மணி விவகாரமே அரங்கேறியது. இந் நிலையில் அவர் எப்படி காணாமல் போனோரின் உறவுகளைச் சந்திப்பது.

இது இவ்வாறிக்க இந்தக் குடும்பங்களில் பெரும்பாலானவை மிக வறிய குடும்பங்களே. மேலும் ஒரு சிலர் இச் சம்பவத்தால் மனநிலை பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர். காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் 18-30 வயதிற்குட்பட்டவர்களே. இதை விட ஒரே குடும்பத்திலிருந்து இரண்டு மூன்று பேரும் காணாமல் போயுள்ளனர்.

எனவே இக் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் நிலை? அவர்களின் எதிர்காலம்? காணாமல் போனவரின் நிலைப்





# காணாமற் போனோர் எப்போது மீள்வர்..?

## யாழ்ப்பாணத்தில் ஏங்கும் உறவுகள்

மற்றொரு தந்தை

"என்ற பேக்கரியில் வேலை செய்து கொண்டிருக் கேக்கே வந்து பிடிச்சுட்டு போனவங்கள். நாங்கள் போய் கேட்கும் நேரமெல்லாம் அந்தக் காம்பில இந்தக் காம்பில என்று சொல்லிச் சொல்லி காலத்தை கடத்திட்டாங்கள். இப்ப என்ற மகன் உயிரோட இருக்கின் றான? இல்லையா? என்றே தெரியாமல் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக் கிறம்"



ஒரு மனைவி யின் புலம்பல

"இரவு எட்டு மணி இருக்கும் வீட்டில் ரீ.வி.பார்த்துக் கொண்டிருந்தம். அந்த நேரம் முகமூடி அணிந்த ஒருவருடன் ஆறு ஆமிக்காரர் வந்து என்ர.... அவரை (அழுகிறார்) பிடிச்சிட்டு போனவங்கள் அவ்வளவு தான். நாங்களும் எத்தனையோ தடவை போய் கேட்டிட்டம் ஒரு பிரயோசனமும் இல்லை"

இன்னுமொரு தாய்

"பின்னேரம் ஒரு ஆறு மணி இருக்கும் வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருந்த னாங்கள். அந்த நேரம் ஆமிக்கா ரர் வந்து எல்.ரி.ரி.ஈயுடன் தொடர்பு இருக்குதெண்டு

இந்த நாசமா போனவங்கள் (இராணுவத்தினரை) கூட்டிட்டு போனவங்கள் இதுவரையும் ஒரு செய்தியும் இல்லை."

அக்கா ஒருவர்

"தம்பி சந்தைக்கு கறி வேண்டிட்டு வாறன் என்று போனவனை ரோட்டில் வைச்சு ஆமிக்காரர் பிடிச்சிட்டாங்கள். சனம் கண்டுட்டு வந்து எங்களிட்ட சொல்லி நானும் அம்மாவும் போய் பக்கத்தில் உள்ள காம்பில கேட்டனாங்கள். ஆனா தாங்கள் அப்படியொரு வரையும், பிடிக்கேல்லை என்று சொல்லிட்டாங்கள்"

இன்று யாழ்ப்பாணத்தில் மட்டும் 600 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பல உறவுகள் இவ்வாறு தான் புலம்பிக் கொண்டிருக்கின்றன. இராணுவத்தால் கைதாகிக் காணாமல் போன தமது உறவுகள் உயிருடன்

1990,1996,1997 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித் துள்ள சிங்களப் படைகளால் கைதாகி பின் இன்று வரை எந்தத் தகவல்களும் இன்றி இருப்பவர்களின் எண்ணிக்கை 594 ஆக காணப்படுகிறது. இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அஞ்சுகின்றது.

ஏனெனில் மண்டை தீவில் மட்டும் 300 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கலாம் என அச்சம் கொள்ளப்படுகிறது. இங்குள்ள ஆறு கிணறுகளில் மனித எலும்புக் கூடுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அதில் இரண்டு கிணறுகள் தோண்டப்பட்டு 70 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டது என்றும் ஏனைய கிணறுகள் தோண்டுவதற்கு முன் அப்பிரதேசம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு விட்டது எனவும் கூறப்படுகின்றது.

தோண்டப்பட்ட இரண்டு கிணறுகளிலும் மனித எலும்புக்கூடுகள் நின்றபடி இருந்தது எனவும் இது கைது செய்தவர்கள் உயிருடன் கிணற்றுக்குள் இறக்கி மண் போட்டு கொலை செய்திருக்கலாம் என வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக செயலாளர் ந.மாலதி அவர்கள் தெரிவிக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் இலங்கையில்இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகள் மனித உரிமை மீறல்கள் மலிந்து கிடப்பதாகவும், இது

**சுழியன்**

குழுவின் அறிக்கை வெளி வந்தது.

மேலும் கைதாகி காணாமல் போனோர், பாதுகாவ லர் சங்கத்தின் அன்னையர் முன்னணித் தலைவி செ.கனகாம்பிகை கூறும் போது:-

இதுவரை காலமும் தாங்கள் பல்வேறு வழிகளில் பல்வேறு போராட்டங்களை நடத்தி விட்டதாகவும், ஆனால் எவ்வித பலனும் கிடைக்க வில்லை எனவும் பெரும்பாலான காணாமல் போனோரின் உறவுகள் விரக்தியடைந்து காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார். இதை விட சிறி லங்கா சனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கு அனுமதி கேட்ட போது அவர் அப்போது சுனாமி வேலைப் பளுவில் இருப்பதாக காரணம் கூறி மறுத்து விட்டார் எனவும் கூறினார்.

இன்று யாழ்ப்பாணத் தில் 600 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போனமைக்கு சந்திரிகாவும் ஒரு காரண கர்த்தாவே. எஜமான் கவனமாக

பாடு? காணாமல் போனோரின் உறவுகளுக்கு சிறிலங்கா அரசு அளிக்கும் பதில் என்ன? மனித உரிமைகள் பேசுகின்ற உள்ளூர், வெளியூர் அமைப்புக்கள் இதற்கு இனி என்ன நடவடிக்கை கள் எடுக்கப் போகின்றன? காணாமல் போனோர் தொடர் பில் இறுதியாவும், உறுதியாக வும், என்ன முடிவெடுக்கப் போகின்றார்கள்? என்ற அங்கலாய்ப்பே இன்று மக்களிடம் காணப்படுகிறது.

எனவே மேற்படி கேள்வி களுக்கு விடை கிடைக்கும் முன் மீண்டும் அப்படியொருநிலைமை வருமா? என இப்போது மக்கள் அஞ்சுவதாக தெரிகிறது. இலங்கையைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் மட்டுமல்ல மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தால் கைதாகிக் காணாமல் போயுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

| பிரதேசம் | காணாமல் போனோர் எண்ணிக்கை |
|---|---|
| சங்கானை | 22 |
| சாவகச்சேரி | 269 |
| யாழ்ப்பாணம் | 72 |
| காரைநகர் | 01 |
| கரவெட்டி | 06 |
| கோப்பாய் | 60 |
| நல்லூர் | 66 |
| பளை | 11 |
| பருத்தித்துறை | 01 |
| சண்டிலிப்பாய் | 22 |
| தெல்லிப்பழை | 04 |
| உடுவில் | 24 |
| வேலணை | 32 |
| ஏனைய பிரதேசங்கள் | 04 |
| மொத்தம் | 594 |

**★★★★★ அன்பு என்பது வெறும் உணர்ச்சியோ இன்னொருவர் மீதான கவர்ச்சியோ அன்று, மனத்தளவில் மட்டுமான ஒரு விருப்பமோ, நாட்டமோ, எண்ணமோ, கனவோ அன்பு ஆகிவிடாது. இது காதல் என்று அர்த்தங்கொள்ள முடியாதது. மாறாக காதல் என்பது அன்பு வசப்பட்ட ஓர் உறவு; ஒருவர் இன்னொருவர் மீது கொள்ளும் உயிரார்ந்த ஈடுபாடு; அகம் - புறம் என ஒருவரது ஆளுமையின் முழுமையையும் இன்னொருவர் பால் ஈர்த்து இணைத்திடும் தொடர்ச் செயற்பாடு. ★★★★★**



# காதல் மோசடிகளும் சமுதாயச் சீரழிவுகளும்

ஒவ்வொரு மனிதனும் உறவின் பாதுகாப்புப் பேழையான குடும்பம் எனும் பல்கலைக்கழகத்தில் பிறந்து, வளர்ந்து, ஆளாகி நிற்பவன்தான். சுரங்களின் சங்கமத்தில் சுகமான இராகம் பிறப்பெடுக்கின்றது. மலரின் மணம் வீசும் உண்மை இதயங்களின் சங்கமத்தில் பல மனங்களைக் கவரும் காதல் உதிக்கின்றது.

ஜான் ரஷ்யன் எனும் கவிஞர் காதல் என்பது அன்பின் அடிநாதம் என்பதனை வெளிப்படுத்துகின்றார்.

'' அன்பு இதயங்கள், அழகுத் தோட்டம்.

அன்பு எண்ணங்கள், அடிவேர்கள்;

அன்பு மொழிகள், அலர் மொக்குகள்;

அன்புச் செயல்கள், அருங் கனிகள்.

இப்படியாக இன்று எம்மவரிடையே காதல் என்பது கருத்திலெடுக்கப்படுகின்றதா? 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்பதாக விளையாட்டும், வேடிக்கையும், பரிகாசமும், கற்பனாவாதங்களும், வியாபாரமும் கொண்டதாக சமூகத்தை சீரழித்துக் கேளிக்கைகளிலும், அடாவடித்தனங்களிலும், கோஷ்டி மோதல்களிலும் கருத்தூன்றிக் கவனம் செலுத்துவதுடன், எம் தமிழர் புலத்திற்குள் இயற்கை வனப்பு நிறைந்த பிரதேசங்களில் எமது கலாசாரத்தை ஒழுக்கப்பண்புகளைக் காற்றிலே பறக்கவிடும் கைங்கரியங்களில் முனைப்புடன் அக்கறை காட்டி வருகின்றது.

அன்பை மனிதன் அனுபவபூர்வமாக உணர்ந்தறிய முடியும். ஆனால் அறிவியல் பூர்வமாக அதனை ஆராய்ந்தறிவது அரிது. அண்மைக்காலத்து உளவியலாளர்கள் சிலர் அன்பின் சாரத்தை, அதன் மையப் பண்பினை சுட்டிக்காட்ட முனைகின்றனர். அவர்களது கண்ணோக்கில் அன்பு என்பது தன்னைப் போல் ஏன் சிலவேளைகளில் தன்னை விட அதிகமாக, இன்னொருவரை வாழவைக்க, வளரவைக்க, மகிழ்விக்க, நிறைவாக்க ஒருவர் விரும்பிச் செயற்படுவது. இதனை ஹாரி ஸ்டாக் சல்லிவன் எனும் உளவியலாளர் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றாா. "தம் நிறைவையும் பாதுகாப்பையும் போல் இன்னொருவரின் நிறைவும் பாதுகாப்பும் ஒருவருக்கு முக்கியமாகும்போது அங்கே அன்பு நிலவுகிறது''

எம்மவர்கள் எல்லோரும் போன்று காதலிக்கிறார்கள். குச்சுகள், முடக்குகள், சந்திகள், ஆள்நடமாட்டமில்லாத பகுதிகளில் தாம் சந்திக்கிறார்கள். என்னவோ கதைக்கிறார்கள்? இது எதுவரை?

அன்பு என்பது வெறும் உணர்ச்சியோ இன்னொருவர் மீதான கவர்ச்சியோ அன்று, மனத்தளவில் மட்டுமான ஒரு விருப்பமோ, நாட்டமோ, எண்ணமோ, கனவோ அன்பு ஆகிவிடாது. இது காதல் என்று அர்த்தங்கொள்ள முடியாதது. மாறாகக் காதல் என்பது அன்பு வசப்பட்ட ஓர் உறவு; ஒருவர் இன்னொருவர் மீது கொள்ளும் உயிரார்ந்த ஈடுபாடு; அகம்-புறம் என ஒருவரது ஆளுமையின் முழுமையையும் இன்னொருவர் பால் ஈர்த்து இணைத்திடும் தொடர்ச் செயற்பாடு.

அன்பின் இந்தச் செயற்பாட்டுத் தன்மையை வலியுறுத்துகின்றார் எரிக்.ஃப்ராம் எனும் உளவியல் அறிஞர், "ஒருவர் இன்னொருவர் பால் காட்டும் செயலாக்கமான அக்கறையே அன்பு''

காதலர் அன்பு இருவரும் பரஸ்பரம் அறிமுகமாகி, தம் எண்ணங்களை, விருப்பு வெறுப்புக்களைப் பரிமாறி ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதிலேயே ஆரம்பமாகி வலுப்பெற்று ஈருயிரும் ஓருயிராகி அன்பில் திளைக்க முடியும். மனிதாபிமானக் காதலாக, அன்புரிமையாக "நீயே என் அனைத்தும் என்று நான் அழைக்க, என்னில் சிறிது மட்டுமே எஞ்சி நிற்கட்டும்'' என்பதாக அமைவதிலேயே உண்மையும் நேர்மையும் உரமாகி விடுகின்றன.

தொலைக்காட்சி மெகாத் தொடர்களில் வரும் காதல்களும், திரைப்படங்களில் தோன்றும் கற்பனைக் காதல்களும் இன்று பல காதல் கதாநாயகர்களை வில்லாதி வில்லர்களாக எம்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றது. ஆபாசங்கள் நிறைந்த காதல்களும், பாலியல் துஷ்பிரயோகங்களும், சிசுக்கொலைகளும், வாழா வெட்டிகளும் நிறைந்த ஒரு சமூகமாக மாறிக்கொண்டிருக்கின்றது. கடும் சித்திரவதையில் இருப்பதல்ல நரகம். காலியான இதயத்தில் இருப்பதே, நரகம். இந்த வெறுமையான இதயங்களில் அன்பிற்கு இடமேது? வாழ்வுடன் வதைபட வடிகால்கள் ஏராளம். ''காதல் வாழ்க'' என்று கூறுபவர்களுக்கு, நேர்மை வழிதான் ஒரே இலக்கு. சமுதாயச் சீரழிவே காதல் என்பதாயின் கலாசார சீரழிவே காதல் என்பதாகிவிடும்.

''காதல்'' சிலபேருக்கு கனியாகி, பல பேருக்கு கலாட்டாவாகி, கொலையாகி, தற்கொலையாகி, பிரிவாகி, விளையாட்டாகி எத்தனையோ விதத்தில் அவரவர் வசதிக்கேற்ப கருத்தும், பொருளும் காணக்கிடைக்கிறது. காதல் வசப்பட்டு பிரிந்துபோகும் நிலைமைகளில் முற்றும் முழுதாக பாதிக்கப்படுவது பெண்தான். சமூகத்தில் ஓரங்கட்டப்படுகிறாள். பல பழிச் சொற்களுக்கு ஆளாகின்றாள். அவளது வாழ்வு பறிபோய் விடுகின்றது. அவளது முன்னேற்றத்திற்குப் பல வகையிலும் இழுக்கு ஏற்படுகின்றது.

உண்மைக் காதலர்களிடையே "நீ விரும்புவது கிடைக்கும்போது நான் விரும்புவதும் கிடைக்கின்றது. உனக்குத் தரும்போது நானும் பெற்றுக்கொள்கின்றேன். உன் கனவுகளை நான் காண்கின்றேன். என் கனவுகளை நீ காண்கின்றாய்'' எனும் உறவு அவர்களுக்கிடையே நிலவுகிறது. "உனக்காகவா அல்லது எனக்காகவா'' எனும் எதிர்மறையான கேள்விக்கு அதில் இடமில்லை. ஏனெனில் உனது, எனது என்பவை நமது என ஆவதே உண்மையான காதல் உறவு. இரு விழிகளின் ஒரே பார்வை, இரு இதயங்களின்

## இனியவள்

ஒரே பாடல், இரு வாழ்வுகளின் ஒரே பாதை என்பதே காதலன்-காதலி உறவு.

ஆண்களும் பெண்களுமாய் கற்றவர்கள், மற்றவர்கள் எனும் பாகுபாடின்றி காதலித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதாக ஊர், ஊராகச் சுற்றி வருகின்றார்கள். பெண் 'கெட்டுப்போகின்றாள். ஏனெனில் கெட்டுப்போவாள்' எனும் பட்டம் பெண்ணுக்கு மட்டுமே உரியதாக மரபுகள் மனித மனங்களின் சாசனத்தில் உயிலை எழுதி உள்ளன. ஆணிலும் பிழை, பெண்ணிலும் பிழை.

எதை? (யாரை?) எங்கே? எப்படி? காதலித்தார்கள்? தெருத்தெருவாக, சினிமாக்களில், பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், மறைவிடங்களில் உங்கள் புரிந்துணர்வு ஆளை ஆள் பார்த்து உண்டதும் உறங்கினதும் பேசினதும் இன்னுமென்னவாகிலும் அவற்றுடன் ஆழம் கண்டதா? அழகா? கல்வியா? பணமா? எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளார்ந்தமான ஆத்மார்த்தக் காதலா?

கையைப் பிசைந்து கொண்டு உணர்ச்சி வேகங்களால் ஒவ்வொருவரும் செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் என்ன? ஒழுங்கு முறையில்லாத ஒரு அநியாயமாக எல்லோருக்கும் தெரிந்தும் தொடர்புபட்டவர்களுக்கு அது பற்றிய சிந்தனை யாது? அடுக்குமொழி பேசி ஆரணங்குகள் தயவைக் கவரும் ஆடவர்கள், விலகி விடுவதற்கும் விளக்கங்கள் கூறி, விரைவில் தம்மை விடுவித்துக் கொண்டும் விடுகின்றார்கள். இப்படியாக காதலனே கடவுள் எனும் கற்பனையில் மிதந்த பெண்கள், அநீதி பொய்ச்சான்று, துரோகம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நிலையான அன்பு சார்ந்த இல்லறத்தை எப்படிக் காண்பார்கள்?

காதல் உணர்வு பூர்வமாக உணர்த்தப்பட வேண்டியது. ஒரு பெண்ணின் வாழ்வைச் சீரழிக்கும் நோக்குடன் போடும் காதல் வேடங்களுக்கு ஒருக்காலும் அவள் பொறுப்பாளியாக முடியாது. காதல் அனுபவத்தை ஆண், பெண் இருவரும் பெறுவதிலேயே உண்மைக் காதல் தங்கியுள்ளது. பொய்ப்பூச்சு வண்ணத்தைப் போக்கி, பொருட்களை உள்ளபடி வடித்துக் காட்டி, உணர்த்தும் உறைந்த உரைகல்லாகக் காதல் அமைய வேண்டுமேயொழிய ஒரு பெண்ணின் வாழ்வுடன் விளையாடும் வகையில் நீண்டுசெல்வதும் அவமானங்களைச் சுமத்தி அவளது சுயகௌரவங்களுக்கு நேர்மையற்ற விதங்களில் களங்கம் ஏற்படுத்துவதும் காதலாகாது.

காதல் என்பது திருமண நோக்குடைய அன்பு. ஆனால் அது பெரிதும் உணர்ச்சி பூர்வமானது. புனிதமான உறவை வலியுறுத்துவது. அடுத்தவர் வீட்டை எட்டிப் பார்ப்பதும் ஆளணிகளின ஆவேசமான விசாரணைகளும் வன்முறைகளும் காதலாகாது.

இரு உள்ளங்களின் ஆழ்ந்த அன்புப் பிணைப்பு என்று கூறப்படும் காதல், வெள்ளைக் கடற்கரைகளில் உல்லாசப் பயணிகளின் விடுதிகளின் போக்கில் கலாசாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், மது போதைகளில் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதும் இப்போது சகஜமாகி விட்டது. வயது வேறுபாடின்றி, முதிர்ச்சி அடையாத பராயத்தினர் கூட தவறான பாதைகளில் காதல் எனும் உறவு திசை திரும்பியிருக்கின்றது.

(மிகுதி அடுத்தவாரம்)

# காரசாரம்

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" ஏனெனில் "ஒழுக்கம் விழுப்பம் தரலால்" என்று பொய்யாமொழிப் புலவர் சொல்லியிருக்கிறார். ஒழுக்கமான வாழ்க்கைக்கு வழிகாட்டவென்றே ஏராளமான சமயப் பெரியார்கள் தோன்றி, தர்ம உபதேசங்களும் செய்து வந்துள்ளனர். மகாபாரதம் என்ற பெரும் நூலை இதற்காகவே வியாசர் எழுதினார். இதேபோன்று ராமாயணமும் அமைக்கப்பட்டது. இந்த இரு பெருங் காப்பியங்களுக்கும் பெரிதாக வித்தியாசமில்லை.

வீரபாண்டிய கட்டபொம்மன் படத்துக்கும் முல்லைமணி எழுதிய பண்டாரவன்னியனுக்கும் எவ்வளவு ஒற்றுமையோ அவ்வளவு ஒற்றுமை இராமாயணத்துக்கும் கந்தபுராணத்துக்கும் உள்ளது. இராமாயணத்துக்கும் மகாபாரதத்துக்கும் பெருமளவு காரணம் அதாவது கருப்பொருள் என்ன என்று பார்த்தோமானால் இரண்டுக்கும் ஒரு எழுத்துத்தான் வித்தியாசம் வரும். ஒன்று பெண். மற்றது மண். பெண்ணுக்கும் மண்ணுக்கும்தான் பெரும் போர்கள். நடந்திருக்கின்றன. என்றாலும் இவ்விரு நூல்களும் ஒழுக்கத்தை வலியுறுத்தும் உத்திகளையே பெருமளவு விபரிக்கின்றன.



# இலக்கில்லாத இளைஞர்கள்..!

பலதார வழக்கம் நடைமுறையில் இருந்தபோது ஒருதாரம் என்ற வழக்கத்தை ஒழுக்கமாகக் கொண்டான் ராமன். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைமாற்றி ஐவருக்கு ஒருத்தி என்ற நெறியை அறிமுகப்படுத்தியது பாரதம். பாரதத்தில் ஏக பத்தினியுடன் தருமன் வாழ்ந்தாலும், அந்தப் பத்தினியைப் பொறுத்தவரை அவன் தருமம் பிழைத்தவனாகவே இருக்கின்றான். இதேபோன்று ராமன் பெரிய வீரனாகச் சித்திரிக்கப்பட்டாலும், வாலியை மறைந்திருந்து கொன்றான். அங்கே அவன் கூறிய நியாயம் வாலியின் வாதத்திறமையில் அடிபட்டுப் போகிறது. "நீ உன் தம்பியின் மனைவியுடன் எப்படி வாழலாம்..." என்ற ராமனின் கேள்விக்கு, வாலி, "நாங்கள் விலங்குகள் அப்படித்தான் இருப்போம், நீ மனிதன் தர்மத்தை மீறலாமா, என்கிறான்.

இப்படி தர்ம நூல்கள் அனைத்தையும் கிளறினால் அதர்மமே விரவிநிற்பதையும் முடிவில் அனைவரும் அழிந்துபோவதையும் காணலாம். ஒரு மனிதன் அகந்தையுடன் வாழும் காலம் மிகக் குறுகியது. அரசன் ஒருவன் உபதேசம் பெற விரும்பினான். அவன் ஒரு யோகியைத் தேடிச்சென்றான். வாயிற்காவலனாய் நின்ற சீடனிடம் "போய் உன் குருவிடம் நான் வந்திருப்பதாகச் சொல்" என்றான் குருவோ, என்னைப் பார்க்க வருவதாயின் நான் செத்த பிறகு வரச்சொல்" என்று அனுப்பிவிட்டார். அரசன் திகைத்துப்போனான். இவர் செத்தபிறகு நான் யாரிடம் உபதேசம் பெறுவது என்று பலமுறை யோசித்தபின் தன் மந்திரியிடம் ஆலோசனை கேட்டார். மந்திரி அரசனிடம் 'நான்' என்று அவர் கூறியது உங்கள் அகங்காரத்தை என்றான்.

அகில உலகையும் ஒரு குடையின் கீழ் கட்டியாள்வேன்,எனச் சூளுரைத்துப் புறப்பட்ட அலெக்ஸாண்டரும், ஹிட்லர், முசோலினி, இடிஅமீன் போன்ற சர்வாதிகாரிகளும் சாதித்ததில்லை. ஆனால் தனி மனிதர்களான இன்றைய இளைஞர்கள் ஒரு கொடியில் இணைந்ததால் தான் சர்வதேசமே வியக்குமளவுக்கான வெற்றிகளைத் தமிழர் குவித்தனர். இப்படி உலகம் போற்றும் வரலாறு ஒருபுறம் நிற்க, கேவலமான வாழ்க்கையையும் வாழ்ந்துகொண்டிருக்கும் இளைஞர்கள் பெருகிக்கொண்டிருக்கின்றனர். பெருகிக்கொண்டிருக் கின்றனர் என்பதைவிடப் பெருக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பதே சரி.

வன்முறைகள் தேவைதான். அது எப்போது, எங்கே என்பதுதான் முக்கியம். கண்ணுக்கு முன்னால் உங்கள் பொது எதிரி உங்கள் நிலத்தில், உங்கள் வீட்டில், உங்கள் வடலிகளுக்குள் ஒன்றுக்குப் போகிறான். நீங்கள் மாயா உலகில் சஞ்சரிக்கும் ஈனப்பிறவிகளாக, சொந்த மக்களுடன் கோஷ்டி சண்டைகளில் ஈடுபடுகிறீர்கள். முன்னர் தம்முடைய சாதிப் பெருமை குறையக்கூடாது என்பதற்காக, வறிய மக்களுக்கு தங்கள் கிணற்று நீரைக் கொடுக்க மறுத்த மக்கள், கிணற்றுக்குள் ஒயிலை ஊற்றியும், பாம்பை அடித்துப்போட்டும் சாக்கடைகளைக் கொட்டியும் தங்களை வெளிப் படுத்தினர்.

இன்று அந்தக் கிணறுகள், வீடுகள், வளவுகள் எல்லாம் எங்கிருந்தோ வந்த அப்புஹாமி, சிறிசேனா, களுமல்லி என்ற அந்நியர்களின் கழிப்பிடங்களாகியுள்ளன. எங்கே அந்த சொந்த இன மக்களிடம் காட்டிய கெட்டித்தனத்தை இப்போது காட்டலாமே.

முடியாது. நீங்கள் பார்க்கிற சினிமாவில் வரும் அடிமட்ட இளைஞனொருவன் கொழுத்த பணக்காரனின் பெண்ணை விரட்டி விரட்டிக் காதலிப்பான். பதினைந்து பேரானாலும் காற்றில் பறந்து பறந்து உதைப்பான். கதாநாயகி அவனை விழிகள் விரியப் பார்ப்பாள். பிறகு காதல். காதலுக்காக அவளுடைய பெற்றாரையும் கொல்லலாம். இப்படி இப்படித்தான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள இளைஞர்கள் கனவு காண்பதை நிறைவேற்றத்துடிக்கிறார்கள். கத்திகள், பொல்லுகள், சைக்கிள் செயினுகளுடன் போய் குழுக்குழுவாக மோதுகிறார்கள். வெறுமனே இச் சீரகேடுகளுக்கான பழியை இளைஞர்கள் மீது போட முடியாது. இதற்கான முழுக் குற்றத்தையும் நாம் பெற்றோர், உற்றார், ஆசிரியர்கள் என்று பிரித்துத்தான் போடவேண்டும்.

ஆண் பிள்ளைகள் மட்டுமல்ல பெண் பிள்ளைகள் மிக மோசமாக நடந்துகொள்கிறார்கள். 1950களில் ஒழுக்கம் என்பது ஒரு பாடமாக போதிக்கப்பட்டது. அதன் பின் சிறிமாவோ அம்மையாரின் காலத்தில்தான் அந்தப் பாடநேரம் சமயக்கல்விக்காக ஒதுக்கப் பட்டது. சமயங்களின் மறுபெயர் மதம். மதங்களைப் போதிக்கப் போதிக்க பிள்ளைகளின் கவனம் சிதறிப் போயிற்று. ஒரு கையில் சிகரெட்டைப் பிடித்துக் கொண்டு புகை ஊதியபடியே பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களை நாம் காண்கிறோம். மாணவிகளையும் மலேசியாவில் காணலாம். இதற்கு வழிகாட்டி புகைத்தபடியே பேப்பர் திருத்திய ஆசிரியர். புகைத்தபடி பேப்பர் வாசிக்கும் அப்பா. கல்விச் செலவுடன் சிகரெட்டுக்கும் பணம் வழங்கும் அம்மா. பெரியவர்கள் முன் கால்மேல் கால்போட்டு அமரக்கூடாது அவர்களை எழுந்து வரவேற்கவேண்டும். அவர்களது சொற்களை மதித்து நடக்க வேண்டும். என்பதெல்லாம் இப்போதுள்ள பிள்ளைகளுக்கு கிண்டலான விடயம்.

ஒரு நிகழ்ச்சி மண்டபத்தில் அவதானித்த விடயம். அந்த மண்டபத்தை இருவர் ஒழுங்குசெய்தனர். கதிரைகளை நிற வரிசையாக அழகாக அடுக்கி மேடையை ஒழுங்குபடுத்தி ஒரு பூச்சாடியும் வைத்தனர். பங்குபற்ற வந்தோர் அமர வேண்டியதுதானே. அதுதான் இல்லை. தத்தமது விருப்புக்கேற்ப கதிரைகளை மாற்றியும் தமது நண்பர்களுடன் உரையாட வசதியாகத் திருப்பியும், ஒரு சிறு மணித்துளிகளுள் முழுவதும் குலைந்துபோனது. முன் வரிசையில் இருக்க விரும்பாத ஒரு இளம்பெண் முன் வரிசையில் மட்டுமே மீதமிருந்த கதிரையைத் தூக்கிக்கொண்டு பின்னே போனார். கொஞ்சங்கூட இந்தச் செய்கைக்காக அவர்கள் யாரும் வெட்கப்படவில்லை.

மண்டப ஒழுங்கைச் செய்தவர்கள் சோர்ந்து போனார்கள். இவர்கள் மட்டுமல்ல இளைஞர்கள் மத்தியில் இவ்வித அலட்சியப்போக்கு நிரம்பவே உள்ளது. எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாக மாற்றும் மனோபாவம் இது. இந்த மனோபாவம் நிரம்பப் பெறுமதியானது. வெளிநாடுகளிலிருந்து உழைக்காமலே இவர்களுக்குப் பணங்கிடைக்கிறது. அதை செலவிடு வதற்கான வழிவகைகளை இவர்கள் தேடிக்கொண்டேயிருக்கிறார்கள்.

எனவே, மது, மாது என்று மனமலைகிறது. அல்லது தாங்களும் வெளிநாடுகளுக்குப் போய் உழைக்கலாமே என நினைக்கிறார்கள். பலலட்சம் செலவழித்து வெளிநாடுகளுக்குப் போனாலும் சில வாரங்களில் திரும்பிவந்துவிடுகிறார்கள். காரணம் இவர்களால் வேலை செய்ய முடியாது. அதாவது உடலுழைப்பு முடியவே முடியாது. இப்படி இளைய சமுதாயம் நாசமாகிப்போவதற்கு விட்டேத்தியாக வரும் பணம் காரணமாகிறது. எப்படியோ ஒருஉந்துருளி இல்லாமல் எந்த இளைஞனாலும் வாழமுடியாது என்பது அவனதும் அவனது பெற்றோருடையதும் மேலான அபிப்பிராயமாகும். ஆகையால் வெளிநாட்டு வருமானமில்லாவிட்டாலுங்கூட காணியை விற்றுத் தம் மகனுக்கு ஒரு உந்துருளி வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் இருக்கிறார்கள். தமது பிள்ளைகளின் எதிர்காலம்பற்றி எந்தப் பெற்றாரும் இன்று நினைப்பதேயில்லை. இந்த வகையில் இலக்கில்லாமல் அலையும் இளைஞர்கள் ஒரு இலக்குடன் இணையும் போது அவர்கள் எவ்வளவு பெரிய சக்தியாக மாறுவார்கள். உலகையே புரட்டிப் போடவல்ல சக்தியை பாழும் கிணற்றில் தள்ளும் பெற்றோர்களின் இலக்கு என்ன.

"பிள்ளை என்னோடயே இருந்தாக்காணும் அவன் நாசமாப்போனாலும் பறவாயில்லை" கண்ணெதிரே தெரிந்தே பிள்ளைகளை நஞ்சூட்டும் பெற்றோர் பற்றி இளையவர்கள் எச்சரிக்கையாக இருங்கள்.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாச்சி

டேய் பொடியா உங்கயென்ன செய்யிறாய் ங. எட்டிப்பாரடா வேலிக்கால சண்டைய. ஆஞ்சோஞ்சு பாராதவன் செயல்தான் சாகக் கடவ தெண்டு, ஆர் கண்டது. உப்பிடிக் கொழுவு மெண்டு. நாலு பிரதம மந்திரிய வச்சு ஆட்சிசெய்த எங்கட அம்மா இப்ப பல்லுப்புடுங்கின பாம்பு மாதிரி இருந்து சீறிக்கொண்டிருக்கிறா. அதென்னடா என்ர குடும்பத்தில இருந்து ஒருவர் செய்த ஒப்பந்தம் எனக்குத் தெரியாம இருக்கும். ம்... இன்னும் முடிசூட்டுவிழா நடக்கயில்ல.

இளவரசுப் பட்டங்கட்டினதுக்கே இவ்வளவு தூரம் எழும்பியிருக்கினம் எண்டா முடிசூட்டி விட்டால் இலங்கைய வித்துப்போடுவினம்.

இல்ல தெரியாமத்தான் கேக்கிறன் சுனாமிக்கு வந்த காசையும் சாமானுகளையும் பேசிப்பறைஞ்சு பங்கிட்டு மூண்டு கட்சியும் பிரிச்செடுக்கயில்லையே... என்னடா முழுசிறா... எட பிக்கு ஒருத்தனுக்கு குடுத்த சாமானுக்குள்ள பொண்டுகள் போடுற உள் உடுப்பும் கிடந்ததா மெல்லே... ங... சரியடா அவயளுக்கும் அதுகள் தேவைதான். இல்லையெண்டு சொல்லயில்ல. மற்றப்படி பொது உடைமையில ஊறினவை.

லொறிக்கணக்கில கொண்டுபோய் ஒதுக்கினதும் வெளிச்சத்துக்கு வந்ததுதானே. அதோட... எந்த இந்தியாவ வெளியால போண்டு சொல்லிப் படுகொலையள் செய்து திரிஞ்சினமோ அதே இந்தியாவ இப்ப "அம்மியடியில தள்ளின சூத்தைமிளகும் கறிக்குதவுற மாதிரி" அடிமடிக்க கட்டி வைச்சிருகினமெல்லே.

என்ன அன்பிலயெண்டே நினைக் கிறியள். சும்மா விடடா-எதிரிக்கெதிரி எனக்கு மெதிரி-அவளவுதான்-பின்ன மகிந்தரும் கொஞ்சமே "ஹெல்பிங்" அம்மாந்தோட்டை நிதியத் துக்க கொண்டே சுனாமிக்காசைக் கொட்டயில்லையே. பின்ன-'பீரொம்ஸ்'பீ-ரொம்ஸ் எண்டு அதைத் துலைச்சுக்கட்ட ஒற்றைக்காலில ஏன் நிக்கினம். வடக்கு கிழக்குக்கு ஒரு சொட்டும் சுவறவிடாம எல்லாத்தையும் சுவாகா போடத் தான். பின்ன இதெல்லாம் கிடக்கட்டும் லெச்சனுக்கு இந்தியாவும் சிலவழிக்கிது. ஓ.சும்மா கிட. தான்போக வழியக்காணேல்லயாம், மூஞ்சூறு விளக்குமாத்தக் காவிச்சாம். அவயட பிரச்சினையள், சாதிச்சண்டையள் உலகம் முழுக்க நாறுது அதுக்க, அடுத்தவீட்டு சண்டைக்க மூக்கவிடுகினம்.

அது சரி இப்ப மகிந்தருக்கும் ஜே.வி.பிக்கும் நடந்த ஒப்பந்தத்துக்கும், சுதந்திரக் கட்சிக்கும் எந்தத் தொடர்புமில்லையாமே. அம்மா தெளிவாச் சொல்லிப் போட்டா-தனிப்பட மகிந்தர் செய்த, செய்யப்போற ஒப்பந்தமொண்டும், கட்சிக் கொள்கையில வராதெண்டு போட்டா-பின்ன இன்னும் சிஹெல உறுமயவோடயும் ஒரு பத்து நிபந்தனை வச்சு ஒப்பந்தம் செய்யப் போறாராம். என்னத்துக்கு நாட்டின்ர பிரச்சினையத் தீக்கத் தான் எண்டும் மேலால ஒரு அறிக்கை விட்டிட்டார். என்ன யோசனை-குழப்பமாக் கிடக்கே. வீடு பத்தவைக்கிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் குடுகிற பிரதம மந்திரி. ம்... இப்ப பிரதமர் தானே- மகிந்தரக் கட்டிஅவுக்க இனி ஆராலும் முடியாது. பாவம். கண்ட என்னத்தயோ கவிண்டிருந்து திண்ட மாதிரி, நாட்டுக்க ஒவ்வாதெண்டு தெரிஞ்சே மனிசன் நடந்து போட் டுது. என்ன எப்பிடியும் சனாதிபதிக் கதிரையில இருந்து போடோணு மெண்டு குறுக்கு வழியளப் பாத்துத்திரியிறார்.

ஆனாப் பொடியா இன்னும் மகிந்தரில போட்ட சுனாமி ஊழல் விசாரணையள் முடியேல்ல. வலு ஹொந்தாயாத் திரியிறார். இன்னும் சனாதிபதி அதிகாரத்தை வச்சிருக்கிற அம்மாவை என்ன நினைச்சிட்டார். இல்லை பரம்பரைக்கு வாக்களிக்கிற சிங்களச் சனத்தையுந்தான் மறந்திட்டாரோ- உதில்லையடா பிரச்சினை இப்ப மகிந்தருக்கெதிரா யூ.என்.பி மட்டுமே பிரசாரஞ் செய்யப்போகுதெண்டு நினைக் கிறாய். இல்லையடா இல்லை. அம்மாவும், அம்மாவின்ர ஆதரவாளருந்தான். மூக்குப் போனாலும் பறவாயில்ல எதிராளிக்கு சகுணப் பிழை வந்தாக் காணுமெண்ட நல்ல நோக்கம் ஆருக்கில்லை.

நாங்கள் முதலே ஒற்றையாட்சிக்கதானே பிரபாகரனோட கதைக்க இருந்த நாங்கள். இதையேன் இப்ப புதிசாக் கதைக்கோணும். அப்ப மக்கள் முன்னணியும், சுதந்திரக் கட்சியுமில்லாம... நீங்கள் தனிய வெளிக் கிட்டாச்சோ. அப்பிடியெண்டா நீங்கள் கட்சியின்ர சட்டதிட்டங்கள மீறிற்றியள் எண்டு அம்மா கத்துகத்தெண்டு கத்திப்போட்டா... ஞாயந்தானே- சண்டைதொடரும்.






# இத்தனை நாளாய் எங்கிருந்தாள்?

– சந்திரகாந்தா –

மேட்டு லயத்துக் கருப்பையா வீட்டில் ஒப்பாரி கேட்காத நாளே இல்லை. எப்பவுமே இளவு வீடு போலத்தான்! அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கெல்லாம் இது பழகிப்போய் விட்டது. ஒநாய் ஒநாய் என்ற கதைதான். இனி யாரும் உண்மையிலே செத்தால் கூட எவரும் திரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்.

மாரியாயி கருப்பையாவைக் கைப்பிடித்து வந்த நாளில் இப்படி இல்லை. மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள், என்பது கழிய கருப்பையாவின் அடாவடித்தனங்கள் அரங்கேறின. ஆரம்பத்தில் எவ்வளவோ சகித்துக் கொண்டு எல்லா வற்றிற்கும் அவள் விட்டுக் கொடுத்துக்கொண்டு அவன் மனம் கோணாமல் நடந்துகொண்டாள். அவனை எப்படியும் திருத்தி வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என அவள் கட்டிய கோட்டைகள் காலப்போக்கில் இடிந்து சரிந்தன.

காலைக் கடுங்குளிரில் எழுந்து சமையல் செய்து, அவனுக்கான பணிவிடைகளையும், வயோதிப மாமியாரினதும் கடமைகளையும் முடித்துக்கொண்டு கொழுந்துக் கூடையைச் சுமந்துகொண்டு மலை முகட்டுக்கு ஓடி ஏறத்தான் நேரம் சரியாக இருக்கும். கொஞ்சம் தாமதித்தால் கூட கங்காணி எரிந்து விழுவான். எனவே இரவில் நேரத்திற்குப் படுத்து உறங்கினால்தான் மறுநாள் அதிகாலையில் எழுந்து வேலை செய்ய முடியும். பிள்ளைகளின் வேலைகள் இன்னொருபுறம்.

பகல் முழுதும் மலையில் தேயிலைச் செடியுடன் உறவாடும் கருப்பையா, மாலையானதும் மதுபானத்துடன் உறவாடத் தொடங்கிவிடுவான். புளித்த கித்துள் கள்ளை மூக்கு முட்டக் குடித்து விட்டு ஊர்வம்பு பேசிவிட்டு லயம் திரும்ப இரவு நெடுநேரம் கடந்துவிடும். வந்தவுடன் வாய்க்கு ருசியாக எல்லாம் இருக்க வேண்டும். அவளும் தன்னால் இயன்றவரை கணவன் மனதறிந்து சமைத்து வைப்பாள்.

சூரைக் கருவாட்டுக் குழம்பு என்றால் கருப்பையாவுக்கு அலாதி பிரியம். ஒரு கோப்பை சோறு கூடுதலாக உண்பான். உப்புப் போட்டு வெயிலில் காய வைத்ததனால் முறுகிப் போன கருவாட்டை நீரில் ஊறவைத்து பின் ஒவ்வொன்றாக எடுத்துத் துண்டு துண்டாக வெட்டிக் குழம்பு வைத்திருந்தாள்.

'என்ன ... கொழம்பாடி வெச்சிருக்கிறே?... காரமும் கம்மி... புளியும் இல்லை...ஒங்கம்மா ஒனக்கு சமையல் கத்துத் தந்த லட்சணம் இது தானாடி?' என்று சகட்டு மேனிக்கு விளாசும் அவனது ச... வார்த்தைக... னதில் ஊசியாய் ... மழையில் கழுவுண்ட தேயிலைச்செடி போல பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவள் முகத்தில், மலையுச்சிக் கார்முகில் போல் இருள் படரும்.

“ நீங்க உழைச்சுத்தார லட்சணத்தில மிளகாயும் வாங்கலாம், நல்ல புளியும் வாங்கலாம்'' தூளாய் எரிக்கும் அவளது சூடான எதிர் வார்த்தையில் மனதில் புளிப்பேறும். “வாயாடி காட்டுறா? படிச்ச திமிருடி ஒனக்கு! வாய்க்கொழுப்பு மெத்திப் போச்சு! ஆம்பிளை எங்கிற மட்டுமரியாத இல்லாம... நாயே!'' அவனது இழிவான வார்த்தைகள் அவளது உச்சந்தலையைப் பிடித்து உலுக்குவது போல மூளையில் மின் பொறி பறக்கும். எனினும் முரண்பாட்டை தவிர்க்க தனது சீற்றத்தை அடக்கிக் கொண்டு இராமனுக்கடங்கிய சீதையாய் மௌனம் காப்பாள். எனினும் அவன் சீண்டிக் கொண்டே இருப்பான்.

ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் அடிமைப்பட்டிருப்பதை அண்மைக்காலமாகத்தான் மாரியாயி புரிந்துகொண்டிருக்கிறாள். எனினும் பரம்பரை பரம்பரையாக வந்த பண்பாட்டுப் போலிகளின் தாக்கங்கள் முழுமையாக விடைபெறாததனால் அவள், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் எனஅடங்கிப் போனாள்.

“இன்னும் கொழம்பு விடடி...'' அவனது வார்த்தைகள் தடுமாறி ஒலிக்கும்.

“ கொழம்பு முடிஞ்சிடுச்சிங்க...''

“ எல்லாத்தையும் நீயே திண்டிட்டியாடி?'' கணவனுக்கு உணவு பரிமாறிவிட்டு பசியோடு காத்திருக்கும் அவள் மனது தவிக்கும். ஒருவாறு கணவனைச் சமாதானப் படுத்தி, படுக்கவைத்து விட்டு மீதமிருப்பதைத் தானும் கொட்டிக் கொண்டுவிட்டு அவள் பாத்திரங்களைக் கழுவி முடிய முன்னமே, “ வாடி என் ராசாத்தி...'' என்று கோபமும், செல்லமும், அதிகாரமும் கலந்து மோகத்துடன் அழைக்கிறபோது அவளால் ரசிக்க முடிவதில்லை.

அவளைப் பற்றி ஏதாவது அக்கறையான விசாரிப்போ, மனம்விட்ட உரையாடல்களோ இன்றி கருப்பையா அழைக்கையில் அவள் பலிக்கடாவாகத் தன்னை உணர்வாள். எனினும் பொறுமையைக் கடைப்பிடித்தபடி அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தபடி அவனருகே அமர்ந்து, 'இந்தமுறை இன்னும் முழுகலிங்க' என்று தன் மனதிலிருந்த குதூ கலத்தைக் கூறினாள்.

“ஏண்டி முழுகல... சீயாக்காய் அரப்பு இல்லியா?... சாம்பு வாங்கி முழுகடி...'' புரிந்தா, புரியாமலா பதிலலிக்கிறான் என்று தெரியாத தவிப்பில், மீண்டும் பாதி நாணமும், பாதி மகிழ்வுமாக, “அதில்லீங்க... மாச சுகயீனம் வரப் பிந்தியிடுத்துங்க... எங்களுக்கு இன்னொரு குழந்தை கிடைக்கப் போருதுங்க...'' என்றாள்.

அவன் மகிழ்ந்து அவளை அரவணைப்பான் என்ற அவள் எதிர்பார்ப்பு சிதறிப்போக “என்னடி புதுக்கதை சொல்லுறே?... யாரடி அப்பன்?... சின்னத்துரையா, கிளாக்கரா?'' அவனது கேள்வி நாரசமாக ஒலிக்க மனதுக்குள் இடி இடித்தது. சொல்லி மாளாத்தகிர்ப்பும் தவிப்பும் உணர்வுக் குரல்வளையை நெரிக்க, அவன் முகத்தில் காறி உமிழ வேண்டும் போன்ற வெறுப்புடன் ஓர் அற்பப் பதரைப் பார்ப்பது போல அவனை நோக்கினாள். 'இவனெல்லாம் ஒரு மனிசனா?' மனதில் எழுந்த கேள்வி எரிமலையாய் நரம்புகளைச் சுண்டி இழுக்க.

'அடப்பாவி' என்று ஆற்றாமையினால் சினந்து உரைத்தாள்.

'எனக்கொரு மகன் பிறப்பான்... அவன் யாரைப் போலவோ இருப்பான்...' பாடல் ஓங்காரமாய் ஒலிக்க, கருப்பையா பாயில் உழன்றுகொண்டிருந்தான்.

மாரியாயிக்கு பிடுங்கித் தின்னும் ஆத்திரம்! சட்டென்று தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் எரிகொள்ளி! இயல்பு மாறி முகத்தில் புயலின் கோரம்.!

“அடப்பாவி மகனே... நீ இதுவும் சொல்லுவே... இன்னும் சொல்லுவே... பண்டிக்குத் தூக்கத்திலையும் மலம் திங்கிற நினைப்புத் தான்...'' அசிங்கத்தைப் பார்க்கும் அருவருப்பான முகச் சுழிப்போடு நெடுமூச்செறிந்தாள்.

அவனது வார்த்தைகளின் கடுமையினையோ, அவை அவளில் ஏற்படுத்தி இருக்கும் தாக்கத்தினையோ உணராதவனாக போதையோடு அவன் இருந்தான்.

“ உன் பிள்ளையில்லை அப்புறமேன் என்னைக் கூப்பிடுறே?''

' என்னடி உளர்ரே?... நானாடி சொன்னேன்? உன் வவுத்தில என் பிள்ளைதான் வளரும்...' இப்படிக் கூறுகையில் கூட அவளது நெஞ்சத்து எரிமலை தணிந்தபாடில்லை.

தன் இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்காக, இவன் நாக்கைப் புரட்டி இதுவும் சொல்வான், இன்னும் சொல்வான்

என்பது அவனுடன் இத்தனை நாள் வாழ்ந்த அவளுக்குத் தெரியாதா என்ன?

சில வருடங்களுக்கு முன், திருமணமான புதிதில் கருப்பையா நல்ல மனநிலையில் இருக்கிறபோது, எப்போதாவது கையில் பணமும் இன்றி, கடனுக்கும் கிடைக்காமல், வாங்கித்தரவும் யாருமின்றி குடிக்காமல் வீடு வருகின்ற நாட்களில் ஒரு இனிய காதலியை அரவணைப்பது போல அவளோடு அன்பைச் சொரிவான்.

இப்படியான ஆனந்தமான வேளைகளில் கொஞ்சும் வார்த்தைகளினால் அவளை வருடியபடி 'எப்போ எனக்கொரு பிள்ளை பெத்துத் தரப்போறே?' என்பான். மாரியாயியும் குதூகலத்துடன் 'உங்களுக்கு ஆண்பிள்ளை வேணுமா? பெண்பிள்ளை வேணுமா? என்று பதில் கேள்வி தொடுப்பாள்.

''உன்னைப் போல அழகா, குணமா ஒரு பொம்பிளப் பிள்ளை முதல்ல பெத்துக் கொடு...''

''ஐயோ வேண்டாங்க... பெண்ணாய்ப் பிறந்து நான் படுற கஷ்டம் போதும்... எனக்கு ஆம்பிளப்பிள்ளைதான் வேணும்...''

''அப்படின்னா இரண்டையும் பெத்துக்கோ...''

''ஐயே... ஆசையைப் பாருங்க... இரண்டு ஒரேயடியாப் பெத்தா எப்படி வளர்க்கிறதாம்?''

இப்படியான குதூகலம் தினமும் தொடர்வதில்லை.

இப்போது அடுத்தடுத்துப் பிள்ளைகள் பிறந்ததோடு அடியோடு மாறிப்போனான். அடிக்கடி அளவுக்கதிகமாகக் குடித்து விட்டு வந்து வாய்ச்சண்டையில் ஆரம்பித்து இறுதியில் அவளைக் கதறக் கதற அடித்துத் துன்புறுத்துவான். எதுவித காரணமும் இல்லாத அவனது வசவுகளினாலும், அடியுதைகளினாலும் அவள் உடலெங்கும் உட்காயங்கள் வலியேற்படுத்தி மறுநாள் எழும்பவே முடியாமல் ரணமேற்படுத்தும்.

மாரியாயி கணவனால் தாக்கப்படுகின்ற பல சமயங்களில் மாமிக் கிழவிதான் தள்ளாத வயதிலும் எழுந்தோடி வந்து மேலும் அடி விழாதபடி தடுத்து நிற்பாள். ''இதென்னடா வேலை... உன்னை நம்பி வந்த பெண்ணை சீரும் சிறப்புமா வச்சுக் காப்பாற்றாட்டிலும் பரவாயில்லை... அடியுதை என்று போட்டு வாட்டுறியே? சரியாக நீ ஓங்கப்பன் மாதிரித்தான்...''

தனது இளமைக்கால சித்திரவதை நினைவுகளில் கிழவி தோய்ந்து அழுதபடி, விசும்பிக் கொண்டிருக்கும் மருமகளுக்கு ஆறுதல் சொல்வாள். தொடரும் வரலாறுக்கு ஒரு முடிவே இல்லையா என்று எண்ணாமல், தலைவிதியை நொந்து கொண்டு ஒத்தடம் கொடுப்பாள்.

மாரியாயிக்கு, மாமியின் ஆறுதல் வார்த்தைகள் பாலை வார்த்தாலும், கருத்தில் மாமியாரிடம் இருந்து வேறுபட்டே நிற்பாள். அண்மைக்காலமாக தோட்டப்புறங்களில் மகளிர் அமைப்புக்கள் நடாத்தும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு வருவதால் பெண் விடுதலை பற்றிய சிந்தனைகளே மனதில் பதிந்திருந்தன.

தமிழீழ காவிய போர்தனில் பெண்களின் நிஜக்கதைகளும் மனதை ஆக்கிரமித்து இருந்தன. இதனால் மாரியாயியின் மனதில் புதிய சிந்தனைத் தெளிவு ஏற்பட்டிருந்தது. பெண் என்பவள் முதலில் தான் இவ்வாணாதிக்க சமுதாயத்தில் அடிமைப்பட்டு இருக்கிறாள் என்பதை உணர வேண்டுமே என்பதையும் அவள் அவனுக்கு நிகரான சகல சுதந்திரங்களையும் அனுபவிக்க வேண்டியவள் என்பதையும் உணர்ந்திருந்தாள்.

ஆற்றாமையினாலும், அவமானத்தினாலும் அவள் தற்கொலை செய்து விடலாமா என்று கூட யோசிப்பதுண்டு. ஆனாலும் அவள் மனதில் மலர்களாய்த் தூவப்பட்டு வரும் பெண்ணியச் சிந்தனைகள் தற்கொலை கோழைத்தனமான செயல் என்பதை முன்னிறுத்தும்.

இன்னும் சிலருக்கு வாழ்க்கையில் போராட்டம் ஏற்படுவதுண்டு. இன்னும் சிலருக்கு போராட்டமே வாழ்க்கை என்றாகி விடுகிறது. இதில் மாரியாயி இரண்டாவது ரகம்.

கொழுந்தெடுத்து மலை இறங்குகிற வேளைகளில் அந்தக் கன்னிப் பருவத்தில் அவன் கண்கள் விட்ட தூதினைத் தரிசித்து காதல் என்னும் தேரினிலே பவனி வந்தபோது எதிர்காலம் இப்படியெல்லாம் அமைந்து விடப்போகிறது. என்று அவள் துளிகூட எண்ணிப்பார்த்ததில்லை.

நிழல்களைத் தோற்கடித்த நிஜங்களின் நிஸ்டூரங்களில் தோய்ந்து அமிழ்ந்து எழுகின்ற இன்றைய நாளாந்த வாழ்வில் இனி விடிவெள்ளி தோன்றும் என்ற நம்பிக்கை அவள் மனதில் தகர்ந்து போய் விட்டிருந்தது.

எதற்கெடுத்தாலும் வசவு, எதற்கெடுத்தாலும் அடியுதை இப்படி ஒரு வாழ்க்கை தேவைதானா?

இறுகிய மனத்துடன் மனதை அடக்கியபடி சற்று நேரம் மௌனமாக இருந்தாள் மாரியாயி.

அவன் இன்னும் உறங்கவில்லை. மாமிக் கிழவியும் இருமி இருமி விழித்துக் கொண்டிருந்தாள்,

'வாடி' மீண்டும் கழுதையின் சங்கீதமாக ஒலிக்கும் அவன் விரசங்கள்!

அவள் இசையவில்லை.

''வாடி...''

இப்போது மாரியாயிக்கு கோபம் உச்சத்திற்கு ஏறியது. சற்று வெறி தணிந்த கருப்பையா மெல்ல எழுந்து அவளை எட்டிப் பிடித்தான். பலமான ஆணின் முரட்டுக் கரங்களில் பருந்தின் காலில் சிக்கிய கோழிக்குஞ்சாக அவள் தவித்தாள்.

கட்டிய கணவனாலும் பலாத்கார வல்லுறவுக்கு அவள் மனம் இடம் தர மறுக்கவே தன்பலம் கொண்டமட்டும் அவனைத் தள்ளி விழுத்தி விட்டு எழுந்தாள்.

கருப்பையாவுக்கு கணப்பொழுதில் இடியே விழுந்த கிறுகிறுப்பு. நம்பமுடியாத திகைப்புடனும், அதனால் ஏற்பட்ட ஆத்திரத்துடனும் வெறிமுறிய ஆக்கிரோசமாக எழுந்த வீச்சுக்கு அவளைத் தாக்கி மிதித்து துச்சாதனனின் பாணியில் இறங்கினான். துடிதுடித்துப் போனாலும் கூட மீண்டும் ஆத்திரத்துடன் எழுந்த மாரியாயி 'நெருங்காதே' என்றாள்.

மதுரையை எரித்த கண்ணகி போல் காட்சியளித்த அவளை நெருங்கிட முடியாத கருப்பையா வெலவெலத்துப் போனான். குற்ற உணர்வுடன் பாண்டிய மன்னன் சிம்மாசனத்திலிருந்து வீழ்ந்தது போல் செய்வதறியாது பிரமித்து பலாத்காரத்தைக் கைவிட்டு அவளிடமிருந்து ஒதுங்கினான். வீறுகொண்டெழுந்த பெண்ணின் முன்னே அவன் பணிந்து போவதைத் தவிர மாற்றுவழி இருக்கவில்லை.

## மௌனம் ஏன்

உணர்விருந்தும் வெளிப்படுத்த
முடியாத ஊமை மனிதர்களாய்...
திறமைகளை தமக்குள்ளே பூட்டி
சிறைப்பட்டுக் கொண்டு
வெளியில் வர முடியாமல் தவிக்கும்
இருட்டு மனிதர்களாய்...
தமக்குள்ளே ஏதேதோ பேசிக்கொண்டு
சந்தேகங்களுக்கு விடை காண
முடியாமல்-வீசும்பும் உள்ளங்களாய்...
வேண்டாம் இனி இந்த மௌனம்!
உங்களுக்கும் சுதந்திரம்
உண்டு.
பேசுவதற்கும் எழுதுவதற்கும்
தடைபோட இங்கு எவராலும் முடியாது
ஏனவே,
தூசிகளைத் துடைத்து உங்கள் மனங்களை
சுத்தப்படுத்திக்-கொள்ளுங்கள்.
சிரத்தினில் சேகரித்து வைத்திருக்கும்
சொற்களை
சல்லடையில் போட்டு சலித்துக்கொள்ளுங்கள்...
பேனைக்கு உயிர் கொடுங்கள்
பேச்சிற்கும் வல்லமை திட்டுங்கள்
சத்தியத்திற்கு முன் சரிந்து விழாமல்
நீதிக்கு முன் நிமிர்ந்து நில்லுங்கள்.
சாதி மதம் விட்டொழியுங்கள்
இனத்திற்காய் போராடுங்கள்...
உயிர் உள்ளவரை பேனைக்கு உயிர்கொடுங்கள்.
உயிர் பிரியும் வேளையிலும்
உரிமைக்காக உங்கள் உதடுகளை
அசையுங்கள்...
உலகை நாளை உங்களின்
உரிமை சாசனங்கள் திருத்தும்!!

கணேஷ்.

## சிதறல்கள்

நேற்றுவரை...
நீ எனக்கு அறிமுகமில்லை!
இருந்தும்
உன்னை நேசிக்கின்றேன் மிக... மிக...
ஒரு
உண்மையான வேரின்
உடைதல் அல்லது அறுதல் கண்டு
நொருங்கிப் போன-உன்
இதயத்தின்
ஒவ்வொரு பகுதிகளையும்
தொட்டுப் பார்த்தது மனசு கண்ணீரோடு...
யாருக்கும் சொல்லமுடியாத
அல்லது
யாரும் புரிந்துகொள்ள முடியாத
உந்தன்
நேசிப்பின் மூர்க்கத்தை
காண்பதற்கு
யாருக்கும் இதயமில்லை தோழனே!
மரணத்தின் பொறிக்குள்ளே
அகப்பட்டு
துடித்துத்... துடித்து
மீண்ட உன் உயிரை
நேசிக்கச் சொல்கிறது
நெஞ்சு!
ஒப்பனைகளோடு
ஒளிந்துகொண்டிருக்கும்
அனேக முகங்கள்
இருண்டு போனது
உண்மையின் முன்பு!
போகட்டும் விடு...
சம்பிரதாயங்களுக்குள்
சிதம்பிப்போன நமது
சமூகத்துள்ளே...
நீயும்... நானும் ஒரு ஜாதி!
உனது கண்ணீரும்... எனது
கண்ணீரும் ஒரு ஜாதி!
உனது குருதியும்...
எனது குருதியும் ஒரே ஜாதி!
போகட்டும் விடு...
காலம்
தன் கணக்கில்
சேர்த்துக் கொள்ளட்டும் துரோகத்தை!
வாழ்க்கையை
நாம் ஜெயித்து விட்டோம்.
ஆனால்...
இவர்கள்!?

நிருஜலன்

## சொற்சிலம்பம் - 104

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
|ச | பி | ய் | டு | ன | தா | ம |
| மா | கு | ல் | பா | ந் | மி | லா |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | வ் |
| செ | னா | ப | லி | னை | தீ | இ |
| ம் | ட் | தா | ஷி | ர் | லி | து |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | சு |
| ழு | வா | கே | ன் | கி | த் | ரீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -102 இன் விடைகள்

01. பின்லாந்து.

02. மகாவலி.

### சொற்சிலம்பம் - 102 இன் பரிசுக்குரியவர்

கி.அமிர்தவர்ஷன், தரம் 4A
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

### சொற்சிலம்பம் - 102 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பா.வினோசிகா
கற்சிலைமடு அ.த.க.பா,
ஒட்டுசுட்டான்.

02. T.விதூசன், தரம்5C,
மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா,
முல்லைத்தீவு.

03 கெ.பிரசன்னா,
நிர்வாகசேவை வீதி,
வவுனிக்குளம்.

04. இ.சுஜிதா,
இல:-113,
ஆனைவிழுந்தான்.

05. தி.பிரசன்னா,
காந்த ரூபன்,
அறிவுச் சோலை.

06. ஜெ.அர்ஜீனன்.
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

07. பிரியா,
ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

08. ஜெயப்பிரியா,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

01. இரவில் சிவப்பு நிறமாகத் தெரியும் கோள்?

01) ..................................

02. உலகின் மிகப் பெரிய தீவு?

01) ..................................

பெயர் :- ..................................

முகவரி :- ..................................

..................................


..................................

சொற்சிலம்பம்-104
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## கைவண்ணம்



வி.விமலரேகா,
கிளி/மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.




## சிப்பிகள்

நீர் வாழ் உயிரினங்களில் மிக முக்கிய தொகுதி மெல்லுடலிகள். 60 கோடி ஆண்டுகளுக்கு முன் இதன் முதல் தலைமுறை தோன்றியதாகக் கூறுகிறார்கள். இன்று இதில் ஏறக்குறைய 30000 இனங்கள் உள்ளன. மென்மையான உடலைக் கொண்ட இவற்றில் பெரும்பான்மையானவற்றின் உடலைச் சுற்றிக் கடினமான உறை உள்ளது.


இவற்றில் முக்கியமாக வயிற்றுக் காலிகள் இருவோட்டினம், தசைக் காலிகள் என்று மூன்று வகுப்புகள் உள்ளன. நத்தை ஓட்டுச் சிப்பி நத்தை, ஓடற்ற நத்தை முதலியன வயிற்றுக் காலிகள் வகுப்பைச் சேர்ந்தவை. ஆளிகள், மட்டிகள், கிளிஞ்சல்கள், பெருநத்தை முதலியன இருவோட்டினத்தைச் சேர்ந்தவை. கணவாய், ஓட்டுக் கணவாய், முதலியன தலைக் காலி வகுப்பைச் சேர்ந்தவை.

வயிற்றுக் காலிகளில் திராட்சை நத்தை அட்லாண்டிக் பெரிவிங்கிள், சங்குகள், சோழிகள், திருகுச் சிப்பி, தூரப்பணச் சிப்பி முதலியன குறிப்பிடத் தக்கவை. இவை பல வண்ணங்கள் உடையவை. சுருள் வடிவம், கோபுர வடிவம், ஊசி வடிவம், கூம்பு வடிவம் என்று பல வடிவங்கள் கொண்டவை. இதன் ஓடுகளை சிப்பிகள் என்கிறோம்.

மெல்லுடலிகளின் மேற்புறத்தொலி சதைப்பற்று மிகுந்தது. இந்த புறமென் தொலிதான் கடினமான ஓட்டை உருவாக்குகிறது. பாதப் பகுதி கிளிஞ்சல் மூடியை உண்டாக்குகிறது. இதில் ஆண், பெண் என்று பாலினப் பிரிவுகள் உள்ளன. இவை தங்கள் விந்தணுக்களையும் சினை முட்டைகளையும் நீரில் வெளியிடுகின்றன. சில இனங்கள் குமிழுறை களில் முட்டைகள் இடும். முட்டைகளிலிருந்து வெளி வருபவை வெலிஜர் எனும் இளந்தைகள். பின்னர் ஓடுடைய இனமாகிறது.




இதன் வளர் பருவம் வித்தியாசமானது; விந்தையானது. இளந்தைப் பருவத்தில் பின் பக்கம் இருக்கும் புறமடி மென்தொலி அறை முன் பக்கம் வந்துவிடுகிறது. இதனால் உடலுறுப்புகள் வலப் பக்கம் இருப்பவை இடப்பக்கமாக அமைந்து விடுகின்றன. இம்மாதிரி மாற்றத்தினால் தலைப்பக்கம் கால் அமைந்து விடுகிறது. மேலும் இதன் நரம்பு மண்டலமும் திருக்கு மறுக்காகி விடுகிறது. முதிர் உயிரின் உணவுப் பாதையும் சுருண்டுவிடும். இதனால் கூடுகள் திருகு சுருள் வடிவம் பெறுகிறது. இவற்றின் ஆயுள் காலம் ஐந்து முதல் ஆறு ஆண்டுகள். இவற்றுள் தாவர உண்ணிகளும் உள்ளன; ஊனுண்ணிகளும் உள்ளன.




விடை:-5

கூட்டத்தில் உள்ள நாயின் தலை எந்த நாய்க்குச் சொந்தமானது?

## பிறந்தநாள்




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்)

**எம்மால் செய்ய முடியாது என்று எதுவு மில்லை. எம் மனதில் முயற்சியற்றுப் போவ தால்தான் முழுமையடையாமல் போகிறது.**



# பலவீனம்தான் பலமான அத்திவாரமாகும்!

"ஒரு விடயத்தில் ஒருவனுக்கு நம்பிக்கை ஏற்படாவிடின் அவ்விடயத்தில் அவன் பலவீனம் கொண்டவனாய்தான் இருப்பான்! பலவீனம் தான் நாளை பலமடையச் செய்யும். எந்தவொரு விடயத்திலும் செய்ய முற்படுகின்ற போதினிலே முயற்சியினை முதல் கொள்ளல்வேண்டும். முயற்சியற்றவன் வாழ்வினிலே என்றும் அமாவாசை இரவுதான். எவையாயினும் நாம் செய்ய வேண்டும் என்ற ஆவலாய் வாழ்வது நம்மில் வழமையானவை.

ஆனால் வெறுமனவே மனதில் நினைத்துவிட்டு முடங்கிக் கிடப்பதுவும் வழமையானவைதான். இவ்வையத்துள் பிறந்த மானிடர்களிடையே நாம் நினைத்தவுடன் எமக்குக் கிடைக்கவேண்டும் எனக் கொள்பவர்கள் நிறையவே உண்டு. ஆனாலும் அவ்வாறு இயலாது என்பதினையும் புரிந்து கொள்ளுங்கள். படிப்படியாய் முன்னேற முயலுங்கள். முயற்சியின் முனையில் எமைச் சூழ பல தடைகள் நேரிடலாம். இதற்காய் மனதில் சோர்வுத தன்மை ஏற்படுவதினூடே முடங்கிப் போய் விடாது எதிர் நீச்சல் போடுங்கள்.

எம்மால் செய்யமுடியாது என்று எதுவுமில்லை. எம் மனதில் முயற்சியற்றுப் போவதால்தான் முழுமையடையாமல் போகிறது. முடியுமான வரையும் போராடுங்கள். நாம் செய்கின்ற விடயத்தில் பற்றுதல் கொள்ளல் வேண்டும். அதனுள்ளே முயற்சியினை உட்படுத்திக் கொள்ளளும் வேண்டும். பல தரப்பட்ட துறைகளிலும் எமை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். தினம் நினைத்துவிட்டு கைவிடாதிருக்கவும் வேண்டும். சிலர் ஒருவேலைத் திட்டத்தினை செய்துவிட்டு அதன் பயனை அனுபவிக்க முன்னர் இடை நிறுத்திக்கொள்வார்கள். அவ்வாறில்லாமல் முடியுமானவரையும் அதனுடன் போராடி வெற்றியை உமதாக்குங்கள்.

எம் வாழ்வினிலே பலதரப்பட்ட துறைகளினுள் எமை உட்படுத்திக் கொண்டு எமை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். உலக அரங்கில் பிரபலமானவர்கள் அனைவரும் முயற்சியின் பயனாகத்தான் பிரபலமானார்கள். அவர்கள் எவ்வாறு ஒவ்வொரு விடயத்துள்ளும் போராடினார்கள் என பத்திரிகை, புத்தகங்கள், வானொலி ஊடகங்கள் மற்றும் பெரியோர்களின் பகிர்வின் மூலமும் அறிந்து கொண்டுள்ளோம். இவ்வாறாக நாம் எதனையடைய வேண்டுமாயினும் முயற்சியுடன் போராடவேண்டும். இதன் பலனாய் தான் பயனடைய முடியும் என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை.

பத்திரிகை, வானொலி ஆக்கங்களை எழுதி அது பிரசுரமாவதன் மூலம் மனம் மகிழ்ந்தும் கொள்ளுங்கள். சிலர் ஆக்கங்கள் அனுப்பி பிரசுரமாகவில்லை என கொள்பவர் உண்டு. இடை நிறுத்திக் கொள்ளாது தொடர்ந்து எழுதி பிரபலமாகுங்கள். ஒரு இலக்கினை இலகுவாய் அடைய முடிவதில்லை. அதனை நோக்கிப் பயணிக்கும் வழியில் பல தடைகள் ஏற்பட வாய்ப்புண்டு. அதனை உடைத்தெறிந்து, அயராது விடா முயற்சியாய் இருந்து முழுநிலவாகுங்கள். தடைகள் எமைச் சூழ்கின்றபோது என்ன செய்யலாம்? என்ற கேள்வியினை தொடுங்கள். கிடைக்கின்ற விடையுடனே அவ்விடயத்திற்கு விடிவு காண்பீர்கள். பலவீனங்களைக் கண்டு மனச் சோர்வினைப் பெற்று மனம் நொந்து போகாமல் பலவீனம் தான் நாளைய பலமான அத்திவாரமாகும் என மனதில் கொண்டு ஒவ்வொரு விடயத்திலும் முயற்சியுடன் பயணியுங்கள் வெற்றிகள் என்றும் உமதாகும்.

**எஸ். மதீஸ்**

## இலைக்கஞ்சி




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| சிவப்பு அரிசி (தவிடு நீக்கியது) | -1சுண்டு |
| பாசிப்பயறு | -1/4 சுண்டு |
| வல்லாரைச்சாறு | -1/2 டம்ளர் |
| பொன்னாங்காணிச்சாறு | -1/2 டம்ளர் |
| தேங்காய்ப்பால் | -1 டம்ளர்(தடிப்பானது) |
| சின்ன வெங்காயம் | -5 |
| பச்சைமிளகாய் | -2 (விரும்பின்) |
| எலுமிச்சம்புளி | -1/2 பாதி |
| தண்ணீர் | -5 டம்ளர் |
| உப்பு | -அளவாக |

**செய்முறை:-**

* பாசிப்பயற்றை 5,6 மணி நேரம் ஊறவைத்து எடுக்கவும்.
* தண்ணீரைக் கொதிக்க வைத்து அரிசியையும் பயறையும் சேர்த்து வேகவிடவும்.
* வல்லாரை, பொன்னாங்காணி, கீரைகளைச் சுத்தம் செய்து தனித்தனியாக சாறு எடுத்துக்கொள்ளவும்.
* வெங்காயம், பச்சை மிளகாயைக் குறுணலாக வெட்டவும்.
* அரிசி, பயறு, நன்கு கரைய வெந்ததும் இலைச்சாறு, தேங்காய்ப்பால், வெங்காயம், மிளகாய், உப்பு யாவற்றையும் சேர்த்துக் கொதிக்கவிட்டு இறக்கி, கஞ்சி நன்கு ஆறியதும் எலுமிச்சம்புளியைச் சேர்த்துக் கொள்ளவும்.

குறிப்பு:-

போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கும், பாடசாலைப் பருவத்தினருக்கும், நோயிலிருந்து தேறுபவர்களுக்கும் இலைக்கஞ்சி மிகவும் பொருத்தமானது என்பதைக் கவனத்தில்கொள்க.

## வீடு

**நீ உன்னுடைய அறிவைக் கவனிக்காது விடின் மந்தனாய் போய்விடுவாய், உன்னுடைய தாய் நாட்டை கவனியாது விட்டுவிடின் நீ தரித்திரனாகிவிடுவாய்,**



# மனிதா கேள்!!

பணத்தால் வாங்கமுடியாத பொருட்கள் பல இவ்வுலகில் உள்ளன. என்பதை உணர்வாயாக! ஒன்றும் செய்யாதிருந்து பலவற்றைப் பெற லாம் என்றெண்ணி உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ளாதே.

உன் நாட்டின் நிலை, நீ உண்ணும் உணவு, உடுத்தியிருக்கும் உடையை உழைத்துப் பெற வகை யறியாதிருக்கும் நீ மனிதனா??

மற்றவர்கள் நெற்றி வியர்வையை நிலத்தில் விழ உழைத்துச் சம்பாதித்த உணவைச் சாப்பிட நீ யார்? பருத்திச் செடி உன்னுடைய உடலை மறைப் பதற்கு பஞ்சு தரமறுத்தால் நீ என்ன செய்வாய்? சோம்பல் வயிற்றை நிரப்புவதற்கு, பயிர் தானியம் தர முடியாது என்று கூறினால் நீ என்ன செய்வாய்? நீ இருந்து இளைப்பாற உனக்கு ஓர் நாடு இல்லை நீ எங்கு இளைப்பாறுவாய்.

எனவே நீ ஒரு முடிவை எடுத்து ஒரு தொழிலைக் கற்றுக் கொள். உன்னுடைய பிரச்சினையை நீதான் தீர்க்க வேண்டும். அதனை வேறு எவராலும் தீர்க்க இயலாது.

மனிதா உனது காதுகளை கூர்மையாக்கிக் கேள் சோம்பேறித் தனமாய் இருப்பது தற்கொலை செய் வதற்கு ஒப்பாகும். ஏனெனின் அத னால் மனிதன் மரணமடைகின்றான்.

நீ உன்னுடைய அறிவைக் கவனிக்காது விடின் மந்தனாய் போய் விடுவாய், உன்னுடைய தாய் நாட்டை கவனியாது விட்டுவிடின் நீ தரித்திர னாகி விடுவாய், கல்லறையில் துயி லும் மாவீரர்களை நினையாது இருந் தால் நீ சுயநலவாதியாகிவிடுவாய், உன்னுடைய ஆன்மாவை கவனிக் காதிருப்பின் நீ பிசாசாகிப் போய்விடு வாய்.

நவநாகரிக உடையணிந்து அங்குமிங்கும் அலைந்து கொண்டு ஒன்றுக்கும் உதவாத அனாவசிய கடிதங்களை எழுதிக்கொண்டும், ஆபாசக்கதைகளைப் படித்துக் கொண்டும், ஆரோக்கியத்திற்கு இல் லாத உல்லாசங்களை அனுபவித்துக் கொண்டும், நண்பர்களின் வீட்டிற்குச் சென்றோ அவர்களைத் தம் வீட்டிற்கு அழைத்தோ கும்மாளம் அடித்து ஒன்றுக்கும் உதவாத ஊர்ப் பேச்சுக் களைப் பேசிக்கொண்டும், ஆகாயக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டும் திரிவதற்கா நீ பிறந்தாய்?

மனிதனே! நீயோ வாழப்பிறந்த வன். வாழப்பிறந்தவன் வாழ வேண் டாமா? மனிதனாகப் பிறந்த நீ, நீ ஒரு மனிதன் என்பதை நிரூபிக்க வேண்டாமா? வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம் அதில் வாழ்ந்து நிரூ பித்துக்காட்டு.

மனிதா கண்களை நன்கு திறந்து பார் எமது தாய் மண் படும் அவலத்தையும் எமது உறவுகள் அனுபவிக்கும் இன்னல்களையும் (அதில் உமது உறவும் கூட) காண்பாய்

உலக முன்னேற்றத்திற் காக உழைப்பவர்கள் உன்னத இடத்தைப் பெற்றுக்கொண்டிருக் கின்றார்கள்.

நம் நாட்டில் என்ன நடக் கின்றது. இன்றைய உலகின் தேவை என்ன? பலம் பொருந்திய கரங்களும்,. திறம் நிறைந்த அறிவும், நாட் டுப்பற்றும் இவற்றை யுடையவனே முழு மனிதனாகின்றான்.

இது தான் நம் நாட்டிற்குத் தேவை.

தேவை தேவை எனக் கூறிக்கொண்டிருக்காது தேவையை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என ஆராய்ந்துபார்.

"பாடு படுபவருக்கே இந்தப் பாரிடம் சொந்தம்" மனிதனே உன்னிடம் திறமையிருக்கிறது, புத்திக்கூர்மையிருக்கிறது, உடலில் வலு இருக்கிறது நீ உன்னையே திடமாக்கிக்கொண்டு புதிய வாழ்வை தொடங்கு. இல்லையெனில் நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என உன்னையே உன் மனச்சாட்சி தட்டிக் கேட்கும். இதற்கு பதில் கூற கடமைப்படுவாய்.

எனவேதான் ஓர் அறிஞர் கூறினார் தன்னிடம் பணம் இருக்கின் றது என்பதை உணர்ந்த ஒரு பையன் தனக்குள்ளே கூறிக்கொள்வான் நான் "ஏன் காலையில் எழுந்திருக்க வேண்டும்? ஏன் கடினமாக உழைக்க வேண்டும்? சாகும்வரை சாப்பிட என்னிடம் போதிய பணமிருக்கிறதே" என்று. இவ்வாறு கூறிக்கொண்டே படுக்கையில் திரும்பிப்படுத்துப் பகல் பன்னிரண்டு மணிவரையில் தூங்கு வான். ஆனால் இவ்வுலகில் தன்னு டைய உடலையும் உயிரையும் தவிர வேறொன்றையும் பெற்றிராத இளைஞன் தேவை என்ற முட்களால் குத்தப்பட்டு விடியும் முன்பே படுக்கையை விட்டு வீறிட்டெழுந்து வேலைக்குச் செல்வான். முன்னேறு வதற்குப் போராடுவதைத் தவிர வேறொன்றையும் அவன் அறிய வில்லை. ஒவ்வோர் அங்குலமும் போராடிப் போராடி எல்லாச் சக்திகளும் வலுவடைந்து அவன் முன்னுக்கு வந்ததனால் அசைக்க முடியாத ஆலவிருட்சம் போன்று காட்சியளிக்கின்றான் எனக் கூறினார்.

மனிதா நீயும் எதையும் போராடிப் பெற்றுக்கொள்ள முயற்சி செய் "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்."

**த.செந்தமிழ்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்க ங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




**குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 65**

பெயர்:...............................................

முகவரி:...............................................

...............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இலக்கியப்பகிர்வு

# விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல்

இரண்டாம் லெப்டினட் ஈழராசன் (நீதிவளவன்) என்னும் மாவீரரின் படைப்புக்களைக் கொண்ட "விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல்" என்னும் நூல் அண்மையில் வெளி வந்துள்ளது.

மாவீரனான தனது அருமை மகனின் படைப்புக்களை நூலாக்கி எமக்குத் தந்திருக்கிறார் வளவை வளவன் என்னும் மா. செல்லத்தம்பி அவர்கள். நாடறிந்த எழுந்தாளரான வளவை வளவன் அவர்களின் மகன் என்பதை விடவும் இந்தச் சமூகத்தின் ஒரு பங்காளி என்ற தனது கடமையினை தனது படைப்புக்கள் ஒவ்வொன்றின் மூலமும் நீதிவளவன் என்னும் ஈழராசன் மெய்ப்பித்துள்ளார்.

ஒரு காலத்தில் அதாவது விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்தில் படைப்புக்களைக் கேட்டு போராளிகள் படைப்பாளிகளை நோக்கி ஓடுவார்கள். விடுதலைப் போராட்டத்தின் தேவையை போராட்டத்தின் நியாயப்பாடுகளையெல்லாம் அப்படைப்புக்கள் ஊடாக வெளிப்படுத்துவதை அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

போராளிகள் விரும்பிய மாதிரியான படைப்புக்கள் வெளிவந்தனவா இல்லையா என்பதையெல்லாம் விட, அனுபவம் உள்ள முதிர்ந்த படைப்பாளிகளின் படைப்புக்களையெல்லாம் விட தரமான சிறப்பான படைப்புக்களை போராளிகளே படைக்கத் தொடங்கி அதில் சிறப்புத் தேர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்து விட்டமையை சமகால வெளியீட்டுத்துறை உணர்த்துகின்றது.

ஏராளமான இலக்கியப் படைப்பாளிகளாக போராளிகளே உள்ளனர். அதன் காரணமாக உயிர்த் துடிப்புடன் சிறப்பான கலை இலக்கியப் படைப்புக்கள் வெளிவருவதை கலை இலக்கியத் துறையில் உள்ளோர் உணர்வர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே நீதிவளவன் ஈழராசன் அவர்களின் நூலைப் பார்க்க வேண்டி உள்ளது.

போராளிப் படைப்பாளிகளில் பலர் படைப்பாளிகளாக இருந்து போராளிகளாக மாறிப் பின்னர் தம் படைப்புக்களைச் செழுமைப்படுத்திய வர்கள். வேறு அதிகமானோர் போராளிகளாக வந்த பின்னர் புறத் தாக்கங்களாலும், வாசிப்பு அனுபவம் ஏனைய பட்டறிவுகளாலும் படைப்பாளிகளாக மாறியுள்ளவர்கள்.

ஆனால் ஈழராசன் இயல்பாகவே படைப்புந்துதல் உள்ளவர். அது உச்சம் பெற்று நான்கு திசையும் அதிர முரசு கொட்ட முன்னர் அவர் மாவீரர் ஆகிவிட்டார்.

என்றாலும் கூட ஒரு படைப்பாளிக்கு இருக்கக் கூடிய அத்தனை குணாம்சங்களும் அவருக்கு இருக்கின்றது. தன்னைச் சுற்றிச் சூழவும் நடக்கின்ற ஒவ்வொரு விடயமும் அவரை பாதித்திருக்கின்றது. அவரை இம்சைப்படுத்தியுள்ளது. கேள்விகள் கேட்டு சித்திரவதை செய்திருக்கின்றது. அதன் காரணமாகவே அவர் படைப்புக்களுக்கு திரு.க.வே பாலகுமாரன் அவர்களை வியப்புரை எழுத வைத்திருக்கின்றது.

மந்தி பேசுகிறது, எருமை பேசுகிறது, கழுதை பேசுகிறது, பறவைகள் பேசுகின்றன என அவர் எழுதியவற்றிலெல்லாம் வெளிப்படும் கருத்துக்கள் என்ன?

'சுப்பிரமணியம் 13 வயதில் பாரதி ஆனான்! ரசூல் என்ற சோவியத கவிஞன் 16 வயதில் கவிஞரானான். நீதிவள வனே! நீ 17 வயதில் இப் புதையலைப் படைத்தாய்! இன்னு மின்னும் மலரவன்- பாரதி- வானதி- கஸ்தூரி என ஒரு நீண்ட வரிசை நீண்டு நீண்டு நீண்டு ஒளிர்கிறது" என அப்பா வளைவ வளவன் குறிப்பிடுவது போல்- இளமை துளிர் விடும் நேரத்தில் அந்த அற்புதமான படைப்பாளியின்நெஞ்சை




நெருடிக் கொண்டிருந்த விடயங்கள் தான் எவை?

"மனிதார்களே! மனிதர்களே! மனிதனாக வாழ மட்டும் ஏன் நீங்கள் கற்றுக் கொள்ளவில்லை"? எனவும்,

"எமக்குள்ளே உள் மன தின் அடிநாதமாக
விலங்குணர்வே உறங்கிக் கிடக்கின்றது அறிவியல் மனமென்று நாம் மேல் மனதை ஆக்கி
ஒப்பாசாரமாக வாழக் கற்றோமே அன்றி அடி மனதின் ஆழத்தில் உறங்கும்
விலங்குணர்வை மாற்றக் கற்றோமில்லை. அது மாற்றக் கூடியது போலவும்... மாற்ற முடியாதது போலவும்
என ஒரு இரு நிலைப்பட்ட மனமே மனிதர்களிடம் அதிகம்" எனவும்,

"ஆனால் அழுக்காறு நிறைந்த அறியாமை இருள் நிறைந்த மனித உள்ளங்களைத் தான் நீ அணுக முடியாதுள்ளாய்! அந்த மனங்களை வென்றெடுக்கும் நாள் எது ஒளியே!?' எனவும்,

மனிதர்களின் நடத்தையை கேள்விக்குட்படுத்திக் கொண்டிருந்த நீதிவளவன் அதன் காரணமாகவே - அந்த மனிதர்களுக்காகவே ஈழராசன் ஆனான்.

ஆனால் இன்னுமொன்றையும் கவனித்தால் அவனின் படைப்புக்களில் தான் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதைப் பற்றியோ-அல்லது அது தொடர்பான தனது கருத்துக்களையோ அவர் வெளிப்படையாக எந்த இடத்திலும், கூறவில்லை.

ஆனால் 1981 இல் பிறந்த இந்த மாவீரன் தன் சூழலை தன் தகப்பனை, தாயை - அவர்களது வாழ்க்கையை சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட்டிருக்கின்றார். அது காரணமாகவே வளவை வளவன் என்ற நாடறிந்த படைப்பாளிக்கு '

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் என்னும் சொல்"

என்ற வள்ளுவனார் வாக்குக்கு ஒரு முன்னு தாரணமாகிவிட்டார்.

தர்மத்தின் வெற்றியாக அவர் குறியீட்டில் படைத்துள்ள படைப்பு.

"உடல் சிதறிப் போனாலும் தம் உணர்வுகள் சிதறாதவர்கள் வசந்தத்தை இழக்காது தம் வதனத்தை இழந்தவர்கள்"

என்பது நிழல் மனிதர்கள் என்ற தலைப்பில் அவர் சுட்டிக்காட்டும் வரிகள்.

"எத்தனை கோடி ஆண்டு ஓடி மறைந்தாலும் உண்மைத் தமிழன் இருக்கும் வரை மாவீரர் நாள் தமிழீழத்தின் மாற்ற முடியாத பிரிக்க முடியாத- அழிக்க முடியாத வீரர் நினைவு நாள் ஆம்! உலக உன்னதங்கள் எல்லாம் பவனி வரப்பாய் விரித்து பாய் விரித்துக் காத்திருக்கும் காட்சியொன்று உலகப் பேரரங்கில் எங்கேனும் இருந்தது வாய் இருப்பது வாய் அறிந் தீரா கற்றீரா?...?"

"இறப்பிலா வாழ்வியலைக் கற்றவர்களே இந்த மாவீரர்கள் என்போம். உன்னதங்களின் உன்னதங்கள் என்போம். உறங்கா வழிகளோடு உம்மைக் காத்து விட்டு தமது நீண்ட உறக்கத்திற்காக அமைதியான இடத்தில்... உங்களை விட்டு சற்று தூரமாக எல்லை காத்த போது எப்படிக் காத்தாரோ அப்படியே மௌனத்தைக் காத்து மகத்துவம் பேணிக் கொண்டிருக்கின்றார்களே! இந்த மண்ணின் முத்துக்களாய் வைரங்களாய் எம் சொத்துக்களாய்...."

என்பது எல்லாம் மாவீரர்கள் தொடர்பாக ஈழராசன் சொன்னவைகள்.

இன்றைக்கு அத்தகைய மாவீரர்களில் ஒருவனாக ஈழராசனும் மாறி விட்டான். இத்தகைய இளம் செல்வங்களின் இனிய கனவுகளை அழிய விடாது காப்பது நம் கடமை.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## தாமரைச்செல்வியின் பச்சை வயல் கனவு நூலுக்கு விருது

வெள்ளிநாதத்தில் தொடராக வெளிவந்த எழுத்தாளர் தாமரைச்செல்வியின் "பச்சைவயல் கனவு" எனும் நாவலுக்கு 2005ஆம் ஆண்டு நாவலுக்கான அரச இலக்கிய விருது கிடைத்துள்ளது.

இவ் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு, நாவலாசிரியருக்கு எமது சார்பாகவும் எமது வாசகர்கள் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பழத்ததில் பிழத்தது

## எழுந்து நில் நிமிர்ந்து நில்

பெண்ணே
உன் பெருமை
உனக்கே தெரியாமல்
சத்தியவாக்குகளில்
உன்மீதும்
இறைவன்மீதும் தானே
ஆணை இடுகின்றனர்.
அவ்வாறெனில்,
எத்தனை பரிசுத்தம் பெற்றவள் நீ
உன் தாய்மையின் பாதங்களின்
தாளல் மைந்தனின்
உரிய கவனமே உண்டென்றால்
நீ நினைத்தால், உலகை
ஆக்கவும், அழிக்கவும்
முடியும் பெண்ணே
அப்படியானால்
அணுசக்தியைப் போன்றவள் நீ

அணுசக்தி ஆக்கத்திற்கும் பயன்படும்
பேரழிவுக்கும் பயன்படும்
பெண்ணே,
ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும்
உந்துசக்தியாய்
மறைந்திருப்பவள் நீ
கென்னடிக்கு
ஜக்குலின்போல்
நேருஜிக்கு கமலாபோல்
காந்திக்கு
கஸ்தூரிபாய் போல்.

எனவே,
பெண்ணே
அடுப்பங்கரையில் அடங்கி
அடிமையாகாமல்,
படுக்கையில் பதுங்கி
பதுமையாய் பயந்து கிடக்காமல்
எழுந்து நில்
அடங்கிப் போவார்கள்
உன் எழுச்சி கண்டு
நிமிர்ந்து நில்
உன் துணிவு கண்டு
நிலைகுலைந்துபோவார்கள்.

தமிழில் - இ.றஜித்
ஆங்கிலத்தில் - காரைக்குடி சீர்வியா

# தொலைக்காட்சி தொடர்களிற்குள்ளிருந்து மக்களை வெளியே கொண்டுவர வேண்டும்

## - கலைஞர் நாகமுத்து செல்லத்துரை-

சேர்ந்து ஒன்றாய் நின்றால் எந்தச்
சிற்றனமும்சிறிது அல்ல.
சோர்ந்து நில்லா நெஞ்சமென்றால்
எதிரியவன் பெரிது அல்ல.
பெரியரென்று பறையறைந்த
பேரினமும் வீழ்ந்துவிடும்
சிறியரென்று அடக்கப்பட்ட
சிற்றினமும் உயர்ந்துவிடும்.

கலைஞர் நவாலியூர் நா.செல்லத்துரை சின்னவனா பெரியவனா என்ற நாடக நூலில் தன் எழுத்துக்களிற்கு இவ்வாறு கவி வடிவம் கொடுத்துள்ளார். நாடகம், திரைப்படம், மெல்லிசைப் பாடல், வானொலி நாடகம், சிந்துநடைக்கூத்து, நாவல், சிறுகதை, கவிதை என பல்துறைப் பரிமாணங்களில் இயங்கி வருகின்றார். முதுபெரும் கலைஞர் கலாபூசணம் நா.செல்லத்துரை. 55 வருடங்களாக ஈழத்துக் கலை இலக்கியத்துறைக்குப் பெரும் பணியாற்றிவரும் கலைஞர், ஓய்வுபெற்ற ஆசிரியர். 76 வயதான நாகமுத்து-செல்லத்துரை ஈழத்துக்கலை இலக்கியத்துறை தொடர்பாக பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்கள்முன் வைக்கிறோம்.

**நாம்:-** துறைப்பிரவேசம் தொடர்பாக..?

**செல்லத்துரை:-** கொழும்பில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய போது கல்லூரி அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க 22வயதில் சர்வாதிகாரி என்ற நாடகத்தில் சர்வாதிகாரியாக என்கலைப்பயணம் ஆரம்பமாகியது. ஆத்மாவின் திருப்தியில் தீய வழியில் செல்லாது ஒருசில மக்களிற்காவது நல்லது செய்ய வேண்டும் என்ற நினைப்புடன் இத்துறையில் ஈடுபடத் தொடங்கினேன். சிறுவயதில் யாழ்ப்பாணக் கல்லூரியில் பல நாடகங்களில் நடித்த போதிலும் அவற்றை நான் நாடகமாகக் கருதவில்லை. இந்தியாவில் உயர் கல்வியைக் கற்றபோது இத்துறையில் ஒரு மாறுதலை என்னால் உணர முடிந்தது. மெட்ராஸ் கலைக்கல்லூரியில் பீடங்களிற்கு இடையிலான நாடகப் போட்டியில் எனது 'திருந்திய மகன்' என்ற நாடகம் முதலாம் இடத்தையும் நான் சிறந்த நடிகனாக தெரிவு செய்யப்பட்டமையும் இத்துறையில் என்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்ற வழிகோலியது.

நாடகத் துறையுடன் என்னை இறுக இணைத்து 25 வருடங்கள் கண்டிப் பிரதேசத்தில் கலைப்பணியாற்றினேன். தொடர்ந்து கலைத்துறைப் பாதையில் பயணித்து வருகிறேன் எனப் பதிலளித்தவரிடம்,



**நாம்:-** ஈழத்து நாடகத்துறை தொடர்பாக தங்களின் பார்வை..?

**செல்லதுரை:-** பெரிய வளர்ச்சி என்று சொல்லமுடியாது. யாழ் பல்கலைக் கழகம், திருமறைக் கலாமன்றம் போன்றவை நாடகத் துறையை வளர்த்துக்கொண்டு வருகின்றன. பொதுவாக வெளியால நாடகத்துறைக்கான வழிவகைகள் இல்லை என்றே கூறவேண்டும். இன்றைய மக்கள் அவசர யுகத்தில் உடனடித் தயாரிப்புக்களை விரைவாக நுகர வேண்டுமென்ற நிலைக்கு தம்மை மாற்றி வருகின்றனர். இவர்கள் தம்மைத் தயார்ப்படுத்தி வெளியே வந்து நாடகம் பார்க்கும் நிலையில் இல்லை. தென்னிந்திய தொலைக்காட்சித் தொடர் நாடகங்களே எமக்குத் தொல்லை தருவதாகவுள்ளது. இவற்றில் இருந்து மக்களை வெளியே கொண்டு வரவேண்டும் என தன் ஆதங்கத்தை பகிர்ந்தவரிடம்,

**நாம்:-** நாடகத்துறையில் இருந்த நீங்கள் எவ்வாறு திரைப்படத்துறைக்கு..?

**செல்லத்துரை:-** அது ஒரு திருப்புமுனை. 25க்கு மேற்பட்ட நாடகங்களை நடித்திருந்தவேளை எனது மாணவனுடைய திரைப்படமான "காத்திருப்பேன் உனக்காக" என்ற படத்திற்கு கதை,வசனம், பாடல்கள் எழுதி கதாநாயகனின் அப்பா (சிவகுமாரன்) வாக நடித்தேன். பூதத்தம்பி என்ற படத்தில் துணிச்சல் மிக்க புரட்சி வீரனாக நடித்தேன். இவை இரண்டுமே எனக்கு பெயரையும் புகழையும் தந்ததென்று உறுதிபடக் கூறலாம் எனக் கூறியவரிடம்,

**நாம்:-** ஈழத்துத் திரைப்படம் புலம் பெயர்ந்த வர்களின் படைப்புக்கள் தொடர்பாக..?

**செல்லத்துரை:-** புலம்பெயர்ந்தவர்கள் வசதி இருப்பதனாலும் ஆசை இருப்பதனாலும் செய்கிறார்கள். சிலரது வெளியீடுகள் தரமானவையாக வெளிவருகின்றன. சிலர் தம்மைப் பதிவுசெய்வதற்காக தாம் சார்ந்த சமூகத்தை நிலைநிறுத்துவதற்காக வெளியிடு கின்றார்கள் என்றும் கூறலாம். சிலர் ஒருபக்க விடயங்களை மட்டும் தம் படைப்புக்களாக வெளிக்கொணர் கின்றமை ஆரோக்கியமானதாக இல்லையென்றே எனக்குத் தெரிகின்றது.

ஈழத்துத் திரைப்படத் துறையானது 1980களுடன் தன்நிலை இழந்து மூன்றாம் தர சினிமாவிற்குள் தன்னை இணைத்துக்கொண்டது. நிதர்சனம், கலைபண்பாட்டுக்கழகம் போன்ற நிறுவனங்கள் குறிப்பிட்ட சில படங்களை எடுத்துள்ளன. அவையும் நீண்ட இடைவெளி யுடன் தான். பல குறும்படங்களை புலம் பெயர்ந்தவர்களும் ஈழத்தவர்களும் எடுத்துள்ள னர். ஆனால் இவற்றை எத்தனை பேர் பார்க்கினம். எல்லோரிடமும் சென்றடைகின்றதா,

**நாம்:-** நீங்கள் அமைப்பு ரீதியாக அல்லது அமைப்புகளுடன் இணைந்து இயங்காமை..?

**செல்லத்துரை:-** நேரம் எல்லோரிற்கும் மிக மிக முக்கியமானது. நாடகங்களிற்கு கலைஞர்கள் குறித்த நேரத்திற்கு வரவேண்டும். இதனை இங்குள்ள அநேக கலைஞர்களில் காணமுடி யாது. நீண்டகாலம் பாடசாலை ஆசிரியராக இருந்து மாணவர்களுடன் பணியாற்றியமையால் நேர முகாமைத்துவத்தை நான் சரியாககையாள்கிறேன.

என்னுடைய நாடகங்களில் நான் நடிக்கவேண்டும். அதனை நானே நெறியாள்கை செய்து அறிக்கை செய்ய வேண்டுமென்ற காரணத்தினாலும் வேறு கலைஞர்களது படைப்புக்களிலும் அவர்களிற்கு கீழேயும் நான் செயற்பட விரும்பாமையே காரணமென தன் நிலையை கூறியவரிடம்,

**நாம்:-** ஈழத்துக் கலைத்துறைக்கு கல்விச் சமூகம் எந்தளவிற்கு பங்களிப்பு..?

**செல்லத்துரை:-** கல்வியாளர்களில் ஒரு சிலர் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். இவர்களில் பேராசிரியர் மௌனகுரு, கலாநிதி மரியசேவியர் அடிகளார், குழந்தை சண்முகலிங்கம், மெட்ராஸ்மயில், சிதம்பரநாதன், ஜோண்சன், ராஜ்குமார், தேவானந்த் போன்றோர் குறிப்பிடும் படியாகவுள்ளனர். இன்னும் இவர்கள் நிறையச் செய்யவேண்டும். இன்றைய நிலையில நேரப்பிரச்சினை எல்லோரிற்கும் இருக்கு. சுமைகள், அழுத்தங்கள், அவசரயுகத்திலுள்ளோம். இவற்றை ஒதுக்கி முழுமையாக கலைப் பணியாற்ற வேண்டும். கல்வியாளர்களில் ஒரு பகுதியினர் கலை வடிவங்களை ஆதரிப்பவர்களாகவும் மதிப்பவர்களாகவுமுள்ளனர். இதுவும் ஒரு நிறைவென்றே கூறவேண்டுமெனப்பதிலளித்தவரிடம்,

**நாம்:-** எதிர்காலத்தில் நாடகம், திரைப்படத் துறையின் நிலை..?

**செல்லத்துரை:-** திரைப்படத் துறையை நினைச்சும் பார்க்க இயலாது. ஒரு





குறிப்பிட்ட விடயத்தை மையமாக வைத்து அதனூடாகவே மக்களை ஏமாற்றி பூச்சாண்டி காட்டி வருகின்றனர் தென்னிந்தியச் சினிமாக்காரர்கள். இதில் இருந்து மக்களை வெளியே எடுக்கவேண்டும்.

தொலைக்காட்சியில் போடுற நாடகங்கள் இல்லாமல் போகவேண்டும். எங்கட தனித்துவத்தை அடையாளத்தைப் பேணக்கூடிய கலைவடிவங்களை மக்கள் மயப்படுத்தவேண்டும். இதற்கு மக்கள் நாடுகின்ற ஊடகங்களைப் பயன்படுத்தினால் வெற்றி பெறலாம். தரமானவற்றை இனம்கண்டு ஏனைய கீழ்த்தரமான ஆபாசமானவற்றைத் தடைசெய்ய வேண்டும் எனப் பதிலளித்தவரிடம்,

**இரா-வின்**

**நாம்:-** கலைஞர்கள் பற்றி..?

**செல்லத்துரை:-** கலைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையை நிலைப்படுத்தி முதன்மையாக்கி அவற்றின்படி நடக்கவேண்டும். ஏன் என்றால் கலை வடிவங்களின் ஊடாக சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறும் கலைஞர்களும் அப்படியே வாழவேண்டும். கலைஞன் மனிதனாக முன்மாதிரியாக வாழ வேண்டும். கலையை தெய்வீகமருந்தாகக் கருதி அதனை முறைப்படி உட்கொண்டு அதற்கு நன்றியுடையவர்களாக வாழும் போதே அவர்கள் கலைஞர்கள் என்ற நிலைக்குள் வருகின்றனர் எனப் பதிலளித்தவரிடம்,

**நாம்:-** துறைசார்ந்தவர்களிற்கு..?

**செல்லத்துரை:-** கலைப்பதும் நிறைப்பதுமே கலை. தீமையானவற்றை கலைத்து நல்ல ஆரோக்கியமான விடயங்களை கலைத்த இடத்தில் நிரப்புவதே கலையாகும். எந்தவொரு படைப்பையும் நாம் மேற்கொண்டு வெளிக்கொணரும் போது அது உரியவனிடம் சென்றடைகிறதா? அவன் அதை பார்க்கின்றானா? அவனிற்கு நேரம் இருக்கிறதா? சிலவேளைகளில் அவன் சார்ந்தவர்கள் கூட பார்க்கின்றார்கள் என்றால் அது சிந்திக்க வேண்டியது. ஒரு வெளியீட்டு விழாவிற்கு துறைசார்ந்தவர்களும் அவர்களது உறவினர்களுமே வருகின்றனர். இந்நிலை மாறவேண்டும். இதற்கு இளம் சமூகம் முன்வரவேண்டும். கருத்து மோதல்கள் இருக்கலாம். ஆனால் அவை ஆரோக்கியமாக அதேநேரம் அவனை வழிப்படுத்தக்கூடியதாக அமையவேண்டும் எனத் தன் கருத்துக்களை நிறைவுசெய்தார் கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரை.

பல்துறைப் பரிமாணங்களில் இயங்கி வரும் முதுபெரும் கலைஞனை வாழும்போதே கௌரவிக்க வேண்டுமென்ற நற்பணியை கலைஞரின் பெயரில் அரங்கமைத்து கௌரவித்துள்ளனர்."கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரை கலை அரங்கு" இவ்வரங்கை நவாலியில் அமைத்துள்ளனர் கிராம மக்கள். இதை விட முதன்முறையாக அறிமுகம் செய்த முது கலைஞரிற்கான விருது (2004) பெற்றுள்ளார். "புதுமை நடிகன், கலைமதி, சர்வகலா வல்லவன், நடிப்பிசைதிலகம், நாடகக் குரிசில், தமிழ் நாடகக்கலைத்திலகம், கலாபூசணம், கலைஞானச்சுடர், கலைமாணிக்கம், கலைத்தென்றல்" இவை கலைஞர் பெற்ற விருதுகளில் குறிப்பிடும்படியானவை.

முகைவெடித்த மொட்டு என்ற நாவலுக்கு சாகித்திய மண்டலப்பரிசு பெற்றதுடன் 25 வரையான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கவிதைகள், வாழ்த்துப்பாவுடன் 20 மெல்லிசைப் பாடல்களை எழுதி குறிப்பிடும் படியான பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார். கலைப்பட்டதாரியான கலைஞர் 24 வருடங்கள் கண்டித் திருந்துவக் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவராக இருந்து பெரும் பணியாற்றியுள்ளார். வரலாறு, இலக்கியம், புராண, சமூக நாடகங்கள் 70க்கு மேல் எழுதி அநேகமானவற்றில் பிரதான பாத்திரமேற்று மிகச் சிறப்பாக நடித்த பெருமைக்குரியவன்.

வசனங்கள் பாடல்களை துடிப்புடன் மிகத் தெளிவாக அதேநேரம் லாவகமாக பிரித்தியம்பும் திறன் அவரிற்கே உரிய தனி அழகென்பதை நாடகக் காட்சியை எம்முடன் பகிர்ந்து கொண்டதில் இருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

முகைவெடித்த மொட்டு, சின்னவனா பெரியவனா, உலகம் எங்கள் கைகளில் போன்ற படைப்புக்கள் நூல் உருப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன் எனும் நாடக நூல் மிக விரைவில் நூல் உருப்பெறவுள்ளதனையும் குறிப்பிட வேண்டும். திருமதி மகேஸ்வரி செல்லத்துரை ஓய்வு பெற்ற ஆசிரியை என்பதுடன் மெல்லிசைப் பாடகியும் கூட.

ஈழத்து நாடகத்துறையில் குறிப்பிடும் படியானவர்களில் கலைஞரும் ஒருவர். எதுவித ஆடம்பரமுமின்றி வயோதிபத்தை தொலைத்து விட்டு இளைஞர்கள்போல் துடிப்புடன் இயங்கிவரும் அபூர்வகலைஞன் நா.செல்லத்துரை என்பதை நாடகத்துறை சார்ந்தவர்கள் நன்கறிவர்.

**"நியாயமான கருத்துகளை முன்வைக்கிற மனிதர்கள் சாதிக்கேலாமல் போகலாம், ஆனால் அவையள் தெரிவிக்கிற கருத்துக்கள் நிச்சயம் கருத்தரிக்கும், வளரும், நிமிரும்"**



உலா 50

# ஏ9 — ஏரம்பு

# எவர் கண்காணாது போனாலும் போகட்டும் காலம் எங்களுக்குக் கைகூடும்..!

"நியாயமான கருத்துகளை முன்வைக்கிற மனிதர்கள் சாதிக்கேலாமல் போகலாம், ஆனால் அவையள் தெரிவிக்கிற கருத்துக்கள் நிச்சயம் கருத்தரிக்கும், வளரும், நிமிரும்"

வணக்கம் வணக்கம்! என்ர சொந்தங்கள் எல்லாருக்கும் சந்தோசமான வணக்கங்கள்! இண்டைக்கு புதினம் என்னண்டு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். ஓமோம்! ஒவ்வொரு கிழமையும் நான் உலாத்தத்தொடங்கி 50ஆவது வாரம் பாருங்கோ இண்டைக்கு. கூடவே இந்தமுறை ஒருத்தற்றை குற்றங்கள் பற்றியும் நான் குறை சொல்லக்கூடாது எண்டு நினைச்சிருக்கிறன். என்னதான் அவசியமாய் இருந்தாலும் இண்டைக்கு எல்லா நொட்டை, நொடிசல்களையும் விட்டிட்டு எங்கட ஏறத்தாழ ஒருவருச பந்தத்தைப் பற்றிக் கதைப்போம். நானும் நெடுகலும் தனிப்பட்ட ரீதியில உங்களோட மனம் திறந்து கதைக்கோணும் எண்டு நினைக்கிறது. ஆனால், ஒவ்வொரு கிழமையும் ஏதோவொரு சோலி வந்திடும். இண்டைக்கு அதெல்லாத்தையும் ஒதுக்கி ஒரு ஓரமாய் வைப்பம்.

ஏனெண்டால் என்னைத் தெரிஞ்சவை நேர கருத்துச் சொல்லுவினம். சனசந்தடியான சில இடங்களில ஆரெண்டு தெரியாமல் ஆக்கள் கதைக்கிற நேரமும் சிலநேரம் சிலரின்ரை கருத்துகளைக் கேட்கமுடியிறது. பாராட்டு மட்டுமில்லாமல், ஆரோக்கியமான விமர்சனமும் மனசுக்கு ஒரு ஊக்கமாய் இருக்கும். ஏனெண்டால் தான் எழுதிறதுகள் எப்பிடி ஆக்களிட்டை போய்ச்சேருது எண்டு அறிஞ்சுகொள்ளமுடியாத 'ஒருவழி-ஊடகம்' ஆகத்தான் எங்கட தமிழ் ஊடகங்கள் இருக்கிது. அப்பிடியிருக்கிறதால உங்கட மனசை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவில தான் என்னாலயும் அறிஞ்சுகொள்ள முடியிது.

சிலவேளையில நினைப்பன்: உங்களில என்ரை பேரப்பிள்ளையள் தவிர மற்றவையளில சிலர் இவர் ஆர் இதைப்பற்றி குத்திக்காட்ட எண்டு மேலோட்டமாய் முற்கற்பிதங்களை அள்ளி வீசிப்போட்டு, அதிலை இருக்கிற நியாயங்களை உதாசீனம் செய்திடினமோ எண்டு.

ஏதோ எல்லாரும் எழுதினமே எண்டிட்டோ அல்லாட்டி என்ரை பேர் வரோணுமெண்டோ சத்தியமாய் எழுத வெளிக்கிடேல்லை. இப்பிடி நான் எழுதிக்கொண்டு வாறதை மற்ற எழுத்துகளோட வைச்சுப்பார்க்கிற அளவுக்கு என்ரை எழுத்துக்கள் தகுதியானவை எண்டு கூட நான் சொல்லமாட்டன். ஆனாலும், இந்த 49உலாக்களிலையும் இருந்த கனவுகள், ஏக்கங்கள், உணர்வுரீதியான சம்பவங்கள் எல்லாம் எந்த எழுத்துக்கு முன்னாலையும் நிமிர்ந்து நிற்கிற அளவுக்கு உண்மையானவை.

அதேநேரம் இன்னுமொரு விசயமும் எனக்கு சொல்லவேணும் எண்டுபடுது. கருத்துகளை எவரும் தெரிவிக்கலாம். ஆனால், அப்பிடி தன்னால தெரிவிக்கப்படிற கருத்துக்களை மற்றாக்கள் பின்பற்றவேணுமெண்டு விரும்பி mass-media எண்டு சொல்லப்படிற ஊடகங்களுக் குள்ள உள்ளர்றவை தங்கட எழுத்துகளுக்கு முரண்படாத தன்மையைக் கொண்டிருக்கிறது கட்டாயமான அவசியம். அப்பிடி தான் நேசிக்கிற பேனாவுக்கு உண்மையாய் இருக்கிறதை 'கற்பு' எண்டு சொல்லலாம் எண்டு நினைக்கிறன்.

"பேசாத பேச்சுக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான்", எண்டதை மாதிரித்தான் சமூகத்தில எதிர்பார்க்கிற மாற்றங்களை வெளிப்படுத்திற எழுத்துகளுக்கு உரியவர்களும் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாமல் உண்மையாய் இருக்கவேண்டும், எண்டிறதிலை அடுத்தவை கேட்கிற அளவுக்கு வைக்காமல், நான் என்னுடைய மனச்சாட்சிக்கு உண்மையாய் இருக்கிறன் எண்டதை மட்டும் உங்களுக்கு சொல்ல விரும்பிறன்.

இந்த விரதத்தில கடுமையாய் இருக்கிறதாலயோ என்னவோ கன வலிகளையும் (உலாக்களை உலாத்தத்தொடங்க முன்பிருந்தே) தாங்க வேண்டியிருந்திச்சு. அப்பவெல்லாம் யோசிப்பன் காயங்கள் மனுசருக்கே தவிர, அவர்தம் கனவுகளுக்கு அல்ல எண்டு. இந்த வகையில இந்தத்தாத்தாவின்ரை எழுத்துகளை நீங்கள் சிரத்தையோட சீர்தூக்கிப்பார்த்துப் பின்பற்றலாம்.

இப்பிடியெல்லாம் நான் சொல்லிறதைப் பார்த்திட்டு நீங்கள் கேட்கலாம்: 'பெரிசாய் பண்ணின மாதிரிக்கதைக்கிறியள். அப்பிடி என்ன பெரிய மாற்றத்தை இந்த 50 வாரங்களிலையும் உங்களால கிழிக்க முடிஞ்சிருக்கிது?' எண்டு. நியாயமான கேள்விதான்! நான் சந்திச்ச, முகங்கொடுத்த அனுபவங்களை ஒவ்வொருக்காவும் எழுதிற நேரமும் எத்தினையோ மாற்றம் கருதிற எதிர்பார்ப்புகள் என்னட்டை இருக்கும். அதெல்லாம் நிறைவேறிட்டோ எண்டு நீங்கள் கேட்டால், என்னட்டை சத்தியமாய் சந்தோசமான பதில் இல்லை.

இருந்தாலும் நான் சந்தோசப்படிறதுக்கெண்டு 2 காரணங்கள் என்னட்டை இருக்கிது: ஆரோக்கியமான கருத்துகளுக்கு ஆதரவளிக்கக் கூடிய வகையில இடைக்கிடை உங்களைச் சிரிக்கப்பண்ணியிருக்கிறன் எண்டிறது முதலாவது. ஏனெண்டால் ஒரு ஜீவனின்ரை முகத்தில ஆரோக்கியமான வழியில சிரிப்பை உண்டாக்கிப் பார்க்கேக்கிளை மனசுக்குள்ளை ஒரு பிரம்மக்களிப்பு உண்டாகும்.

மற்றது பாதகமான நிலைமையள் இரவோட இரவாய் அடியோட மாறாட்டியும், பிற்போக்குகளை நியாயப்படுத்த முனையிற வாய்களை குறிப்பிடத்தக்க அளவில அடைக்கிற அளவுக்கு பல வாய்களை உருவாக்க நசிருக்கிது. இந்த (என்னோட) வாய் இல்லாத இடத்திலையும் இன்னும் பலவாய்கள் எங்கட இனத்தின்ரை ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்குத் தடையாய் இருக்கிற பிற்போக்கு-மூடையளைச் சாடும், சாய்க்கும் எண்ட அளவில நம்பிக்கையாய் இருக்கிறன். நியாயமான கருத்துகளை முன்வைக்கிற மனிதர்கள் சாதிக்கேலாமல் போகலாம், ஆனால் கருத்துக்கள் நிச்சயம் கருத்தரிக்கும், வளரும், நிமிரும்.

கவிஞர் இன்குலாப் ஒருக்கால் பேட்டியொண்டில சொன்னவர்: 'சாதனை என்று கொண்டாட ஒன்றுமில்லாத போதிலும், தோல்வி என்று சலிப்புற எதுவுமில்லை. இலக்கு நோக்கிய சரிவுகளையெல்லாம் அனுபவமாகப் பார்க்கிறேன்' எண்டு. என்னோட அலம்பல்களை அவற்றை எழுத்தோட வைச்சுக் கதைக்காட்டியும், அவற்றை கருத்து மனசுக்குள்ளை ஒரு உந்துதலைத் தந்து நிற்கிது.

என்னடா இந்த மனுசன் இண்டைக்கு சரியான சென்ரிமென்ராய் ஆகீட்டிது எண்டு நினைப்பீங்கள். 'தீதும், நன்றும் பிறர்தர வாரா' எண்டு தன்னம்பிக்கையோட வாழ்ந்த எங்கட சமூகத்தின்ரை இண்டைய சில போக்குகள் எங்கட தமிழ் நெடுங் கணக்கு மாதிரித்தான் இருக்கிது. ஆ... என்னது? அதென்ன தமிழ் நெடுங்கணக்கு மாதிரி எண்டு கேட்கிறியளோ? இல்லைப்பாருங்கோ உலகத்தில எல்லா மொழியளும் கால ஓட்டத்துக்கு ஏற்றமாதிரி தங்களை பக்குவப்படுத்தி வளர்ச்சியடைஞ்சு கொண்டு வருகிது.

அடிக்கடி வெவ்வேறு எழுத்துச்சீர்திருத்தங்கள் பற்றியெல்லாம் கேள்விப்படிறம். எங்கட மொழியிலையும் பேச்சுமொழியில வழங்கப்படிற சில உச்சரிப்புகளுக்கு தகுந்த வரிவடிவங்கள் இல்லாமல் இருக்கிறதால தொடர்பாடல் ஊடகங்கள் ஒவ்வொரு விதத்திலையும் அதுகளைக் கையாண்டு குழப்பினம்.

அதாவது தேவையான டிஇகஇப போன்ற உச்சரிப்புகளுக்கு எழுத்துகள் இல்லாமல் இருக்க, உந்த ஙு,ஞா,ஞி,ஞீ. . எண்டொரு 19 எழுத்துகள் இருக்கிதெல்லோ! அதில தேவையில்லாமல் 17 (ஞ்,ஞா நீங்கலாக) எழுத்துகள் இடத்தைப் பிடிச்சுக்கொண்டு வெறுமனே வடிவுக்கு இருக்கிது. 'இல்லை இல்லை ஞமலி, ஞெகிழி கிடக்கிதெண்டு சொல்லிற செல்வங்கள் ! ஏன் கள், நாய், மயில், நெருப்புப்பொறி எண்டெல்லாம் சொற்கள் கிடக்கிது பாவிக்கலாம்தானே? ஆ.. சரி... இவர் அங்கையிஞ்சை கைவைச்சு கடைசியாய் கன்னித்தமிழிலையே கை வைச்சிட்டார் எண்டு நினைப்பியள். காலாகாலத்துக்கு கட்டிவைக்காமல் வைச்சுக்கொண்டு கன்னி எண்டு சொல்லிக்கொள்ளிறது பெருமை இல்லைப்பாருங்கோ! 2900 வருசங்களுக்கு முன்னால தொல்காப்பியமும், 1100 வருசங்களுக்கு முன்னால நன்னூலும் மொழியின்ரை தேவையை அறிஞ்சு மாற்றம் செய்யத்துணிஞ்சதைப் பார்த்த நாங்கள், உலகம் சடுதியான வளர்ச்சி கண்ட கடந்த 3 நூற்றாண்டுகளிலையும் சின்னனாய் 2 மாற்றங்களை மட்டும் தான் ஏற்றிருக்கிறோம்.

ஒலிக்கப்படிறதுக்கு முரணான எழுத்துக்களை மொழி கொண்டிருக்கிறதை தொல்காப்பியரே மாற்றொலியன்கள் எண்டும், மற்றைய இடங்களில வழுவமைதி எண்டும் விதிவிலக்குகளாக அனுமதிக்கிறார். ஆனாலும், தேவையளுக்கு ஏற்ற மாதிரி மாற்றங்களை நாங்கள் ஏற்படுத்திக்கொள்ளாட்டி இலக்கணத்தை மீறி மொழி முழுதும் விதிவிலக்குகளின் தொகுப்பு எண்டதாய்த்தான் அமையப்பார்க்கும். ஏதோ என்ரை அற்ப அறிவுக்குட்பட்டதை சொல்லிறன். ஊருலகத்தில வேட்டியள், சால்வையளோட கண்ணகிக்கோ, சீதைக்கோ கன கற்பு எண்டு பட்டிமன்றம் போட்டு வாதாடிக்கொண்டிருக்கிற பண்டித மணியள் நேரமெடுத்து உது களைக் கவனிக்கலாம்தானே! பொறுங்கோ! பொறுங்கோ! ஏதோவொரு பிரச்சினையைச் சொல்ல வெளிக்கிட்டு எங்கையோ வந்திட்டன். ஆ... அதுதான் தேவையில்லாத (ஞ், ஞா நீங்கலாக) ஞகர வரிசையளை வைச்சு அழகு பார்த்துக்கொண்டு, அத்தியாவசியமான தேவையளைப் பூர்த்தி செய்யிறதுக்குப் பின்னடிக்கிறோம், அதைத்தான் சொல்ல வந்தனான்.

இனத்தின்ரை ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு எங்கட போக்கு எப்பிடி அமையோணும் எண்டிறது குறிச்சு நாங்கள் தெளிவாய் இருக்கோணும். அதை எங்கட சனமும் தவறாமல் எழுச்சித்திருவிழாக்கள் மூலமாய் உணர்வுபூர்வமாய் வெளிப்படுத்தி வருகினம்.

ஏனெண்டால் எங்கட குரல் பலமாய் ஒலிக்கவேண்டியதொரு காலகட்டத்தில இருக்கிறோம். இல்லை உந்த பிபிசி ஐப் பாருங்கோ! முந்தி நல்லமாதிரி செய்தியளின்ரை முக்கியத்துவம் அறிஞ்சு பணியாற்றின அந்த வெள்ளைக்காரப்பொம்பிளை பிரான்சிஸ் ஹரிசனை தூக்கி ஈரானில போட்டிட்டு, ஒரு இந்தியன் பொம்பிளையை இப்ப இலங்கைக்குரிய செய்தியாளராய் போட்டிருக்கினம்.

அதுபாவம் பிரான்சிஸ் ஹரிசன் சுனாமி நேரம் எங்கட மக்கள் படிற துன்பங்களைப் பார்க்க முடியாமல் TRO-புனர்வாழ்வுக்கழகத்துக்கு 500 டொலர் நன்கொடை குடுத்தது அரச மேலிடத்துக்குப் பிடிக்கேல்லைப் போல. இப்பை இருக்கிறவா வவுனியாவுக்கு இஞ்சால நிலப்பகுதி இருக்கெண்டதையே அறியாதவா. ஏன் கிளிநொச்சியில லட்சம் சனம் சேர்ந்து கொடுத்த குரலை தமிழோசை மூச்சும் விடேல்லை, தங்களால முடிஞ்ச அளவுக்கு மூடி மறைச்சிட்டிது. தமிழோசைக்குரிய இலங்கை நிருபர்களின்ரை (தமிழாட்கள்) குரலையும் 2 கிழமையாய் காணேல்லை. அவசரகாலத் தடைச் சட்டத்தை பாவிச்சு அரசாங்கம் அச்சமுறுத்தீட்டிதாக்கும்.

எவர் எப்பிடி கண்காணாது போனாலும், எங்கட கடமையை நாங்கள் சரிவர ஆற்றினால் காலம் எங்களுக்கும் கைகூடும். இண்டைக்கு உலகிலையே பலம் வாய்ந்த வல்லரசாகவும், அசைக்க முடியாத பொருளாதார சக்தியாகவும் விளங்கிற அமெரிக்கா தனக்கு பிரித்தானியாவிட்டை இருந்து சுதந்திரம் வேணுமெண்டு கோரிப்போராடினதுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறியள்? 1765 ஆம் ஆண்டில அமெரிக்காவில ஒட்டப்படிற முத்திரைகளுக்கு வரி அறவிடிறதுக்கான சட்டமூலம் ஒண்டை பிரித்தானியா தன்ரை பாராளுமன்றத்தில அமுல் படுத்தினதுதான்.

(22ஆம் பக்கம் பார்க்க)




# இங்கிலாந்து அணியின் எழுச்சி..!

வேதனைகளும், சோதனைகளும் என்றுமே நிலையானவையல்ல. அதனோடு போராடி அதை வென்றெடுப்பதன் மூலம் அது சாதனைகளாக மாறி எழுச்சி கொள்கின்றது/ உலக வரலாறாகின்றது.

அப்படி எழுச்சி கொள்கின்றபோது அது தேசிய விழாவாக பரிமாணம் பெற்று நிற்பதை சொல்லித்தான் புரியவேண்டியதும் இல்லை.




இந்த வகையில், கடந்த 18 ஆண்டு கால வேதனைக்கு முற்று புள்ளி வைத்து இன்று கிரிக்கெட் உலகையே தான் பக்கம் ஈர்த்துள்ளது மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி.

கடந்த 12ஆம் திகதி ஓவல் அரங்கில் நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எந்தத் தரப்பிற்கு வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமையே இங்கிலாந்து அணியை உலகம் நோக்கம் காரணமாகியது. அதாவது, ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரை 2-1 என்ற நிலையில் கைப்பற்றியது இங்கிலாந்து அணி.

முன்னதாக முதலில் ஆடிய இங்கிலாந்து ஸ்ரோஸின் அபார சதத்தின் மூலம் தமது முதல் இனிங்சிற்காக 373 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலிய அணி லாங்கர், ஹெய்டன் ஆகியோரின் அபார துடுப்பாட்டம் காரணமாக நல்லதொரு தொடக்கதை ஏற்படுத்தினாலும் பின்னர் 367 ஓட்டங்களை தமது முதல் இனிங்சிற்காக பெற்றனர். இதில் ஹெய்டன், லாங்கர் ஆகியோர் சதம் பெற்றனர்.

இந்நிலையில் ஆட்டத்தில் (இயற்கை) மழை இடையிடையே குறிக்கிட்டு ஆட்டத்தின் பரபரப்பையும், விறுவிறுப்பையும் ரசிகர்களுக்குக் கொடுக்கத் தவறியது எனலாம்.

தமது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 67 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும், 126 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும் இழந்து இக்கட்டான நிலையை அடைந்ததுடன் ஆஷஸ் கோப்பையின் கனவும் நிறைவேறாது போய்விடுமோ என்ற எண்ணத்தையும் தோற்றுவித்தது. இந்நிலையில் பீற்றர்சனின் அபார துடுப்பாட்டத்தின் காரணமாக இங்கிலாந்து அணி ஸ்திர தன்மையை அடைந்ததுடன் கிண்ணத்தை பெற்றுவிட்டோம் என்ற உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது.

இதில் பீற்றர்சனின் பங்கு மிக முக்கியமானது. அவர் 158 ஓட்டங்களைப் பெற்றதே இங்கிலாந்து அணி இப்போட்டியை சமநிலை ஆக்கி வரலாற்றைப் படைக்க எழுதுகோலகியது.

இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி நான்கு பந்து வீசப்பட்ட நிலையில் வெளிச்சம் போதாமை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டதுடன் போட்டியும் எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இந்நிலையில், இங்கிலாந்தின் ஆதிக்கம் இந்த ஆஷஸ் தொடரில்தான் தொடக்கப் பட்டதில்லை. கடந்த ஐந்து டெஸ்ட் போட்டித் தொடர்களை வெற்றி கொண்டதில் இருந்தே அதன் வெற்றிப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அதை யாரும் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.



ஏனெனில், பலம் குன்றிய நாடுகளென கருதப்படும் பங்களாதேசுக்கு எதிரான ஒரு தொடரையும், மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டு தொடரையும், மற்றும் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தலா ஒரு தொடரையும் தொடர்ச்சியாக வெற்றி கொண்டுவந்தது.

இந்த வெற்றிகள் எல்லாம் அவர்களின் போராடும் திறனையும் அதிகரித்ததோடு ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணிக்கு சவாலை ஏற்படுத்தக்கூடிய வகையில் மன வலிமையை ஏற்படுத்தியிருந்தது எனலாம்.


இந்த நிலையில்தான் ஆஷஸ் தொடர் குறித்த கருத்துக்கள் அதிகம் வெளிவந்த வண்ணமிருந்தது. இதில் இரு அணித் தலைவர்களும் மற்றும் விமர்சகர்களும் தங்கள் கூற்றுக்களை வெளியிட்டிருந்தனர்.

இந்த வகையிலே, அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் இங்கிலாந்து மண்ணில் கால் பதித்தவுடன் "கடந்த இருபது ஆண்டுகளில் ஆஷஸ் தொடரில் தோற்கும் முதல் தலைவனாக இருக்கமாட்டேன். மாறாக கோப்பையை தக்கவைத்துக் கொண்ட இன்னொரு அவுஸ்திரேலிய தலைவனாகத்தான் இருப்பேன்" என்று சவால் விடுத்திருந்தார்.

அத்துடன் "பீற்றர்சன், பிளிண்டொப் ஆகியோர் தங்கள் அணிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவர்கள்' ஆபத்தானவர்கள்" என்றும் கூறியிருந்தார்.

இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் "இம்முறை ஆஷஸ் தொடரை வென்று 18 ஆண்டு கால வரலாற்றை மாற்றக்கூடிய இளம் அணி தயாராகி விட்டது. இதற்கு கடந்த ஐந்து டெஸ்ட் தொடர்களில் கிடைத்த வெற்றி வீரர்களுக்கு மன வலிமையை தந்தது" எனத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் ஆஷஸ் தொடரின் ஒவ்வொரு போட்டியின் முடிவுகளும் இரு தலைவர்களின் கூற்றை மெய்ப்பிப்பதாக அமைந்தாலும், வோகனின் தலைமையிலான இங்கிலாந்து அணியின் வளர்ச்சிக்கு ஒரு உச்ச வடிவம் கொடுத்ததாகவே ஆஷஸ் தொடர் அமைந்ததென்பது கூறித்தான் தெரியவேண்டியதில்லை.



எனவே, இங்கி லாந்து அணி புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் அவர்கள் மீதான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அடுத்து நடைபெறவுள்ள பாகிஸ்தான்-இந்தியா தொடர்களில் அவர்களின் வெற்றிப் பயணம் தொடரும் பட்சத்திலேயே அவர்கள் ஆஷஸ் தொடரில் கிடைத்த வெற்றியை மேலும் வலுப்பெற உந்துசக்தியாக இருக்கும் அதேவேளை ஒரு முதல் நிலையானவர்கள் என்பதை செயலால் புரிய வைப்பதாகவே இருக்கும்.

**பூ.சுபானந்**

# சிட்னியில் வழங்கப்படவுள்ள ஐ.சி.சி.யின் விருதுகள்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி)சார்பில் கடந்த ஆண்டு சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் அணி, சிறந்த ஒருநாள் அணி, சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒரு நாள் வீரர், நம்பிக்கை தரும் வீரர் ஆகிய விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஒஸ்கார் விருதுக்கு சமமாக இந்த விருதுகள் கிரிக்கெட்டில் மதிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு சிறந்த வீரருக்கான விருதை இந்தியாவின் ராகுல் ராவிட் தட்டிச் சென்றார். இந்த ஆண்டு இந்த விருதுகள் அடுத்த மாதம் 11 ஆம் திகதி சிட்னியில் வழங்கப்படுகிறது.

இதற்காக 56 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.இதில் ஒவ்வொரு அணியும் தற்போதைய கப்டன்கள், போட்டிக்கான நடுவர்கள், பத்திரிகையாளர்கள். முன்னாள் சிறந்த வீரர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பரிந்துரைக்கும் வீரர்களை ஐந்து பேர் கொண்ட குழு ஆய்வு செய்யும். இந்தக் குழுவின் தலைவராக இந்தியாவின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் உள்ளார்.இதில் இங்கிலாந்து முன்னாள் கப்டன் டேவிட் கோவர், நியூசிலாந்து முன்னாள் வீரர் ஹாட்லி, அவுஸ்திரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் மார்ஷ், மேற்கிந்திய தீவுகள் முன்னாள் கப்டன் வோல்ஷ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்த விருதுகளை பெறுவதற்காக தகுதியுள்ள வீரர்கள் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில் இதுவரை முரளியின் பெயர் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

International Cricket Council

# சச்சினுக்கு காலக்கெடு!



உலக அணி விளையாடும் மூன்று ஒருநாள் போட்டி, ஆறு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் நடக்கிறது. இதில் உலக அணியில் விளையாட இந்தியாவின் சச்சின்டெண்டுல்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வலது முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ள டெண்டுல்கர் கடந்த மூன்று மாதங்களாக எந்தப் போட்டியிலும் பங்கேற்கவில்லை. இலங்கையில் நடந்த முத்தரப்பு போட்டி, சிம்பாப்வேயில் நடந்து வரும் தொடர் ஆகியவற்றில் டெண்டுலகர் இடம் பெறவில்லை. இப்போது குணமடைந்து பயிற்சியில் டெண்டுல்கர் ஈடுபட்டு வருகிறார். உலக அணியில் விளையாட வேண்டுமென்றால் தனது உடற் தகுதியை 21ஆம் திகதிக்குள் டெண்டுல்கர் நிரூபிக்க வேண்டும் இல்லாவிடில் வேறு வீரரை தேர்வு செய்வோம் என்று ஐ.சி.சி கூறியுள்ளது.



# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

நீர்தொடர்பான அநேக நடைமுறைப் பிரச்சினைகள் எம்மத்தியில் உள்ளன. அதில் முக்கியமானது தரைக்கீழ் காணப்படும் நீரைப் பாவித்தல் ஆகும். யாழ்.குடாநாட்டில் இது தொடர்பான அக்கறையும் அவசரமும் தேவையானதாகும். 1960 ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட விவசாய நடவடிக்கைகள் தரைக்கீழ் நீரை அதிகம் விவசாய தேவைகளுக்கு பாவிக்கவைத்தன. இது தவிர அதிகரித்துவரும் ஏனைய மனித தேவைகளும் தரைக்கீழ் நீர்ப்பாவனையை அதிகரிக்கச் செய்துள்ளன.

இது தவிர பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த நீர் இறைக்கும் முறைகள் கைவிடப்பட்டு மண்ணெண்ணை/ஒயில்/மின்சாரம் மூலம் இயக்கப்படும் நீர் இறைக்கும் இயந்திரச் செயற்பாடுகளும் அதிகரித்துவிட்டன.

இவை தேவைக்கு அதிகமான நீரை தரைக்கு கீழ் இருந்து இழுத்தெடுத்து நீர் விரைவில் போக காரணியா கின்றது.

இவ்வாறான தொடர்ச்சியான செயற்பாடுகள் யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீரின் வளத்தை பெரிதும் பாதிக்கும்/பாதித்து வருகின்றது என்பது மறைக்க முடியாத உண்மையே.

இதன் காரணமாக ஒரு வில்லைகளாகக் காணப்படும் தரைக்கீழ் நீர் வில்லைகள் விரைவாக குறைந்து விடுவதுடன் இதனால் ஏற்படும் இடைவெளிகளை நிரப்ப கடல் நீர் உள்ளே புகுந்து விடுகின்றது.

இச் செயற்பாட்டால் பல நன்னீர்க் கிணறுகள் தொடர்ச்சியாக உவர் நீர்க் கிணறுகளாக மாறி வருகின்றன.

இதற்கு மாற்றீடாக மழைக்காலத்தில் பெறப்படும் மழை நீர் போதுமான முறையில் தரைக்கீழ் சேகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக பலராலும் சுட்டிக் காட்டப்பட்டே வருகின்றது.

தரையில் கீழ் இருந்து பெறப்படும் நீரும் தரைக்குக் கீழ் சேகரிக்கப்படும் நீரும் சமச்சீரான முறையில் இருக்குமானால் நன்னீர் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்பட வாய்ப்பில்லை

எனவே மழை நீரை தரைக்குக் கீழ் சேகரிக்கும் சகல செயற்பாடுகளும் முடுக்கிவிடப்பட வேண்டிய தேவை உள்ளது.

இது தனி மனிதர்களாலும் ஏனைய பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒருங்கமைந்த செயற்பாடுகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான செயற்பாடாகும்.

## தூவல் நீர்ப்பாசனம் ஒரு பயன்தரும் பொறிமுறை

யாழ். குடாநாட்டு நீர்வளம:-

யாழ். குடாநாடு இலங்கையின் உலர் வலயப்பகுதியில் காணப்படுகிறது. ஆண்டு தோறும் ஏறத்தாழ 1200-1300 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியை பெற்றுக்கொள்கிறது. இம்மழை வீழ்ச்சி 3 அல்லது 4 மாதங்களுக்கே கிடைக்ககூடியதாய் உள்ளது. (செப்ரெம்பர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில்)

இங்கு நிலத்தடி நீருக்கு முக்கிய நீர் வழங்கியாக மழை வீழ்ச்சியே காணப்படுகின்றது.குடாநாட்டில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய குளங்கள் காணப்பட்ட போதிலும் இவை நேரடியாக நீர்த் தேவையை நிறைவு செய்யாமல், அக் குளங்களைச் சுற்றியுள்ள கிணறுகளின் நீர் மட்டத்தை கோடை காலத்திலும் நிலை நிறுத்துவதற்கு உதவுவதன் மூலம் நிலத்தடி நீரினைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

குடாநாட்டில் நிலத்தடியில் காணப்படும் சுண்ணாம்புக் கல்லும் மண்ணும் நீர் உட்புகுந்து, தங்கி நிற்கக் காரணமாகின்றன. இப் பாறைகளினுள் மழைநீர் உட்புகுந்து நிரம்பி அவை நன்னீர்த் தாழியாக அமைந்துள்ளன.

வலிகாமம், தென்மராட்சி போன்ற பகுதிகள் செறிவான நீர் வளத்தைக் கொண்டுள்ளன. வடமராட்சிப் பகுதி ஊடறுக்கப்பட்ட இடைக்கிடையே உப்பு நீர் கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண கடலேரியோரங்கள், தென்மராட்சி கிழக்கு, மேற்கு, வடக்குக் கரையோரங்கள், வலிகாமத்தைச் சுற்றிய கரையோரங்கள், தீவகக் கடலோரப் பகுதிகள் என்பன இடைக்கிடையே உப்பு நீரைக்கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுக விடும் இயல்புகொண்ட தரைகளாக விளங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருடா வருடம் மழைவீழ்ச்சியின் மூலம் 1200 மில்லியன் கனமீற்றர் நீர் கிடைக்கின்றது. இதில் சுமார் 470 மில்லியன் கனமீற்றர் நீர் ஆவியாதல் (Evaporation) மூலமும் 420 மில்லியன் கனமீற்றர் நீர் மேற்பரப்பு வழிந்தோடல் (Runoff) மூலமும் கடலைச் சென்றடைகின்றது. மீதமாகவுள்ள 310 மில்லியன் கனமீற்றர் நீரே நிலத்தடி நீராகச சென்றடைகின்றது. அதிலும் பக்க ஊடுருவல் மூலம் (Seapage) 50 மில்லியன் கனமீற்றர் கடலுக்கு இழக்கப்படுகின்றது.

ஆக 260 மில்லியன் கனமீற்றர் நீரே நிலத்தடி நீராகச் சென்றடைகின்றது.

இவ்வாறு சேமிக்கப்பட்டதில் வீட்டுத் தேவைகளுக்காகவும், விவசாயத் தேவைகளுக்காகவும் தரைக்கீழ் நீர் வெளியேற்றப்படுகின்றது.

பல்வேறு தேவைகளுக்காக வெளியேற்றப்படும் தரைக் கீழ் நீரின் அளவை பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

| பயன்பாடு | வெளியேற்றப்படும் தரைக்கீழ் நீரின் அளவு |
|---|---|
| வீட்டுத்தேவைகள் | 16.2மில்லியன் கனமீற்றர் |
| வீட்டுத்தோட்டம் மற்றும் பழமரச் செய்கை | 56 மில்லியன் கனமீற்றர். |
| நீர்ப்பாசனம் | 167.4 மில்லியன் கனமீற்றர். |
| பெரிய மரங்கள் | 51.1 மில்லியன் கனமீற்றர். |
| மொத்தம் | 290.7 மில்லியன் கனமீற்றர். |

எனவே விளைவாக 30 மில்லி யன் கனமீற்றர் நீர் கடந்த காலங்களில் சேமிக்கப்பட்ட நிலத்தடி நீரிலிருந்து வருடாவருடம் மேலதிகமாக நுகரப்பட்டுக்கொண்டு செல்கிறது.

இதில் பெருமளவு பங்கு நீர்ப்பாசனத்திற்காகவே வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு பெருமளவு நன்னீர் வெளியேற்றப்படும் போது நன்னீர் மட்டம் குறைவடைவதுடன் உவர் நீரும் உள்வருவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கிறது.

யாழ்.குடாநாட்டில் 145 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நன்னீர் காணப்படுவதாக மதிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கால நீர்ப்பாசனமும் ஏனைய செய்கை முறைகளும் விவசாயத் தேவைகளுக்கான நீரின் அளவை மட்டுப்படுத்தக்கூடிய அளவில் பயன்படுத்த வழிவகுத்தன.

அன்றைய நீர்ப்பாசன முறையில் பல ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால், நிலத்தடி நீர் தேவைக்கதிகமாக வெளியேற்றப்பட்டு விரயம் செய்யப்படுகிறது. இதனால் நிலத்தடி நன்னீர் இருப்பு கேள்விக்குறியாவது தெளிவாகின்றது.

எனவே நீர்ப்பாசனத் தேவைகளுக்காக நிலத்தடி நீரிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைக் குறைப்பதற்கு தற்பொழுது விவசாயிகள் பயன்படுத்தும் நீர்ப்பாசன முறைகளை மாற்றியமைத்து பயிர்களுக்கே நேரடியாக நீர்ப்பாசனம் செய்யக் கூடிய வகையில் நவீன நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

***தூவல் நீர்ப்பாசனம்:-***

தூவல் நீர்ப்பாசனம் என்பது நுண் நீர்ப்பாய்ச்சல் வகையைச் சார்ந்த நீர்ப்பாசனம் ஆகும். இம்முறையில் நீரானது உயரமுக்கத்தைப் பயன்படுத்தி சிறிய துவாரமுள்ள குழாய்களினூடாக பயிர்களின் மீது விசிறியடிக்கப்படுகின்றது. இத் தோற்றப்படானது மழைத்தூறலைப் போன்றதாகும்.

இத் தூவல் நீர்ப்பாசன முறையினால், பயிர் நிலங்களில் ஏனைய நீர்ப்பாசன முறைகளை விட சீரான நீர்ப்பரம்பல் பெறப்படுகின்றது.

***நன்மைகள்:-***

01. இந் நீர்ப்பாசன முறையானது ஏனைய பாரம்பரிய நீர்ப்பாசன முறைகளுடன் ஒப்பிடும் போது பயிர் நிலங்களில் கூடிய வினைத்திறனுள்ளதாகக் காணப்படுகின்றது.

02. இதில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் இலகுத் தன்மை காரணமாக எத்தகைய தரை உயர வேறுபாடுகள் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களிற்கும் பயன்படுத்த முடியும்.

**வி.இளங்குமார்,**
**விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்.**

03. பயிர் நிலங்களை ஒரு குளிர்ச்சியான நிலையில் பேணுவதால் வித்து முளைத்தலிற்கும் நாற்று வளர்ச்சிக்கும் துணை புரிவதுடன், விளைச்சலின் தரத்திலும் அளவிலும் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்படும்.

04. இந் நீர்ப்பாசன தொகுதியினூடாக திரவ நிலையில் இரசாயனப் பசளைகள், களைநாசினிகள், பூச்சிநாசினிகள் விசிறக்கூடியதாக உள்ளதால், வேலையாட்கள் பற்றாக் குறையான இக் காலப்பகுதியில் வேலையாட் செலவைக் குறைத்து உற்பத்திச் செலவைக் குறைக்கமுடியும்.

05. நீரை விசிறியடிக்கும் போது, சில வகையான பீடைகள், பயிரின் மேற்பகுதியில் இருந்து கழுவியகற்றப் படுவதால், பொறிமுறை ரீதியான பீடைக்கட்டுப்பாடும் சாத்தியமாகிறது.

உதாரணமாக, மிளகாயில் இலைச்சுருளல் சிக்கலை ஏற்படுத்தும் காரணிகளான பனிப்பூச்சியும் சிற்றுண்ணியும் தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் கழுவப்பட்டு அகற்றப்படுவதனால் இலைச்சுருளல் மூலம் ஏற்படும் தாக்கம் குறைக்கப்படுகிறது.


06. தூவல் நீர்ப்பாசனம் செய்யும்போது பாத்திகள், வாய்க்கால்கள் என்பன தேவையற்ற க்ாரணத்தினால் பயிரடர்த்தி கூட்டப்படும்.

07. மண்ணரிப்பைத் தடுக்கின்றது.

08. தூவல் நீர்ப்பாசனம் ஆனது மண்ணின் நீரினளவை வயல் கொள்ளளவில் (Field capacity) வைத்திருக்க உதவுகின்றது. இதன் மூலம் உச்ச விளைவைப் பெறக்கூடியதாக உள்ளது.

09. தாவரங்களுக்குத் தேவையான நீரின் அளவை மட்டும் மண்ணிற்கு வழங்கப்படுவதால் மண்ணில் உவர்த்தன்மை உருவாக்கப்படும் சாத்தியக்கூறுகள் இல்லை. அத்துடன் மண்ணில் காணப்படும் நைத்திரேற்றுக்கள் நிலத்தடி நீருக்கு எடுத்துச் செல்லப்படாமையினால் நிலத்தடி நீரின் தரமானது பாதிக்கப்படமாட்டாது.

10. பனிக்காலங்களில், பனி தாவரங்களின் இலைகளில் படிவடைந்து காலையில் சூரிய வெப்பத்தினால் ஆவியாகும்பொழுது நுனி கருகல் ஏற்படும். ஆனால் தூவல் நீர்ப்பாசனம் மூலம் இலைகளின் மேற்பரப்பிலுள்ள பனித்துளிகள் அகற்றப்படுவதனால், இலைகளில் ஏற்படும் நுனி கருகல் தடுக்கப்படுகின்றது. (மிகுதி அடுத்தவாரம்)



## முயற்சியே வெற்றிக்கு வழி


எந்த மனிதர்களாயினும் முயற்சி என்ற ஒன்று இல்லாமல் இருக்க முடியாது. நல்ல பயன் தரக் கூடிய பாதையாகவும் இருக்கலாம். பயன் அற்ற பாதையாகவும் இருக்கலாம். நல்லதொரு பாதையில் இலக்கின் தன்மையை அறிந்து அதற்கேற்றவாறு முயற்சி செய்தால் வெற்றி எம் பக்கமே. முயற்சி உடையவனுக்கு பாதை எப்பொழுதும் திறந்திருக்கும். சோம்பிக் கிடப்பவனுக்கு பாதை மூடியே இருக்கும்.

ஒரு குழந்தை திடீரென் எழுந்து நடக்க முடியாத படியால் படிப்படியாக முயற்சி செய்தே நடக்க ஆரம்பிக்கின்றது. இவ்வுலகில் எங்களால் இயலாதது என்று எதுவும் இல்லை. முயற்சி செய்தால் எதனையும் அடையலாம். பொழுது போகவில்லை என்று சொல்லி சிலர் பகலிலேயே படம் பார்ப்பதற்கு சினிமாவிற்கு செல்கின்றனர். இதனைப் பயன்படுத்தி திரைப்படத் துறையினர் தம் முயற்சியால் வருமானத்தை ஈட்டுகிற அதேவேளை படம் பார்க்க போனவர்கள் தம் நேரத்தையும் வீணாக்கி, பணத்தையும் செலவு செய்வதால் வீண் விரயமே ஏற்படுகிறது. எண்ணங்களை செயல் வடிவமாக பிரதிபலிக்க வேண்டுமானால் முயற்சி எடுத்து செயற்பட்டால் தான் முடியும்.

அப்படியானவர்கள் தான் புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், சாதனைகளையும் சாதிக்கின்றனர். நாம் எந்தச் செயலாயினும் சரி இடைவிடாத முயற்சியோடு செயற்படுத்தும் போது கூட எதிர்கொள்ளும் பேச்சுக்கள், நச்சரிப்புக்கள், ஏளனங்கள், அபிப்பிராயம் கேட்டால் நக்கலாக கிண்டல் பண்ணுதல், எதிர்ப்புக்கள் இப்படியாக பல பிரச்சினைகள் ஏராளம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இவற்றை தடையாக நினைக்காமல் வைராக்கிய மனதோடு படிக்கற்களாக ஏற்றுக் கொண்டு, சவாலாக எம் முயற்சியைக் கைவிடாமல் செயற்பட்டால் அதன் வெற்றி எம் கைவசமாகிவிடும். அப்படிச் செயற்பட்டவர்களே உலகம் போற்றும் நிலையில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். விடா முயற்சியே வெற்றியின் இரகசியம் என்கிறார் விவேகானந்தர். எனவே முயற்சி செய்வோம், செயற்படுத்துவோம், காலத்தை வசமாக்குவோம் வெற்றி எம் கையில்.

**பா.கஸ்தூரி**

# பெண்ணுரிமை புதுக்கவிதைகள் ஒரு நோக்கு



உரிமைகளையும், கடமைகளையும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயல்பாகவும், சமமாகவும் அமைய வேண்டும். ஆனால் சமய ஆதிக்கமும், பொருளாதிக்கமும், அரசியல் ஆதிக்கமும், ஆண் ஆதிக்கமும் உருவானபோது சமூக வாழ்விலும், குடும்ப வாழ்விலும், தனி மனித வாழ்விலும் பெண்களின் வாழ்வில் பேதமும், ஒரு தாழ்வும், உரிமை மறுப்பும் ஏற்பட்டன. இவற்றைப் பல அறிஞர்கள் எதிர்த்து, பெண்களின் உரிமைக்கும் வாழ்விற்கும் பாடுபட்டுள்ளனர். பெண்ணுரிமையை நிலை நாட்டச் சட்டங்கள் இருந்தும், இல்லாமலும் நடைமுறையில் பெண்ணுரிமை என்பது பல இடங்களில் கனவாகவும், இலட்சியமாகவும், சில இடங்களில் அடையாளமாகவும் தான் வெளிப்படுகின்றன. இச் சூழலில் புதுக் கவிதை கூறியுள்ள பெண்ணுரிமை இக் கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நேற்றைய இலக்கியத்தில் பெண், சங்க இலக்கியத்தில் பெண்; சங்க இலக்கியத்தில் இளங்கீரனார் பாடிய “............. உள்ளியவிளைமுடித் தன்ன இனியோள்” (நற்றிணை) என்பதில் பெண்மையைப் போற்றி வாழ்ந்துள்ளதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலனின் சோதனையான நேரத்தில் ‘சிலம்புள கொண்டும்’ என்று நம்பிக்கை தந்ததோடு, கணவனைக் கொன்ற பாண்டிய நெடுஞ்செழியனை எதிர்த்துக் குரல் கொடுக்கிறாள். இது ஆண்மையைப் போற்றிய பெண்ணின் எதிர்ப்புக் குரல். ஆனால், கம்பரின் காவியத்தில் வரும் சீதை அசோகவனத்தில் சிறை வைக்கப் பட்டபோது,

**“எல்லை நீத்த உலகங்கள் யாவும் என் சொல்லினால்**
**சுடுவேன், அது தூயவன்**
**வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்”**

என்பதில் சீதையிடம் இருந்த போர்க்குணமும், ஆண்மையைப் போற்றிய பெருமித உணர்வும் வெளிப்படுகின்றன. ஆனால் இராமனோ மீண்டு வந்து சீதையை ஒரு குற்றமற்றவளாகக் காட்டத் தீக்குளிக்கச் சொல்லும் போது பெண்மை அங்கே மறுபரிசீலனைக் குட்படுத்தப் படுகிறது.

கண்ணகி,சீதை ஆகியோரின் இச் செயல்களைப் புதுக் கவிதையாக்கிய கவிஞர் புவியரசு,

**“சீதை மூழ்கிய தீயில் ராமன்**
**சந்தேகம் தகனம்**
**கண்ணகி மூட்டிய தீயில் அரசின்**
**கொடுங்கோன்மை தகனம்”**

என்று மறுவார்ப்புச் செய்துள்ளார். மேலும் பல புதுக் கவிதைகள்,

**அன்று**
**கண்ணகி**
**கோவலனுக்காகச்**
**சிலம்பை உடைத்தாள்**
**மதுரையை எரித்தாள்**
**ஆனால்**
**இன்றைய**
**கோவலர்கள்**
**சிலம்புக்காகக்**
**கண்ணகியை எரிக்கிறார்கள்.**

**என்றும்**

**‘நவீன இராமர்களின்**
**கால்கள்**
**அன்றாடம் மிதிக்கின்றன,**
**அபலைகளை**
**குடும்பத்தின்**
**குத்துவிளக்குகள்**
**குத்துக் கல்லாகின்றன’**

என்றும் கூறும் வரிகள் பெண்களைக் கொடுமைப் படுத்தி, இழி நிலைக்களாக்கும் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துவதையே காண்கிறோம்.

பாரதி, பாரதிதாசனின் பெண் என்பன கூட இக் கவிஞர்களின் கவித்துவத்தில் பெண் விடுதலையை அவாவி நிற்கின்றன. நாட்டு விடுதலையையும், சமுதாய விடுதலையையும் பாட வந்த பாரதியார் தான்,

“ஆணும் பெண்ணும்
சம உரிமை பெறக்
கற்பை இருவருக்
கும் பொதுவில்
வைப்போம்”

என்னும் புதிய பண்பாட்டுக் குரலைச் சமுதாயத்தில் முன வைக்கின்றார். அத்தோடு பாரதியார் பெண்கள் சமுதாய வாழ்விலும், நாட்டு வாழ்விலும் சட்டங்கள், பட்டங்கள் பல பெற்றுப் பணிகள் பல ஏற்கும் புதுமைப் பெண்ணாக வரவேற்றுப் பாடியுள்ளார். இந்தக் கனவின் அடையாளங்களை நம்மிடையே சில இடங்களில் பார்த்தாலும் இன்னும் பெண்ணுரிமை நிறைவு பெறவில்லை. பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் உலக வாழ்க்கை இல்லை என்பதைச் சொல்லும் பாரதி,

“பெண்ணுக்கு விடுதலை நீரிலை என்றால் பின்னிந்தவுலகினிலே வாழ்க்கை இல்லை” என்கிறார். இதைத் தான் ஷெல்லியும்,

“Can man be free if woman be a slave?”

என்பதில் பெண்ணை அடிமைப் படுத்தி விட்டு ஆண் உரிமை பெற முடியுமா? எனும் கேள்வியில் பாரதியார் உணர்வை வழி மொழிகின்றார்.

பாரதி படைத்த பாஞ்சாலி சபதத்தில் பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்துப் பேசும் பாஞ்சாலி,

“.................என்ன சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?”

என்று எதிர்ப்புக் குரல் கொடுக்கின்றாள் இறுதியில் பாஞ்சாலி,

**“பாவி துச்சாதனன் செந்நீர்-அந்தப் பாழ்த் துரியோதனன் ஆக்கையிரத்தம்.**
**மேவியிரண்டுங் கலந்து-குழல்**
**மீதினிற் பூசி நறுநெய் குளித்தே**
**சீவிக் குழல் முடிப்பேன் யான்”**

என்று வீரசபதத்தைப் பிரகடனப்படுத்துகின்றாள். மக்களாட்சியையும், சமத்துவம், சமுதாயத் தேடலையும் முன்வைத்துப் பாடிய வால்ட்விட்மன் கூட,

“The female equally with the man I Sing”

“I am the poet of the woman the same as the man and I say it is as great to be a woman as to be a man and I say there is nothing greatre than the mother of man”

எனும் கவிதைகளில் பெண்ணுரிமையையும், தாய்மையின் பெருமையையும் பாடியுள்ளார்.

புதிய உலகம் படைக்க விரும்பிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நாட்டில் பெண்ணடிமைத் தனம் இருக்கும் வரை நாட்டின் அடிமைத்தனம் போகாது என்பதை வலியுறுத்திக் கூறும்போது,

“பெண்ணடிமை தீரு மட்டும் பேசுந்திரு நாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே” என்கிறார்.

பெண் விடுதலையே அவரின் கவிதைகளில் முகப்புரையாக அமைந்துள்ளது. இந்த நோக்கத்தில் தான் பாரதிதாசன் தம் படைப்புகளில் பெண்மையை ஓங்கச் செய்தும், ஆண்மையை ஒதுங்கச் செய்துமுள்ளார். சம உரிமையான வாழ்வைத் தேடும் பெண்களைத் தமது படைப்புக்கள் மூலம் சித்தரித்துக் காட்டியுள்ளார். பாரதியின் பாஞ்சாலியோ, கொடுமைக் காரர்களை எதிர்த்துப் போராட ஒரு வீர சபதம் எடுக்கிறாள் ஆனால் இவரோ, தினமும் எங்கள் தெருவில்...

*இராம மோகங்களால் மறக்கப் பட்டு*
*இராவணக் காமங்களால் செதுக்கப்படும்*
*சீதைகளின் கல் படிமங்கள்*
*கணமும் எங்கள் வீடுகளில்....”*

என்பதில் பெண்களின் நிலையைக் காட்சிப் படுத்தியுள்ளார். இக் குறியீட்டுக் கவிதையில் மாறிய சமூகச் சூழலிலும் கருணையால், கடனால், வறுமையால், காமத்தால் பெண்கள் இன்னும் அடிமைப்பட்டுத் தான் இருக்கிறார்கள் என்கிறார் கவிஞர் புவியரசு.

அப்துல் ரகுமான் கவிதையில் சமுதாய அடக்குமுறையிலிருந்து மீண்டு மானிட சமத்துவத்தை விளக்கும் கவி வரிகளாகவும் அடக்குமுறையின் குரூரத்தை வெளிப்படுத்தும் வகையிலும்...

**“நீதி தேவதையே**
**உன் தராசுத் தட்டுக்களைக்**
**கொஞ்சம் கண் திறந்து பார்**
**அங்கே**
**புறாவின் மாமிசத்தைச்**
**சிபிகள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள் என்பதும்,**
**“தரும தேவதை**
**தினக் கூலி வாங்கிக் கொண்டு**
**திசைகளுக்குக்**
**கறுப்பு அடிக்கப் போய் விட்டாள்”**

என்பதும் விளங்குகின்றன. கவிஞர் அப்துல் ரகுமான் பெண்மைக்கு முன்னால் ஆண்மை குற்றவாளிக் கூண்டில் பெண்ணடிமைப் படுத்திய போக்கை ஒரு ஒப்புதல் வாக்கு மூலமாக கவிதையில் பதிவு செய்கின்றார்.

“பெண்ணே
அடி நாள் தொட்டு
உன்னை எரித்த நெருப்புகளிலிருந்து
விசுவ ரூபமெடுத்து நிற்கிறாய் நீ
எங்கள் வெற்றிகளுக்குப் பின்னால்
நீ இருந்தாய்
உன் தோல்விகளுக்குப் பின்னால்
நாம் இருந்தோம்
இலக்கணங்களை உனக்கு வற்புறுத்தினோம்
நாம் வலு அமைதிகளாக இருந்தோம்.
நீ உன்னை விற்றால் அது விபச்சாரம்
நாம் எங்களை விற்றால்
அது திருமணம் என்றோம்
இந்திரனாகி
உன்னைக் கற்பழிப்பவர்களும் நாம் தாம்
கௌதமனாகி
உன்னைச் சபிப்பவர்களும் நாம் தாம்
இதோ; உன் முன்னால் குற்ற உணர்ச்சியுடன்
தலை குனிந்து நிற்கிறோம்
உன் பெண்மை என்ற
தெய்வீக நெருப்பில்
எங்களைப் பரிசுத்தப் படுத்துவாயாக.

என்பதில் ஆண்மை, பெண்மையைக் கொடுமைப்படுத்தியதை உணர்ந்து தம்மைப் பரிசுத்தப்படுத்த வேண்டுகிறது. இவ் வேண்டுதலில் பெண்ணுரி மையே கவிதையின் ஆதார சுருதியாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மேலும்
‘பூக்களுக்கு
முது கெலும்பு இல்லை
பெண்களுக்குப்
பாதுகாப்பும் இல்லை’

என்பதானது கூட பெண்களின் பாதுகாப்பின்மையும், ஒடுக்குதலையும் குறித்து நிற்கின்றது.

இப்படிப் பல புதுக் கவிதைகளில் பெண்ணின் உரிமை முன் வைக்கப்பட்டிருந்தாலும் கவிஞர்கள் கூறுவது போல் பெண் உரிமை இன்னும் முழுமை பெறவில்லை. பாட்டளவிலே பேச்சளவிலேயே நின்று கொண்டிருக்கிறது. மக்களாட்சியின் மரபும், உரிமையும் அதிக அளவில் பேசப்படும் இந் நாளில் தான் விளம்பரங்களிலும், திரைப்படங்களிலும் பெண்களை ஒரு நுகர்வுப் பொருளாகக் காட்டி வருகின்ற அவலநிலை ஒரு பக்கம் நிலவி வருகிறது. பெண்கள் மனிதர்களாக வாழ தத்தம் உரிமைகளைப் பெறுவதற்கு, ஆணாதிக்க சக்திகள் வழிவிட்டு ஒதுங்க வேண்டும். அனைவரது ஒருமித்த பார்வை அவசியம்.

**மாதங்கி**


## Computer World Show
yalsalai Kilinochchi

கிளிநகரில் முருகன் கோவில் முன்பாக



சகல விதமான கணனி திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்

Offer Prize Toner



ஒவ்வொரு கணனிக்கும் 2வருட உத்திரவாதம்



Computer Sales
Computer Repair
Photo Copy
Printing
Scaning
Type Setting
CD Writing
Photo Design





Power Tree UPS 4250/-

Special Prize

Power Tree UPS
HP LaserJet Printer
Kingston Flash Drive
INDIAN Background CD
Canon Cartridge
CD Writer
Epson Ribbon
Computer Printers

(6713)



## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 13 * 10 * 1983



தாயக மடியில் 16 * 09 * 2004

**கப்டன் .இளங்கோவன்/இளங்கோ**
**(சுப்பையா குகநாதன்/நாதன்)**
[கிட்டு பிரங்கிப் படையணி]
7ஆம்வாய்க்கால் ஆலடிச்சந்தி, கிளிநொச்சி

அனல் சுமக்கும் நெஞ்சுடனே
ஆண்டொன்றுசென்றதைய்யா
ஆனாலும் உன்நினைவு
அகலாது எமைவிட்டு

அன்னாரின் வீரவணக்க நிகழ்வில் கலந்துகொண்டு எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும்எமது மனமார்ந்த நன்றிகள்.

குடும்பத்தினர்,
D-7 ஆலடிச்சந்தி,
கிளிநொச்சி.

(சி .12853)




**அத்தியாயம்- 15**

**பகுதி -64**

டிப்ஸ் விளையாட்டறைக்குள் வரும் பொழுதே "மதிய வணக்கம்" என்றபடி வந்தான். "நான் விரும்புவதையெல்லாம் செய்யக்கூடிய மந்திரலோக அறைக்கு இன்னுமொரு நாள் என்னை அழைத்து வந்திருக்கிறது. இண்டைக்கு என்ன செய்யவேணுமெண்டு நான் ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறன்.''

" இண்டைக்கான திட்டங்களோடயா வந்திருக்கிறீங்க?'' என்று கேட்ட நான்," நல்லது, நீங்கள் என்ன முடிவை எடுத்திருந்தாலும் அதைச் செய்யிறது உங்களைப் பொறுத்தது தான்'' என்றேன்.

மணல் பெட்டியைப் பார்த்தபடி அறைக்குள் சுற்றிவந்தான். பொம்மைவீட்டைப் பார்வையிட்டான். அங்கிருந்த பொம்மைக் குடும்பத்தை எடுத்துப் பார்த்தான்.

" இங்க அப்பா இருக்




கிறார். அம்மாவும் இருக்கிறா சகோதரியும் பையனும் இருக்கினம். எல்லோரும் வீட்டுக்குள்ள இருக்கினம்'' அந்த பொம்மைகளை வீட்டுக்குள்ளேயே திரும்ப வைத்து விட்டு ஜன்னலை நோக்கி நடந்து சென்றவன் எதுவுமே பேசாமல் நீண்ட நேரம் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

" அந்தக் குடும்பம் வீட்டுக்குள்ள இருக்குது'' என்று விட்டு, ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த அவனது அமைதியில் நானும் கலந்து கொண்டேன். இறுதியாக ஆழ்ந்த பெருமூச்சொன்றை அவன் வெளிவிட்டான். சிறிதளவு திரும்பிய அவன் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான். "சும்மா ஜன்னலுக்கு வெளியால பார்த்துக் கொண்டிருந்தாலே அற்புதமான கனக்க விசயங்கள காணக்கூடியதா இருக்குது. பெரிசாவும் பெலமாவும் வளருற மரங்கள்... வானத்துக்குள்ள உயர்ந்து செல்லுற ஆலயம்... ஆக்கள் நடந்து போறத காணுறன். எல்லா வகையான ஆக்களும் அதில இருக்கினம். சில கார்கள் ட்ரக்குகளையும் காணுறன். இந்த ஆக்கள்... அவயள்ள எல்லா வகையான ஆக்களும் இருக்கினம். சில வேளைகளில எனக்கு இந்த ஆக்களுக்குப் பயமா இருக்கிறது.

" சில நேரங்களில இந்த ஆக்களால உங்களுக்குப் பயமா இருக்கிறதா?'' அவனைத் தொடர்ந்து பேச வைக்கும் எதிர்பார்ப்பில் நான் கேட்டேன்.

" சில நேரங்களில நான் அவயளுக்குப் பயப்பிடுறதில்ல'' என்றுவிட்டு " உங்களில எனக்குப் பயமில்ல'' என்றான்.

" என்னோட இருக்கயுக்க உங்களுக்குப் பயம் வாறயில்லயா?'' என்று கேட்டேன்.

"இல்லை'' என்றுவிட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சை வெளிவிட்டான். உங்களோட இருக்கயுக்க எனக்குப் பயம் வாறயில்ல''

மணல் பெட்டிக்கு நடந்து சென்றவன், மணலை விரல்களுக்கூடாக சொரிய விட்டான். "கன வேலைகளுக்கு மணல் உதவும்'' என்று சொல்லி விட்டு சவளை எடுத்து ஒரு ஆழமான குழியைத் தோண்டத் தொடங்கினான்."யாராவது இந்தக் குழியில புதைக்கப்படலாம்... ஓம்... யாராவது புதைக்கப்படலாம்.''

ஓ! யாராவது இந்தக் குழியில புதைக்கப்படலாமா?

"சில வேளை புதைக்கப்படாமலும் போகலாம்.'' முன்னர் கூறிய திட்டத்திலிருந்து அவன் பின்வாங்கிக் கொண்டான்.

" அப்பிடியெண்டா என்ன செய்யிறதெண்டு நீங்க தீர்மானிக்கயில்லயா?''

மணல் பெட்டியை விட்டுச் சென்ற அவன் மேசைக்குச் சென்று, அதன்மேலிருந்து கிறேயன்களை வெறுமனே அளைந்துகொண்டிருந்தான்.

" நான் ஒரு பையன்'' என்று ஆறுதலாகச் சொன்னான். எனக்கு ஒரு அப்பா இருக்கிறார். ஒரு அம்மாவும், ஒரு சகோதரியும் இருக்கினம். ஆனா எனக்கு ஒரு அம்மம்மாவும் இருக்கிறா. அவ என்னில நல்ல நேசம். அம்மம்மா எப்பவும் என்னில நேசம். ஆனா அப்பா அப்பிடியில்ல. எல்லா நேரங்களிலயும் அவர் என்னில நேசம் காட்டுறயில்ல.''

" அம்மம்மா உங்களில நேசம் எண்டு உங்களுக்கு நிச்சயமாத் தெரியுது. ஆனா எல்லா நேரங்களிலயும் உங்கட அப்பா உங்களில நேசமா இருக்கிறவரா எண்டு உங்ளுக்கு நிச்சயமா தெரியயில்ல. அப்படித் தானே?'' என்று கேட்டேன்.

இரண்டு கைகளையும் சேர்த்து முறுக்கிக் கொண்டான். "இப்ப என்னில அப்பா கொஞ்சம் கூட நேசம். இப்ப என்னோட அவர் கதைக்கிறவர்.''

"இப்ப அப்பா உங்களில கூட நேசம் எண்டா நினைக்கிறீங்கள்''

இது ஒரு நுணுக்கமான வேளை என்பது எனக்கு உணர்வாகிக் கொண்டிருந்தது. அவனை அளவுக்கு மீறித் தூண்ட முயற்சி செய்தால், முயலொன்று பற்றைக்குள் ஓடி மறைவது போல், அவனுடைய அசைக்க முடியாத அமைதி என்ற பாதுகாப்புப் பற்றைக்குள் அவனை அது ஓடச் செய்துவிடும்.

"முந்திய விட கொஞ்சம் கூட நேசம்'' என்றவன். ஏதோ எரிச்சல் மூட்டப்பட்டவன் போல,இரண்டு கைகளையும் சேர்த்து முறுக்கிக் கொண்டான்.

"என்னட்ட ஒரு நுணுக்குக்காட்டி இருக்குது'' என்றவன். "ஆர்வமூட்டுற பல பொருட்கள அதுக்குள்ளால பார்க்கிறனான். அப்ப அதுகள் தாங்கள் இருக்கிறத விட பெரிசாகத் தெரியும். அப்ப அதுகள நல்லாத் தெரிஞ்சு கொள்ளவும் முடியும். வெறுங்கண்ணால பாக்க ஏலாத சில பொருட்களையும் அதால பாக்க முடியும்'' தனது புத்திசீவித் தனம் என்ற பாதுகாப்பான உலகுக்குள் டிப்ஸ் மீண்டும் புகுந்துகொண்டிருந்தான். நுணுக்குக் காட்டி என்பது ஒரு சடப்பொருள். அது குறித்துப் பயம் கொள்ளவேண்டிய தேவை இல்லை. எந்த உணர்வுகளும் அதைப் பின்னிக்கொண்டிருப்பதில்லை.


" ஆர்வமூட்டுறதா நுணுக்குக்காட்டி இருக்கிற நேரங்களும் இருக்குது'' என்று சொன்னேன். பிறகு அவன் என்ன சொல்லப் போகிறான் என்று காத்திருந்தேன்.

ஒரு கிறேயோன் கட்டியை டிப்ஸ் தூக்கிக்கொண்டான். பொருளெதுவுமில்லாத அடையாளங்களை கடதாசியில் சோம்பலான முறையில் கிறுக்கிக் கொண்டிருந்தான்.

"இதுக்குள்ள நான் பாதுகாப்பா இருக்கிறன். எனக்கு எந்தத் தீங்கும் வாறதுக்கு நீங்க விட மாட்டீங்கள்'' என்றான் இறுதியாக.

" என்னோட இருக்கயுக்குள்ள, நீங்க பாதுகாப்பா இருக்கிறதா நீங்க உணருறீங்களா?'' தனக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிற ஏதோ ஒன்றை நோக்கி என்னை அழைத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தான். நான் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவனுடைய முயற்சிக்குஇடையூறாக இருக்கவோ அல்லது அவன் தயாராக முன் அவனை முன் நோக்கித் தள்ளிவிடவோ கூடாது.

பொம்மை வீட்டை நோக்கிச் சென்ற அவன் உள்ளே இருந்த பொம்மைகளை வெளியே எடுத்துவிட்டுத் தளபாடங்களை ஒழுங்கு செய்தான்.



" அம்மா பூங்காவிலே நடக்கப் போறா...'' என்று சொல்லத் தொடங்கியவன், "...தனிமையா இருக்க அவ விருப்புறா. அதாலதான் அவ பூங்காவில நடந்து போறா. அங்க அவ மரங்களை யும் பூக்களையும் பறவை களையும் பார்க்கிறா. அங்க இருக்கிற குளத்துக்குப் போய் தண்ணியையும் பார்க்கிறா...'' என்றபடி தன்னுடைய கற்பனையான பூங்காவி னூடாகத் தாய்ப் பொம்மையை நகர்த்தினான்.

" அவ ஒரு இருக்கைய கண்டுபிடிச்சு அதில இருக்கிறா அதில இருந்தபடி சூரியன்ர சூட்ட ரசிக்கிறா. சூரியன்ர சூட்ட ரசிக்கிறதில அவவுக்கு சரியான விருப்பம்'' என்றுவிட்டு தாய்ப்பொம்மையை ஒரு கட்டை மீது அமர்த்தி விட்டு பொம்மை வீட்டுக்குத் திரும்பி வந்தான். இப்போ சகோதரிப் பொம்மையை எடுத்துக் கொண்டான்.

"அக்கா பள்ளிக் கூடத்துக்குப் போறா. அவவட பயணப் பைகள அடுக்கி அவவ வீட்டில இருந்து அனுப்பிப் போட்டினம். அவ தூர இடத்துக்குத் தனியப் போகப் போறா'' எனறபடி சகோதரிப் பொம்மையைத் தூக்கினான். விளை யாட்டறையில் தூரமாக இருந்த ஒரு மூலைக்கு நகர்த்தினான். பிறகு பொம்மை வீட்டுக்குத் திரும்பி வந்த அவன் அப்பாப் பொம்மையை "... அவர் வீட்டில தனியாத் தான் இருக்கிறார்.

வாசிச்சுக்கொண்டும் படித்துக்கொண்டும் இருக்கிறார். அவரக் குழப்பக்கூடாது.அவர் உள்ள தனியத்தான் இருக்கிறார். தன்ன யாரும் குழப்புறத அவர் விரும்புறயில்ல. என்ன செய்யுறதெண்டு முடிவுசெய்ய முடியாம,அவர் சுங்கான் பத்த வைக்கிறார். பிறகு கிளம்பிப் போய் சின்ன பையனட அறையின்ர பூட்ட திறக்கிறார்...'' என்று சொல்லிக் கொண்டே அப்பாப் பொம்மையை விரைவாக கீழே வைத்த அவன் சின்னப் பையன் பொம்மையைத் தூக்கிக் கொண்டான்.

"சின்னப்பையன் கதவத் திறந்து கொண்டு வெளியில ஓடிப்போறான். ஏனெண்டா அவன் பூட்டின கதவுகள விரும்பிறயில்ல...'' என்று விட்டு பையன் பொம்மையை வெளியே நகர்த்தினான். ஆனால் வீட்டை விட்டு அதிக தூரம் நகர்த்தவில்லை.

(தொடரும்)

---

*(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

எங்கையோ இருக்கிற பிரித்தானியர்கள் தங்களைப் பாதிக்கிற முடிவுகளை எடுக்கிறதை அனுமதிக்கேலாதெண்டு எதிர்க்கத்தொடங்கின. அமெரிக்கர்கள் அதை முழுமூச்சாய் எதிர்த்ததால குறிப்பிட்ட அந்தச் சட்டம் வாபஸ் பெறப்பட்டாலும், தேயிலை வரி போன்ற வேறு வரியளை லண்டன் விதிச்சிது. உதுக்கு மேல சரிப்பட்டு வராதெண்டு நினைச்ச அமெரிக்கர் 1773 இல செவ்விந்தியர் போல வேசம் போட்டுக்கொண்டு போய் பொஸ்ரனில துறைமுகத்தில நிண்ட பிரிட்டிஷ் அரசுக்குரிய 2 கப்பல்களைத் தாக்கி, அதில இருந்த 10 000 பவுண் பெறுமதியான தேயிலையைக் கடலில கவிட்டுக் கொட்டிட்டினம். அப்படியே தான் 1775 இல அமெரிக்க விடுதலைப்போரும் தொடங்கி 8 வருசத்தில வெற்றியீட்டிச்சிது.

சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்குச் செய்த, செய்து கொண்டிருக்கிற, இன்னும் செய்யத்துணியிற அட்டூழியங்கள் உதாரணம் சொல்லேலாத அளவுக்கு மோசமானவை. முத்திரை வரியை எதிர்த்து சுதந்திரம் அடையலாமெண்டால், நாங்கள் எவ்வளவுக்கு பொறுமை காத்திருக்கிறோம் எண்டு யோசிச்சுப்பாருங்கோவன்! அதால அடக்குமுறையாளர்களை எதிர்கொண்டு வெற்றியீட்ட வேண்டிய கடமையும், உரிமையும் ஒவ்வொரு ஈழத்தமிழனுக்கும் உண்டு. நாளைக்கு வரலாறு எங்கட இனத்தை உதாரணம் சொல்லும் அளவிற்கு விடுதலைக்காக வாழ்ந்து காட்டவேண்டியதாக எங்கட இனம் இருக்கிறதைத்தான் மாவட்டம் தோறும் நடக்கிற எழுச்சித்திருவிழாக்கள் எடுத்துச்சொல்லுதெண்டு நான் நினைக்கிறன். நீங்கள் என்ன சொல்லிறியள்? வாற கிழமை சந்திப்பம் !

---

*(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

உள்ளடங்கலான பாரிய பரப்பளவைக் கண்காணிக்கிறது. சிங்கள இராணுவத்தின் ரி.வி.ரெச படையெடுப்புக்கு இந்திய செய்கோள் உதவி கிடைத்திருப்பதற்கான ஆதாரங்கள் நிறைய உண்டு. டிசெம்பர் 1995இல் ஏவப்பட்ட இதேரகச் செய்கோள் இரவில் படம்பிடிக்கும் திறன் கொண்டது. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துக்கள், ஏவுகணைத் தளங்கள், விமான நிலையங்கள், விமானப் பறப்புக்கள், இராணுவ மையங்கள், தொடர்பாடல் சேவைகள் போன்றவற்றைத் துல்லியமாக அது கண்காணிக்கவல்லது. **IRS-IC** என்ற குறியீடுள்ள டிசெம்பர் 1995இல் ஏவப்பட்ட செய்கோள் இந்தியா ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இராணுவத் தேவைக்கே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. 'றெக்கி எடுப்பதற்காக' இன்னும்பல சிறியரகச் செய்கோள்களை இந்தியா ஏற்றியுள்ளது. மூன்றாம் உலக நாடு என்று பெயரளவில் சொல்லப்படும் இந்த நாடு செய்கோள் தொழில்நுட்பம், அணுத்தலை பொருத்தப்பட்ட தூரவீச்சு ஏவுகணை என்பன வற்றில் முதலாம் உலகநாடு போன்று காட்சி தருகிறது.

1957இல் ஸ்புட்னிக் என்ற செய்கோளை முன்னாள் சோவியத் ஒன்றியம் வண்ணில் ஏவியதோடு மனித வரலாற்றில் விண்வெளி யுகம் அரம்பிக்கிறது. 1961இல் சோவியத் ஒன்றியத்தின் யூரிககாரின் விண்வெளிக்குச் சென்றார். அத்தோடு பனிப்போரின் ஒரு அங்கமாக சோவியத் ஒன்றியம்-அமெரிக்கா ஆகியவற்றின் விண்வெளிப்போட்டி ஆரம்பமாகியது. யார் முதலாவது மனிதனை விண்ணுக்கு அனுப்புவது என்ற பிரகடனப்படுத்தாத போட்டி இப்போது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவுகிறது. 1984இல் சோவியத் ஒன்றியம் ஏவிய விண்கலத்தில் இந்தியரான றாக்கேஷ் ஷர்மா விண்வெளிக்குச் சென்று திரும்பினார். விண்வெளிக்குச் சென்ற முதலாவது இந்தியப் பிரசை என்ற சிறப்பு இவருக்கு உண்டு. அமெரிக்கப் பிரசையான ஒரு இந்தியப்பெண் விண்வெளியில்-உயிர் நீத்துள்ளார். இந்தியாவுக்குச் சொந்தமான செய்கோளில் ஒரு இந்தியர் விண்வெளிக்குச் செல்லும் நாள் வெகு தூரமில்லை.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலனே! இன்றைய மனிதர்களிடம் உண்மை, நேர்மை, மனிதாபிமானம், மனச்சாட்சி உட்பட நற்செயல்கள் யாவும் அரிதாகிவிட்டமைக்கு என்ன காரணம்?*

*புவனா,*
*கிளிநொச்சி.*

இன்றை மனிதர்களிடம் 'மனிதம்' என்ற உணர்வு அருகிக்கொண்டு போவதே காரணம்.

*பாவலனே! இன்றைய அரசியல் நிலவரம் பற்றி கூறுவீரா?*

*புவனா,*
*ஜெயந்திநகர்.*

அரசியல் நிலவரம் ஒரே கலவரமாக இருக்கிறது.

*பாவலா! தற்காப்பு பயிற்சி பற்றிய உமது கருத்து யாது?*

*அ.சுதர்சிகா,*
*உழவனூர்,*
*தருமபுரம்.*

தன்னைக் காக்கத் தெரிந்தவன், தன் இனத்தைக் காக்கத் துணிந்வான் தன் இனத்தைக் காக்கத் துணிந்தவன் தன் தேசத்தையும் காப்பான்.

*பாவலனே! வரும் தேர்தலில் தமிழர் சார் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா?*

*கடலவன்,*
*வருவாய்ப்பகுதி,*
*புளியங்குளம்.*

போட்டியிட்டு நீங்கள் யாருக்கு சனாதிபதியாகப் போகிறீர்கள்?

*பாவலா! உமது வீட்டில் நீர் தான் சமைப்பதாக அறிந்தேன் உண்மையா?*

*தெ.மோகனதாசன்,*
*வருவாய்ப்பகுதி,*
*புளியங்குளம்.*

நீங்கள் விருந்துக்குவரத் தயாரானால் நான் உங்களுக்காகச் சமைக்கத் தயார்.

*பாவலனே! ஒன்றை இழந்தால் இன்னொன்றை அடையலாம் என்பார்கள். ஆனால் எல்லாவற்றையும் இழந்தும் எதையும் அடையவில்லை ஏன்?*

*க.ஜெகன்,*
*தருமபுரம்.*

இழப்பதை மட்டுமல்ல உலகத்தையே வென்றெடுக்கும் ஆற்றல் இலட்சிய வேட்கை உள்ளவனுக்கு மட்டுமேயொழிய பழமொழிகளை நம்பிகாத் திருப்பவனுக்கு அல்ல.

*பாவலனே! உந்துருளியில் செல்பவர்கள் தலைக் கவசம் அணிந்து பயணம் செய்கின்றார்கள். ஆனால் நீர் ஏன் தலைக்கவசம் அணிவதில்லை.*

*மு.றதிகரன்,*
*வருவாய்ப்பகுதி,*
*புளியங்குளம்.*

பாதசாரிகளைத் தலைக்கவசம் பாதுகாக்காது. பாவலன் பாதசாரியே.

*பாவலா! ஏ-9 சாலையில் இடம் பெறும் விபத்துக்களைத் தடுக்க நீர் கூறும் அறிவுரை என்ன?*

*மு.றதிகரன்,*
*வருவாய்ப்பகுதி,*
*புளியங்குளம்.*

பேசாமல் ஏ-9 பாதையை மூடிவிடலாம்.

*பாவலனே! நாம் பிறக்கும் போது எதைக் கொண்டு வந்தோம். எதைக் கொண்டு செல்வோம்?*

*T.சுதா,*
*தருமபுரம்.*

பிறக்கும்போது கொண்டு வந்தது உயிர் ஒன்றை மட்டுமே. போகும்போது கொண்டு செல்வதும் அதைமட்டுமே.

*பாவலனே! விட்டுக் கொடுக்க முடியாத விடயம் எது?*

*அ.ஜன்சன்,*
*புதுக்குடியிருப்பு.*

சுதந்திரம் என்ற நமது பிறப்புரிமையை விட்டுக்கொடுக்கவே முடியாது.

*பாவலா! வாழ்க்கையில் நிரந்தரமானது எது?*

*ஆனந்தி,*
*ஆயப்பகுதி*
*புளியங்குளம்.*

பதவியால் வரும் புகழ் அல்ல. மற்றவருக்குச் செய்யும் உதவியால் கிடைக்கும் நிறைவு.

*பாவலா! மகிந்த ராஜபக்ஷ இனி என்ன செய்யப் போகின்றார்?*

*கு.காதீசன்*
*நுணாவில்,*
*சாவகச்சேரி.*

ஹெல உறுமயக்காரர்களுக்கும் ஜே.வி.பிக்காரர்களுக்கும் ஆமாசாமி போட்டுக்கொண்டு இருக்கப் போகிறார்.

*பாவலா! சந்திரிகா அம்மையார் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்றார் தேர்தல் பிரச்சாரம் செய்கின்றாரா? இல்லையா?*

*கு.தாரணி,*
*நுணாவில்,*
*சாவகச்சேரி.*

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தால் ஹெல உறுமயவிற்கும் ஜே.வி.பிக்கும் ஆதரவாகப் பிரச்சாரம் செய்ததாகிவிடும். அவருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தால் ரணிலுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ததாகி விடும். அதனால்என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப்போய் இருக்கிறார்.



## தெருப்பேச்சு

"என்னடா கொஞ்சநாளா ஆளில நல்ல மாற்றந் தெரியுது.வீட்டில சண்டை சச்சரவுகள் குறைஞ்சுபோச்சோ"

-துப்பரவா இல்ல... பாரன் இப்ப அவாவும் என்னில நல்ல கவனம். முந்திமாதிரி சள்புள்ளெண்டு விழுறதில்ல.

-அதுசரி என்ன விடியக்காத்தால சலவையில நிக்கிறாய்.

-இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே பின்னேரம் வெளியில எங்கயும் போவம் எண்டு... ஒழுங்கு செய்தம்.

- எட புதினமாய்க் கிடக்கு அதுசரி உதென்ன நீ தோய்க்கிற உடுப்புக்குள்ள பாவாடை, சாறியெண்டு கிடக்கு

-ஓ... அது இவாவின்ர ஒவீசுக்கு கட்டிக் கொண்டு போற சாறி. அம்மா... நீங்களும் உடுப்ப மாத்துங்கோவன். குளிக்கத் தண்ணியள்ளித்தாறன்.

- என்னடா உது. உன்ர வேலை... எண்டைக் கெண்டாலும் வீட்டில உன்ர சாரத்தக்கூட தோய்க்கநான் விட்டதில்ல இப்ப மனிசிக்கு உடுப்புத் தோய்க்கிறாய்.சீச்சீ...

-அம்மா... அவள் எனக்குஞ் சேத்துத்தான் இடியப்பமவிக்கிறாள். வீட்டுக்கும் உழைக்க வேலைக்கும் வாறாள். நான் அவளுக்குஞ் சேர்த்து உடுப்புத் தோய்கிறன். இதில என்ன?

-எண்டாலும் ஆம்பிளை... பெண்டுகளுக்குத் துணி தோய்க்கிறது சரியோ.

-அம்மா... பெண் விடுதலைக்கு முதலெதிரியள் உன்னைப்போல பொம்பிளையள்தான். நாங்கள் புரிந்துணர்வோட தான் இருக்கிறம். என்ன குளிக்கப்போறியோ இல்லாட்டி வீட்டபோ...

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 137



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.


## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 137

.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

பெயர் : .....................................................
முகவரி : .....................................................
.....................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 136



**திருமதி.மதியழகன்,**
**ம.த. அனுவலகம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*அதோ அந்த கல்குவியல் அழகாக நாம் வாழ்ந்தவீடு*
*இதோ இந்த மண்மேடு நிலாச்சோறு நாம் உண்டமுற்றம்*
*கம்பிவேலிக்குள் பார்க்கமுடியாமல் பாதுகாப்பாய் எம்நிலம்*
*பாதுகாப்பு வலயமாம் இன்று பரிதவிக்கிறோம் நாங்கள்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இயற்கையின் சீற்றத்தால் எஞ்சியது-நீதான்*
*நிலையில்லா நிழல் யுத்தத்தை கண்டு அஞ்சாதே*
*எழுச்சி கொள்ளும் எம் இனத்துடன்-நாமும்*
*விடியலின் வரவை நோக்கி விரைந்திடுவோம்.*

திருமதி. சா.மர்க் அன்ரனி
தேவிபுரம்.

*"நீர்" உறவுகளை, உடமைகளை காவிப் போயிற்று*
*கண்ணீரோ வற்றிப்போயிற்று*
*கரை(லை)யாத மனதோடு உறுதிகொள்கிறோம்-எம்*
*'தணியாத தாகம் தமிழீழத் தாகம்' என்று.*

சு.ராஜசெல்வி,
செந்திரேசா பெண்கள் கல்லூரி.

*சிதறிப்போயின உறவுகள்*
*சிதைந்து போயின உடமைகள்*
*சிந்தை கலங்காது சீரிய வாழ்வு தேடி*
*ஈழவிடியலுக்காய் காத்திருக்கிறோம்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*இழப்புக்களை எண்ணிக்கலங்கும்*
*ஈழ உறவே அடுத்துவரும்*
*எழுச்சியில் கலந்தால்-மனசில்*
*எழுச்சி வரும் இது உண்மை.*

க.இரத்தினசிங்கம்,
226.ஜெயந்திநகர், கிளிநொச்சி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு



# கண்ணீர்..


கண்ணீரின் பயணம்
இன்னமும் ஓயாது நீள்கிறது
அமெரிக்காவின் கறுப்பினத்தாயே
உனது கருமுகத்தின் கண்ணீர்
வீழ்ச்சி என் தாயை நினைவூட்டுகிறது
ஏகாதிபத்தியப் பண்ணைகளில்
எண்ணைப் பிசுக்கேறியவுனது மேனியில்
வியர்வையோடு சேர்ந்தோடிய
குருதியும் கண்ணீருமான
வாழ்வின் வியாகுலப் பாடல்
இப்போதும் ஒலிக்கிறது.

உனது வரலாற்றின் கண்ணீர்
எவ்வளவு கொடூரமானது
வலிமையானது
எழுச்சியானது.
A-9 சாலையைப் போல்
நீளுமுனது கரு நிறக்
கண்ணீரின் வரலாறும்
மட்டு வாவியின் கரு நீர்போல்
உப்புக் கரிக்குமுனது
வியர்வையாறும்

நெடும்பனையின் வலிமையாக
இலங்குமுனது இருப்பின் நீட்சியாய்
அருகணைக்கிறது தமிழனோடு
டொலரினும் பெறுமதியிலான
வீரியமிக்க
எனது சனங்களின்
ஆதரவை அனுப்புகிறேன் தாயே.

சுனாமிக்கீடான
எம் தாயின் கண்ணீரும்
கத்ரினாவுக்கீடான
உனது கண்ணீரும்
அதி மானுட இதயத்தில் இடிக்கும் வரை
உன்னையும், என்னையும்
100% மனிதர்களாக புரிந்து கொள்ள
இன்னமும் எஞ்சியிருக்கும் சாட்சியம்
கண்ணீரும், குருதியும்
ஒப்பாரியும் தான் தாயே...

-அநாமிகன்-






## ஈழநாதத்தின்
## விளம்பரப்பணிமனைகள்

யாழ்சாலை, கிளிநொச்சி.
தொ.பே:021228 3948

பரந்தன் சாலை,
புதுக்குடியிருப்பு.

வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021-222 7917



## சொலெக்ஸ்
## SOLAX OPTICAL

இலவசமாக கண்களைப்பரிசோதித்து நவீன பிறேம்களில்
கண்ணாடிகளைப்பெற்றுக்கொள்ளவும், காலநிலைக்கு ஏற்ப கூடிய
சண் கிளாஸ் வகைகளை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்
அதிசிறந்த வகையான சங்குப்பற்களைக்கட்டிக்கொள்ளவும்
மிதப்புப்பற்களுக்கு கிளிப்போட்டுக்கொள்ளவும்,

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் **சொலெக்ஸ்**

கிளை:வண்ண மாட லேன்,
நெல்லியடி.

இல–516,ஆஸ்பத்திரி வீதி,
(OPD முன்பாக)
யாழ்ப்பாணம்.
தொ.பே–021–222 7631





உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு
புடவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.





EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...
யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...
அனுபவம் வாய்ந்த நட்புறவு...
நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...

EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@expoavi.com/reservations@expoavi.com

(C-11725)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.